
# திருக்கோயில்

ரூ. 1 நவம்பர் 1975



# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!




திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002



முகப்பு: திருமுருகன்
திருப்பரங்குன்றம்

மாலை : 18 இராக்கத—ஐப்பசி நவம்பர் — 1975 மணி: 2

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்,
*அறநிலைய ஆட்சித் துறை,*
சென்னை—*600 034*

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.


எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12- தனி இதழ் ரூ. 1.

## பொருளடக்கம்

1. நூல் வெளியீட்டு விழாச் சிறப்புரை
—முதல்வர் டாக்டர் கலைஞர்
2. திருஅண்ணாமலையார் திருக்கோயில் திருப்பணி
—ஜி. கிருஷ்ணராஜ், திருவண்ணாமலை
3. சிந்தாமணிச் செல்வர் சிறப்புற வாழ்க
4. இராமலிங்க அடிகளும், மறைமலை அடிகளும்
5. அம்பிகையின் அழகு வெள்ளம்
—மீனாட்சி சுந்தரம்
6. சிதம்பரம்
—ஆசிரியர்
7. சகல கலாவல்லி மாலை
—ஆசிரியர்
8. திருப்புலியூர் மாயப்பிரான்
—திரு. ந. சுப்பு ரெட்டியார்
9. வாலி வழக்கு
—திரு. புரிசை சு. முருகேச முதலியார்
10. நம்மாழ்வார் கவிதை நலம்
—புலவர் திரு சி. முத்துப்பிள்ளை
11. திருப்பொன்னூஞ்சல்
—சிவனருள் சேதுராம்
12. திருப்பதிகளின் திருப்பெயர்த் திருத்தங்கள்
—மகாவித்துவான், பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்
13. மூன்று பிழைகள்
—ஆசிரியர்
14. அயோத்தி மாநகரம்
தமிழ் விரகன்

ஆசிரியர் :
**ந. ரா. முருகவேள்,**
எம்.ஏ., எம்.ஓ.எல்.,



உதவி ஆசிரியர் :
**கே. எஸ். ஜெகன்னாதன்**

02.21, 458 N75.18.2
158608

# நூல் வெளியீட்டு விழாச் சிறப்புரை

## முதல்வர் டாக்டர் கலைஞர்

இன்று சமய நூல் ஒன்றினை வெளியிடுகின்ற இந்த விழாவில், சில சமயச் சொற்பொழிவுகளையும் நாம் கேட்டோம். குறிப்பாக நண்பர் சாமிநாதன் அவர்கள் ஒரு கணம் ஒரு சமயச் சொற்பொழிவே ஆற்றினார். மதுரையில் மாண்புமிகு கண்ணப்பர் மருத்துவமனை ஒன்று இருப்பதாகச் சொல்லிவிட்டு — அனைவரும் அதைத் திருத்த முற்பட்டபோது, தான் தவறு செய்ததை ஒத்துக்கொள்ளாமல், நான் கண்ணப்பர் மருத்துவ மனை என்றுதான் சொன்னேன் ; அது கண்ணப்ப நாயனாரைத்தான் குறிப்பிடும் என்று சொல்லி, 'மாண்புமிகு' என்று சொன்னதையே 'சமயத்திற்கு' ஏற்ப மறைத்தே விட்டார். ஆகவே அதுவும் ஒரு வகையில் 'சமய'ச் சொற்பொழிவுதான்!

சமயம் வாழ்க்கை நெறி என்றும், ஒரு சமுதாயத்தின் நிலையை வரைமுறைப் படுத்துவதற்குப் பயன்படுகின்ற ஒன்று என்றும் விழாத் தலைமை ஏற்றிருக்கின்ற நாவலர் அவர்களும், இந்த நூலாசிரியர் தவத்திரு அடிகளார் அவர்களும், நூல் பற்றிப் பாராட்டுரை வழங்கியவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது ; பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்தில் பயணிகள் விடுதியில் நான் தங்கியிருந்தபோது, பக்கத்து அறையில் தங்கியிருந்த அடிகளார் அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம் பேசுகின்ற வாய்ப்பு ஏற்பட்டது. அந்தச்சந்திப்பில், சமயம் பற்றியும், தமிழர்களுடைய கோட்பாடுகள், நெறி முறைகள் காலக்கட்டத்தில் எந்தெந்த வகையில் எல்லாம் தாழ்வுற்று இத்தகைய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது குறித்தும், இருவரும் விவாதித்தோம். அது பயனுள்ள நல்ல உரையாடலாக அமைந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றைக்கு இந்த நூல் வெளிவருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இப்படிச் சொல்வதின் வாயிலாக நான் ஏதோ அடிகளாருக்கு அறிவுரைகள் வழங்கி, அவைகளை எல்லாம் இன்று நூலாக அவர் தந்து இருக்கிறார் என்று யாரும் தவறாகப் பொருள் கொள்ளக் கூடாது. அன்று என்னிடம் எப்படிப் பட்ட ஒளிமிக்க கருத்துக்களை அடிகளார் அவர்கள் வாரி வழங்கினார்களோ, அந்தக் கருத்துக்களைத்தான் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற சொற்பொழிவில் அவர்கள் வழங்கி, அது ஒரு அரிய நூலாக இன்று வெளியிடப் படுகிறது.

மனிதர்கள் சேர்ந்து வாழ்கின்ற ஒரு கூட்டம் சமுதாயம் எனப்படுகிறது. அந்தச் சமுதாயத்திற்குச் சமயம் தேவைப்படுகிறது என்பது நம்முடைய அடிகளார் அவர்கள் இந்த நூலில் பக்கத்திற்குப் பக்கம் —வரிக்கு வரி—எழுத்துக்கு எழுத்து அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்கிற கருத்து.

### அன்பியல் தோன்றினால் ஏற்போம் :

ஒரு இடத்தில் அவர்கள், ''சமயம் ஒரு தத்துவம் மாத்திரமல்ல; கொள்கை மாத்திரம் அல்ல; அதுவே ஒரு வாழ்க்கை முறை ; வாழ்க்கையின் அனைத்துத் துறையிலும் சமயம் தழுவிக் கலக்க வேண்டும்; அன்றே அறியாமை அகலும்; வேற்றுமை விலகும் ; அன்பியல் தோன்றும்; அருள் மணம் கமழும்'' என்று குறிப்பிடுகின்றார். இதிலே எனக்கும் அடிகளாருக்கும் இருக்கிற சிறிய வேறுபாடு ஒன்றே ஒன்றுதான் :

அன்பியல் தோன்றினால், அருள் மணம் கமழ்ந்தால், வேற்றுமை விலகினால், அதுதான் சமயம் என்றால், அந்தச் சமயத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

இதுதான் சமயம்; இந்தச் சமயத்தினாலே தான் அன்பியல் தோன்றும்; அந்தச் சமயத்தி

---

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் நிகழ்த்திய ''திருமதி சொர்ணம்மாள் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு''களின் தொகுப்பு ஆகிய **''நமது நிலையில் சமயம், சமுதாயம்''** என்னும் நூல் வெளியீட்டு விழா, மாண்புமிகு **டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், M.A.,** அவர்கள் தலைமையில், சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை அரங்கில், 28—10—1975 அன்று நடைபெற்றது. நூலின் முதற்படியினை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **மு. கண்ணப்பன்,** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். நூலை வெளியிட்டு நமது தமிழக முதல்வர் **டாக்டர் கலைஞர்** அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை, இங்குப் பெரிதும் போற்றி எடுத்து வெளியிடப் பெறுகின்றது. —**ஆசிரியர்**

லேதான் அருள் மணம் கமழும்; இந்தச் சமயத்திலேதான் வேற்றுமை விலகும் என்று சொன்னால் அங்கே நாங்கள் சற்று வேறுபடுகின்றோம். இந்த வேறுபாட்டைத் தவிர எனக்கும் அடிகளாருக்கும் வேறு எந்தவிதமான வேறுபாடும் கிடையாது.

அடிகளார் அவர்களே குறிப்பிட்டார் : ''உடன்பாட்டோடு, எந்தவிதமான முரண்பாடும் இல்லாமல், இந்த விழாவில் பேசியவர்கள் அத்தனை பேரும் பேசினார்கள்'' என்று. ஆகவே அந்த வேறுபாட்டையும் எடுத்துச் சொல்ல வேண்டாமென்று, அடிகளார் அவருக்கே உரிய திறமையோடு அணை போட்டுக் கொண்டார்.

நான் இப்போது எடுத்துச் சொல்வது கூட பெரிய வேறுபாடு அல்ல; இதைக்கூட அவர்கள் ஒத்துக் கொள்ளத்தான் செய்வார்கள் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் இன்றைக்கு உலகத்திலே எத்தனையோ சமயங்கள் அல்லது மதங்கள் இருக்கின்றன. எல்லாச் சமயங்களும் அல்லது எல்லா மதங்களும் ஒரு மையக் கருத்தை உள்ளடக்கித்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இருக்கின்ற வேதனை — ஒன்றுக்கொன்று போட்டி போடுவதும் — ஒரு சமயத்தை மற்றொரு சமயம் குறை கூறுவதும் — ஒரு மதத்தை மற்றொரு மதம் கேலி பேசுவதும் உலகத்தில் வளர்ந்திருக்கிறது.

இதனை மாற்றி அமைக்கின்ற வகையில் தான், அடிகளாரைப் போன்ற நல்லவர்கள் — எதையும் துணிந்து எடுத்துச் சொல்லக் கூடிய கருத்தாழம் மிக்கவர்கள் தோன்றிட வேண்டும்; அப்படி நம்முடைய சமுதாயத்தில் — உலக அரங்கில் பலபேர் தொடர்ந்து தோன்றி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சீரிய செழுமிய கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள்.

அந்த வகையில்தான், அடிகளார் அவர்களும் இந்த நூலில் பெரும்பாலும் ஆழமான கருத்துக்களை வலியுறுத்துகின்ற நேரத்தில் அறிவுலகத்திற்குக்கிஞ்சிற்றும்முரண்பாடு ஏற்படாத வகையில் கருத்துக்களை எடுத்தாளுகின்ற ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள்.

நாவலர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அற்புதங்களை, அதிசயங்களை, நம்ப முடியாத கருத்துக்களை எல்லாம் நீங்கள் ஏற்றுக் கொள்வதில்லை ; ஆகவே நாங்கள் உங்கள் பக்கம்தான் என்று சொன்னார். அது பல இடங்களில் அடிகளார் அவர்களுடைய எழுத்தில் இங்கே காணப்படுவதை நான் எண்ணியெண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒன்றே ஒன்று சொல்ல வேண்டுமானால், அடிகளார் அவர்கள் சமயத்தையே சிந்திக்கிறார்கள்; நாங்கள் சமயத்தைப் பற்றிச் சிந்திக்கின்றோம்.

## காலத்துக்கேற்ற மாறுதல்களைக் கைக்கொள்வோம்

அவர் வேண்டுமானால் 'நீங்கள்சமயத்தைப் ''பற்றிச்'' சிந்திக்கிறீர்கள்' என்று மடக்கக் கூடும். அப்படி மடக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டு சொல்வேன் ; அடிகளார் அவர்களைப் போன்றோர்; சமயத்தையே சிந்திக்கிறார்கள் ; அப்படிச் சிந்திக்கின்ற காரணத்தால் சமயத்தை ஏற்றால்தான் அன்பு பிறக்கும் ; அருள் மணம் கமழும் என்று போதிக்கின்ற கடமையைச் செய்கிறார்கள்.

நாங்கள் சமயத்தைப் பற்றிச் சிந்திக்கிறோம். ஏனென்றால் இங்கே பேசிய நண்பர் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் இரத்தினசபாபதி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போலக் காலத்திற்கேற்பச் சில மாறுதல்களை நாம் இன்றைக்கு கைக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட கால மாறுதல்களுக்குச் சமயம் இடையூறாக இருக்குமானால், அந்த நேரங்களில் எல்லாம் எதை நாம் முன் வைத்துப் பார்ப்பது என்கிற கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டிய கட்டாயத்திற்கு வருகிறோம்.

அப்படிப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் நேரத்தில் கொஞ்சம் சமயத்தைக் கூட ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு மனித சமுதாயத்திற்குப் பாடுபட வேண்டும் என்பதைத்தான் முதலாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை அடிகளார் அவர்களே ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். அடிகளார் அவர்கள் அந்தக் கருத்துக்கூட சமய நெறியிலிருந்து முகிழ்க்கக்கூடும் என்று சொல்வார்கள் ; நான் அந்த விவாதத்திலே இப்போது இறங்கிட விரும்பவில்லை.

## ஒன்றே குலம் ஒருவனே தேவன் !

எங்களை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் திருமூலரின் வாக்கினை அடிக்கடி நினைவுபடுத்துவார். அதாவது ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்று கூறுவார். இங்கே அடிகளார் அவர்களும் அந்தக் கருத்தை ஒப்புக் கொள்கிற வகையில், பல தெய்வங்களை வழிபடும் வழக்கம் வராமல் பாதுகாப்பது அவசியம்; சிறு தெய்வ வழிபாட்டை அறவே விலக்கல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இது நமக்கெல்லாம் ஏற்புடைய ஒரு கருத்தேயாகும்.

இன்றைக்கு வழிபடும் முறை, ஒரு வாணிப முறையாகி விட்டதை எந்த அளவிற்கு மனம் நொந்து—வெந்து தவத்திரு அடிகளார் இந்த நூலில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும்.

அண்மையில் நான் பேசுகின்ற நேரத்தில் கூட ஒன்றைக்குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது மதவாதிகளே கூட — மதத் தலைவர்களே கூட ஒத்துக் கொள்ள இயலாத —இப்படியும் இருக்குமா என்று வியப்படைகின்ற நிகழ்ச்சிகள் பல நாட்டிலே நாள்தோறும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. திடீரென்று பத்திரிகையில் சிலுவையோடு பிறந்த குழந்தை; அது ஏசுநாதரின் மறு அவதாரம் என்று செய்தி வருகிறது. இரண்டு வாரங்களுக்கு அந்த வாணிபம் நடைபெற்று மக்கள் ஏமாறுகிறார்கள் ; மற்றொரு

செய்தி : கர்நாடக மாநிலத்தில் ஐந்து வயதுப் பாலகன் ஒருவன் நெற்றியிலிருந்து விபூதி கொட்டிக் கொண்டே இருக்கிறது; செவியிலிருந்து தேன் வழிந்து கொண்டேயிருக்கிறது; இதற்கு ஏடுகளில் மிகப் பெரிய விளம்பரம் தருகிறார்கள்; பத்து நாள் பரபரப்போடு அடங்கி விடுகிறது.

நம்முடைய அறிவார்ந்த பருவத்திலிருந்து எண்ணிப் பார்த்தால் இதுவரையில் இது போன்ற எத்தனை மாயாஜாலங்கள் நாட்டில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் இரண்டு மாத காலம் பரபரப்போடு விளம்பரப்படுத்தப்பட்டு, அதற்குப் பிறகு திடீரென்று அவைகள் எங்கே மாயமாக மறைந்தது என்று தெரியாமல், மெல்ல மெல்ல அவைகளைப் பற்றிய செய்திகளை மக்கள் மறந்துவிடக் கூடிய நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இங்கே ஆளும் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் இருந்தாலும், ஒன்றைச் சொல்லுகின்றேன்.

இதுபோன்ற மாயாஜால வித்தைக்காரர்களை—வழிபாட்டு முறையை வாணிப முறையாக மாற்றிக் கொண்டிருப்பவர்களை—கடத்தல்காரர்களைப் பிடிப்பதைப் போல— கள்ளக் கடத்தல்காரர்களைப் போலப் பிடிப்பதற்கு இன்றைக்கிருக்கிற 'போசா' 'மிசா' போன்ற சட்டங்கள் பயன்பட வேண்டும் என்று, நான் என்னுடைய கட்சியின் சார்பாக அல்ல ; தவத்திரு அடிகளார் அவர்களின் தெய்வீகப் பேரவையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் தெய்வீகப் பேரவையைக் காப்பாற்ற முடியும். ஏனென்றால் நம்முடைய சமுதாயத்தைக் காட்டுமிராண்டிகள் என்று பிற நாட்டார் கருதுகின்ற அளவிற்குச் செயல்கள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது மத்திய அரசாங்கத்தின் கவனம் வரை சென்றாக வேண்டும்.

இவைகள் நாட்டில் நாள்தோறும் அதிகமாகப் பெருகி வருகின்றன. இவர்களால்தான் தெய்வீகத் தன்மையைப் பற்றி அல்லது சமய நெறி—வாழ்க்கை நெறி இவைகளைப் பற்றி அல்லது கடவுள் தன்மை பற்றி அந்தந்த மதத்திற்கு உரிய தலைவர்கள் எடுத்துச் சொல்லும் நேரத்தில், அனைத்தையும் தாக்கும் சூழ்நிலை எதிர்ப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பெரியார் அவர்களுக்குக் கூட, கடவுள் இல்லவே இல்லை என்று சொல்லக்கூடிய கட்டாயம் ஏன் வந்தது என்றால், அப்படிச் சொன்னாலாவது ஒரு சமரசத்திற்கு வந்து, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற முடிவிற்கு வருவார்கள் என்ற எண்ணத்தால் இருக்கலாம்.

அந்த தேவன் கூட ஆணா? பெண்ணா? ஆண்டவன்—இறைவன் என்று சொல்கிற நேரத்தில் ஆண் ஆகிறார். தெய்வம் என்று சொல்கிற நேரத்தில் ஆணும்அல்ல; பெண்ணும் அல்ல; பொதுவாகிறார்.

கடவுள் என்று சொல்கிற நேரத்தில் கூட, தமிழ் மொழியின் அழகை அங்கே பார்க்கலாம். கடவுள் என்ற சொல்லின் முதல் இரண்டு எழுத்துக்களான ''கட'' என்பதில் இரண்டும் வல்லினம்; ''வுள்'' என்பதில் இரண்டு எழுத்துக்களும் இடையினம் ; இடையினம் பெண்களுக்கே உரியது. ஆகவே கடவுள் என்பதில் ஆணும் பெண்ணும் சேர்ந்திருக்கிற அழகைப் பார்க்கிறோம்.

## இன உணர்ச்சி என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துபவர் :

ஆக, இறைவனைக்கூட நாம் ஆணாகவோ, பெண்ணாகவோ கூட கற்பிக்கக் கூடாது என்பது என்னுடைய எண்ணமாகும். அடிகளார் அவர்கள் அடுத்தடுத்து வெளியிடுகின்ற நூலில் இந்தக் கருத்தை மக்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிய வைப்பார் என்று நம்புகின்றேன். இறைவனை ஆண் என்று சொல்லிவிட்டால், பெண்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்களா? அடிகளார் துறவி, பரவாயில்லை ; நாம் குடும்பத்தவர்கள் ; ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகக் கடவுள் இருந்திட வேண்டும்; அதுவும் ஒன்றாக இருந்திட வேண்டும்.

அந்த ஒன்றும்—மனச்சாட்சியாக —தூய்மையாக—அறிவாக—அன்பாக — ஆற்றலாக மற்றவர்களுக்குக் காட்டுகின்ற இரக்கமாக இருந்திட வேண்டும்.

இந்த நூலிலே தேவாரத்தை—திருவாசகத்தைச் சுட்டிக் காட்டுகின்ற பல அரிய பாடல்கள் இருந்தாலும், அவைகளுக்கிடையே வள்ளுவருக்கும்—லெனினுக்கும்—காரல்மார்க்சுக்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. சமுதாய சீர்திருத்த—புரட்சிகரமான கருத்துக்களை உலகத்தில் எடுத்துச் சொன்னவர்களுக்கெல்லாம் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இது இந்த நாட்டிற்கு—இந்த நேரத்திற்குத் தேவையான ஒரு அரிய நூல்.

அடிகளார் அவர்கள், தமிழ் இனப்பற்றைத் தமிழகத்தில் உருவாக்கி வருகின்ற ஒரு பெரும் போர் வாளாகத் திகழ்கிறார். நான் போர் வாள் என்று சொல்வது அவருடைய சாதுத் தன்மைக்குப் பிடித்தமில்லாததாக இருக்கலாம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'கொலை வாளினை எடடா, மிகக் கொடியோர் செயல் அறவே' என்று கூறியது, கொடியவர்களுடைய செயலை அறுப்பதற்குப் பயன்படுகின்ற வாள்; அது கொடுமையான வாள் அல்ல. அந்த வகையில் இன்றைக்கு இன உணர்வு என்ற விழிப்புணர்ச்சியைத் தமிழகத்தில் ஏற்படுத்தி வருகிற பெருந்தகையாளர்களில் தலைசிறந்தவர்களில் ஒருவராக அடிகளார் விளங்குகிறார்கள். அவருடைய ஆற்றலும், அறிவுத் திறனும், தமிழ்ச் செழிப்பையும் இந்த நூலில் காண முடிகிறது. அவருடைய தொண்டு பல்லாண்டுக் காலம் தமிழினத்திற்கும், இந்தியத் துணைக் கண்டத்திற்கும் கிடைக்க நீண்ட காலம் வாழ வேண்டுமென்று வாழ்த்தி, இப்படிப்பட்ட அருமையான பணிகளைத் தமிழ்ச் சமுதாயத்திற்குத் தொடர்ந்து அவர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

# திரு அண்ணாமலையார் திருக்கோயில் திருப்பணி



திரு ஜி. கிருஷ்ணராஜ், திருவண்ணாமலை

மணிகொண்ட நெடுங்கடல் புடை சூழ்ந்த இவ்வுலகில், பாரத உபகண்டத்தின் தென்பால் அமைந்துள்ள, தேன் தமிழ் நாட்டின்கண் விளங்கும் ஐம்பெரும் தலங்களில் தலை சிறந்ததாகப் பரிமளிக்கும் திருவண்ணாமலையில், அருள்மிகு உண்ணாமுலையம்மை உடனுறை அண்ணாமலை அண்ணல் (அருணாசலேசுவரர்) திருக்கோயில் கொண்டு, பக்த சிரோ மணிகளுக்கு இரங்கி, அருள்மழை பொழிந்து வருகின்றார்.

இவ்வரலாற்றுச் சிறப்புடைய நகரில், அடிக்கு ஆயிரத்தெட்டு சிவலிங்கங்கள் மறைந்துள்ளனவென்பதும், இத்தலத்தை நினைத்தாலும் பிறவிப் பிணி தீருமென்பதும், வீடு பேறு எளிதின் எய்தும் என்பதும் இதிகாசமாகும். அரி அயனின் செருக்கடக்கி, ஜோதி வடிவமாய்க் காட்சி அளித்தும்; அதன் நினைவாக ஆண்டு தோறும் கார்த்திகைத் திங்களில் கார்த்திகைத் திருநாளில், திருமலைச் சிகரத்தில் சோதியாய் நின்றுபல லட்சக் கணக்கான பக்தர்களுக்குத் தரிசனம் தந்து திருவருள் புரிகின்றார்! உண்ணாமுலை உமையாளொடும் உடன் ஆகிய திரு அண்ணாமலையார், இறைவிக்கு இடப் பாகம் அளித்ததும், வல்லாள மகாராசனுக்குக் குழந்தையாக அவதரித்து அருள் புரிந்ததும்; அருணகிரிநாதர் தோன்றி, புகழ்பெற்ற திருப்புகழைத் திருவாய் மலர்ந்தருளியதும்; குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர் முதலிய அருளாளர்கள் வாழ்ந்ததும்; ரமண முனிவர் கடும் தவம் புரிந்ததும் ; இத்திருத்தலத்தில்தான் என்றால், இப்புண்ணிய பூமியின் மகிமையை இயம்புதல் எளிதோ ! மேலும், இவ்வருணையம் பதியில்தான், அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் முதலிய பல தெய்வீகப் புலவர்கள் எழுந்தருளிப் பல தெய்வீகத் திருப்பதிகங்களை நெஞ்சுருகப் பாடியுள்ளனர்.

இந்த அண்ணாமலையின் அடிவாரத்தில்தான், ஏறத்தாழ 25 ஏக்கர் நிலப்பரப்பில் எழில் மிக்க அருணாசலேசுவரர்—அபீதகுசாம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம், அழகான ஐந்து பிராகாரங்களை உடையது. கருப்பக்கிரகத்தில், காண்பதற்கரிய சுயம்புவான அதிசயிக்கத்தக்க சிவலிங்கம் தோன்றி உள்ளது. மேலும் இக்கோயில் வெளிப்புறம் சுற்றியுள்ள கோட்டை மதில் போன்ற கற்சுவர்களையும், நாற்புறமும் வானம் முட்டும் நான்கு கோபுரங்களையும் கொண்டதாகும். இதில் கிழக்குப்புற வாயிலாக உள்ள 217 அடி உயரமும், 11 அங்கணங்களையும் கொண்ட—பிரம்மாண்டமான இராசகோபுரம் தான், உலகிலேயே மாபெரும் கோபுரமாகும். சிவகங்கை, பிரம்ம தீர்த்தம் என்னும் அருமையான இரு புண்ணிய தீர்த்தங்களை உட்புறத்தில் கொண்ட இவ்வாலயத்தில் உள்ள, ''தமிழ், சம்ஸ்கிருதம், கன்னடம்'' ஆகிய மொழிகளில் அமைந்த புராதனக் கல்வெட்டுச் சாசனங்களும், சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த விக்கிரகங்களும், அற்புதமான கலைச் செல்வங்களும், ஒரு அறிவுக் களஞ்சியமாக விளங்குகின்றன. இக்கோயிலில் காட்சியளிக்கும், செங்கழுநீர்ப் பிள்ளையார், திருநடனம் புரியும் தவளவண்ணர் திருவுருவங்கள் பார்ப்பதற்குப் பிரமிக்கத் தக்கனவாய் உள்ளன. மற்றும், இராசகோபுர வாயிலில் வீற்றிருக்கும் 'செல்வகணபதி' சக்தி வாய்ந்தவராவார்.

இவ்வளவு பெருங்கீர்த்தி பெற்ற ஆலயத்திற்கு 12—6—1903-ல் திருப்பணியும், அஷ்டபந்தன கும்பாபிஷேக விழாவும் நடந்தன. மறுபடியும், ரூ. 40,000/- செலவில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக விழா 4—6—1944-ல் நம் பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் அவர்களின் மறைந்த தந்தையார் உயர்திரு பூ. ப. உத்தண்டிப்பிள்ளை அவர்கள் அறங்காவலர் குழுத் தலைவராக இருந்த காலத்தில் அவர்களின் சிறந்த பெருமுயற்சியால் செய்து முடிக்கப்பட்டது. பிறகு, மறைந்த அறங்காவலர் குழுத் தலைவர் திரு பொ. பழனி முதலியார் அவர்களின் பெரும் முயற்சியினால், 1969-ஆம் ஆண்டில் 40 லட்சம் ரூபாய்ச் செலவில் ஆலயத் திருப்பணி செய்து, மகா கும்பாபிஷேகம் செய்யத் திட்டம் தீட்டி, பூர்வாங்க வேலைகள் துவங்கப்பட்டன. பின், தற்போதுள்ள அறங்காவலர் குழுத் தலைவர் திரு. டி. வி. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள், கடல் கடந்து மலேசிய நாடுகளுக்குச் சென்று நிதி திரட்டியதோடு இந்நாட்டிலும் பல செல்வந்தர்களிடம் பக்குவமாகத் திருப்பணிக்குக் காணிக்கைகள் ஏராளமாகச் சேர்த்துள்ளார்கள். மேலும், அவர் அண்ணாமலையாருக்குச் சுமார் 20 ஆண்டுகளாக அறங்காவலராகப் பணிபுரிந்து வந்தமையால், அவர் தம் திறமைமிக்க, மேற்பார்வையில் திருப்பணி வேலைகள் துரிதமாக நடந்தேறி வருகின்றன. இப்போது, கலைச் சிற்பங்கள் பொருந்திய கோபுர வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன.

மீதமுள்ள திருமஞ்சன கோபுரம், அம்மணியம்மன் கோபுரம் ஆகியவற்றின் சீர்திருத்தப்பணிகளை இக்கோவிலுக்கு நீண்ட நாட்களாகத் தொண்டு புரிந்துவரும் உயர் நாடார் வகுப்பினர் எடுத்துச் செய்யக் கலந்தாலோசித்து வருகிறார்கள். மற்றும், சுவாமி, அம்மன் சந்நிதிகளைப் புதுப்பித்து, மூர்த்தங்களுக்கு அட்டபந்தன மருந்து சாத்துபடி செய்து, மகா கும்பாபிஷேகம் செய்யும் வகையில் சுமார் 6 லட்சம் ரூபாய் செலவாகும். இதை நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் திருப்பணி செய்து முடித்துத் தருவதற்கு மனமுவந்து ஒப்புக்கொண்டு வேலைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

அண்ணாமலையார் ஆலயத்திற்கு நகரத்தார் பெருமக்கள் நீண்ட நெடுங்காலமாக, தாராளமாக, தாமாகவே முன்வந்து, உதவி செய்துள்ளார்கள். அதிலும் குறிப்பாக முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர், இராவ்பகதூர் திரு. வீரப்பச் செட்டியார் அவர்கள் சீரிய முயற்சியால் இத்திருக்கோயிலுக்கு நகரத்தார்கள் சார்பாக ஏற்கனவே திருப்பணிகள் செய்தும், ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வியக்கத்தக்க வெள்ளி வாகனங்களையும், வைர நகைகளையும் வாரித் தந்துள்ளனர். ஆக இவ்வாலயத்தின் தெய்வீகப் புகழ்மணம் திக்கெட்டும் கமழச் செய்த நாட்டுக் கோட்டைக் கொடை வள்ளல்களை நாம் என்றென்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் திருப்பணிக் குழுத் தலைவர் திரு எஸ். என். ஏ. எஸ் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அரும்பணியும் மிகமிகப் போற்றத் தக்கதாகும்.

மேலும், மான்யமாகவும், ஆலய உபரி நிதியிலிருந்தும், 15 லட்சம் ரூபாய் மனமுவந்து வழங்கியுள்ள நம் தமிழக அரசுக்கு, நாம் நம் நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ். அவர்கள் இந்த ஆலயம் சம்பந்தமாக அவ்வப்போது பெரும் சிரத்தையுடன், நிதி உதவி அளித்துவருவது பாராட்டத்தக்கது. அடுத்த ஆண்டு ஜனவரித் திங்களுக்குள் அநேகமாக எல்லாத் திருப்பணிகளும் முடிவடைந்து, திருக்குடமுழுக்கு விழா நடத்தப் பெரியோர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

தமிழ் நாட்டிலேயே மிகவும் சிறந்த முறையில் நடக்க இருக்கும் மாபெரும் விழாவாகிய திருவண்ணாமலைத் திருக்கோயில் திருப்பணிக்குத் தமிழ் மக்களும் பக்த கோடிகளும் தங்களால் இயன்ற வகைகளிலெல்லாம் பெரிதும் நன்கொடைகள் வழங்கி அருள்மிகு அருணாசலேசுவரர்—அபீதகுசாம்பாள் திருவருள் பெற்று உய்யுமாறு பெரிதும் வேண்டிக் கொள்கின்றேன்.

திருப்பணிக்குக் காணிக்கை வாரித் தாரீர்!

## செய்திச் சுருக்கம் :

கோவை மாவட்டம் ஈரோடு வட்டம் திண்டல் மலை கிராமத்தில் உள்ள அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயிலில், இரவு காவல்காரராகப் பணிபுரிந்து வந்த திரு. நாச்சிமுத்து கடந்த 19—8—75 அன்று இரவு கொலையுண்டு இறந்தார். ஆணையர் அவர்கள் பார்வையில் கண்ட உத்தரவில் (ஆணையரது ந.க. 58704/75, இ2, நாள் 27—8—75) திருக்கோயில் நிதியிலிருந்து இறந்து போன காவல்காரரின் குடும்பத்தினருக்கு ரூ. 5,000/- உதவியாக அளிக்க உத்தரவிட்டார்கள்.

இந்த உத்தரவின்படி திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 5,000/- ஈரோடு அரசினர் வங்கியில் 61 மாதக்காலக் கெடுவில் டிபாசிட் செய்யப்பட்டுத் தொகைக்கான ரசீது, இறந்துபோன காவல்காரரின் மனைவி திருமதி. வள்ளியம்மாளிடம், 1—11—75-ல் மேற்படி திருக்கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு ஈரோடு உதவி ஆணையர் திரு. வி. முருகன், வரவேற்புரை அளிக்க, தமிழக மேலவை உறுப்பினர் திருச்செங்கோட்டு வேலப்பன் தலைமை தாங்கி நடத்தினார். உதவித் தொகைக்கான ரசீதினைத் திருமதி. வள்ளியம்மாளிடம் தமிழகச் சட்டமன்ற ஈரோடு தொகுதி உறுப்பினர் திரு மா. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ., அவர்கள் அளித்தார்கள்.

# 'சிந்தாமணிச் செல்வர்' சிறப்புற வாழ்க!

வியத்தகு சான்ருேர் மே.வீ.
    வேணுகோ பாலப் பிள்ளை,
நயத்தக எண்ப தாண்டு
    நலமுற நிறைய லுற்ருர்!
பயப்படப் பன்னூல் ஆய்ந்து
    பதிப்பித்தார்! அவர்தம் மாட்சி
உயத்தகப் போற்றி வாழ்த்தி
    உவப்ப, நாம் கூடி யுள்ளோம்! (1)

நற்றமிழ் வளர்க்கும் மேலோர்,
    நற்பெரும் புலவர், மே.வீ.
பொற்புயர் சிறப்பை எல்லாம்,
    போற்றும் இவ் விழாவின் சார்பில்,
கற்றுயர் கவிஞர் பல்லோர்
    கலந்திடக் கவிய ரங்கம்
மற்றிவண் அமைத்துத் தந்த
    மாட்சிமை போற்றற் பாற்ரும்! (2)

இத்தகு கவிய ரங்கிற்
    கேற்றநற் றலைவ ராக,
வித்தகர் பரந்தா மர்தாம்
    விளங்குதல் பெருஞ்சி றப்பாம்!
முத்தமிழ் வல்ல இந்த
    முதுபெரும் புலவர், மற்றும்
புத்தமிழ் தனைய பாடற்
    கவிஞர்க்கென் வணக்கம்! போற்றி! (3)

(வேறு)

தொழுநற் குணங்கள் பலஅமைந்த
    தூய புலமைப் பெருஞ்சான்ருேர்!
செழுநற் சிந்தா மணிச் செல்வர்!
    சிறந்த வேணு கோபாலர்!
பழுதில் வகையில் நுனித்தாய்ந்து
    பன்னூல் சிறக்கப் பதித்தார்! அம்
முழுநற் சிறப்பும் எடுத்தினிது
    மொழிந்து புகழ்தல் முடியுமோ? (4)

உண்மைப் பெரியார்! ஒழுக்கமிக்கார்!
    உயர்ந்த குறிக்கோள் வாழ்க்கையினர்!
எண்மைத் தோற்றம், சான்ருண்மை,
    இணையில் அடக்கம், இறையடிக்கீழ்த்
திண்மைப் பத்தி, செந்தமிழ்நற்
    களஞ்சி யமாகும் சிறப்புடையார்!
தண்மைத் தமிழ்நூல் பலபதித்தார்!
    சாற்றற் கெளிதோ ? அவர் மாட்சி! (5)

(வேறு)

ஏடு படித்தல் என்பது ஒருகலை!
எல்லோரும் ஏடு படித்தல் இயலாது!
தனியே அதற்குத் தக்கநற் பயிற்சி
பெரிதும் உழைத்துப் பெறுதல் வேண்டும்!
செல்லும் பூச்சியும் ஏட்டைச் சிதைக்கும்!

---

தமிழ் கூறும் நல்லுலகின் தலைசிறந்த தமிழ்ப் பெரும் புலவர்களின் வரிசையில் ''எண்ப தாண்டான இளைஞர்'' எனும்படி, உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல், பல தமிழ் வகுப்புக்கள் நடத்திக் கொண்டும், தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்துக் கொண்டும், தமிழில் நூல் எழுதவும் வெளியிடவும் முயல்பவர்களுக்குப் பல்லாற்ருனும் இயன்ற உதவிகள் செய்து கொண்டும், முதுபெரும் புலவராகவும், தமிழ்ப்பெருஞ்சான்ருேராகவும் விளங்கிவருபவர் ''சிந்தாமணிச் செல்வர்'', ''செந்தமிழ்க் களஞ்சியம்'', ''இலக்கணத் தாத்தா'', ''மகாவித்துவான்'' திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள் ஆவர். அந்தச் செந்தமிழ்ப் புலமைப் பெருந்தகையின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவில், நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் திரு. க. அன்பழகன், தமிழகப் பாடநூல் நிறுவனத்தின் இயக்குநர் திரு. சு. ந. சொக்கலிங்கம், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு. கொண்டல். சு. மகாதேவன் முதலிய பெருமக்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அவ்விழாவின் சார்பில் பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனர், எம்.ஏ., அவர்கள் தலைமையில், கவியரங்கம் ஒன்றும் சிறப்புற நிகழ்ந்தது. அதன்கண் ''திருக்கோயில்'' ஆசிரியர் அவர்கள் கலந்துகொண்டு, ''பதிப்பாசிரிய வழிகாட்டி'' என்னும் தலைப்பிற் பாடிய கவிதை, இங்கு வெளியிடப்படுகின்றது.

—ஆசிரியர்.

ஏடுகள் ஒடிந்தும் கிழிந்தும் இருக்கும்!
மெய்யெழுத் துக்கள் புள்ளி எய்தா!
ஒற்றைக் கொம்பும், சுழியின் கொம்பும்
வேறுபா டின்றி ஒத்து விளங்கும்!
காலும், ரகரமும் ஒன்றே போலும்!
பகர, யகரம் நிகர்உறத் திகழும்!
கசதநற என்பவை வசதியாய் மாறி
ஒன்றன் இடத்தை மற் றென்று கவரும்!
எழுதுவோர் பலப்பல பிழைகளைப் புரிவர்!
பக்கங்கள் பலப்பல மாறிக் கிடக்கும்
சீரும் தளையும் செய்யுள் வடிவும்
சரிவரத் தெரியா! வரிகள் விடுபடும்!
இத்தகு நிலைகளால் எத்தனையோபல
குழப்பமும் கலக்கமும் விளைத்து நிற்கும்!
'தொன்றுமொழி' அந்தோ! 'தோன்றுமொழி' ஆகும்!
'எதிபங்கம்' அச்சோ! 'எதிர்பங்கம்' எனஆம்!
'யவமத்தி மம்' எனும் எழிற்பெருஞ்சொல்தான்
'பவமத் திமம்' எனப் பண்பிற் பிறழும்!
'அரிய வழக்கு' அன்னே ஆரிய வழக்காம்!
'போரவை' மாறிப் 'போர்வை' எனப்படும்!
'அல்கு தடம்' எனும் அழகிய சொற்றொடர்
'அல்குற் றடமாய்' அருவருப் புத்தரும்!
தகர சகரம் குறிக்கும் 'தச்சகரம்'
'தசக்கரம்' ஆகித் தரங்கெட்டு நிற்கும்!
இனையபல் பிழைகளையெல்லாம் களைந்து
செப்பன் இட்டுத் திருத்தி அமைத்து,
அறிஞர்கள் ஏற்ப, ஆய்ந்தாய்ந்து பதிக்கும்
பதிப்பா சிரியர் பணியின் சிறப்பு,
பெரிது! பெரிது! மிகவும் பெரிதே! (6)

(வேறு)

துதித்தகு வேணு கோபாலர்
தமிழ்க்குச்செய் தொண்டுகளுள்,
பதிப்பா சிரியராய்ப் பன்னூல்கள்
ஆய்ந்து பதித்தளித்த
மதிப்பருந் தொண்டின் வளம், யாரும்
போற்றும்நல் மாட்சிமைத்தாம்!
எதெப்படி யேனும்இன் றிப்பதிப்
பாளர்க் கிணையிலையே! (7)

செஞ்சொல்நக் கீரர்தாம் செய்த
களவியற் சீருரையும்,
தஞ்சைவா ணன்கோவை, அட்டப்
பிரபந்தம், தகுதி
விஞ்சு தமிழ்ச்சித்தர் நூற்கோவை,
யாப்பியல் நூல் விருத்தி,
எஞ்சலின் றிப்பதிப் பித்தார்,
இவர்சீர் இயம்பெளிதோ? (8)

சொல்வீரர் பல்லோர் இருப்பினும்,
செந்தமிழுக்குத் தொண்டு செய
வல்வீரர் நம் வேணு கோபாலர்
போல்பவர் மன்சிலரே!
நல்வீர சோழியம், சொல்லதி
காரநச்சி னர்க்கினியம்,
எல்லோரும் போற்ற இனிது
பதிப்பித்தார் மற்றிவரே! (9)

(வேறு)

'இலக்கணத் தாத்தா' என்றே
யாவரும் போற்றும் சான்றோர்!
நலத்தகு புலவர் ஏறு!
நம்வேணு கோபா லர்தாம்
பலப்பல நூல்கள் ஆய்ந்து
பண்புறப் பதிப்பித் துள்ள
கலைத்திறன் கண்டு ணர்ந்து,
களித்திவண் புகழற் பாற்றும்! (10)

நந்தாத பெரும்புலவர், நல்வேணு கோபாலர்,
முந்தாகப் பலநூல்கள் முயன்றாய்ந்து பதிப்பித்தே
எந்தாய் தமிழ்மொழிதான் இனிதோங்கப் பணி புரிந்தார்!
சிந்தாமணிச் செல்வர்அவர், சிறப்புமிக வாழ்க நன்றே!

(வேறு)

தன்னேர் இல்லாத் தமிழ்ப்புலவ!
தகைசால் வேணு கோபால!
நின்னாள் திங்கள் என நீள்க!
நீண்ட திங்கள் யாண்டாக!
பொன்னேர் யாண்டோ ஊழிபல
போலப் பொலிக! தமிழ்ப்புலமை
மன்னே யாய்நீ வீற்றிருந்து,
வாழ்க! வாழ்க! நீடூழி! (11)

(வேறு)

'ஒன்றுடனே பத்தடுக்கல் உற்றபல
கோடி எனும் ஊழி காலம்
நன்றுமிக வாழ்க!' என நல்லகுட
புலவியனார் நயந்து முன்னாள்,
நின்றபுகழ்ப் பாண்டியர்கோன்நெடுஞ்செழியன்
தனைவாழ்த்தி நின்றார்! நின்னை
இன்றதுபோற் கவிஞரெலாம் இன்பமிக
வாழ்த்துகின்றேம்! இனிதே வாழ்க! (12)

—ந. ரா. முருகவேள், 31—8—75

# இராமலிங்க அடிகளும் மறைமலை அடிகளும்



[நமது சென்னை மாநகரில், பல ஆண்டுகளுக்கு முன்னர் அருட்டிரு வடலூர் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா விழா ஒன்று, சென்னை தங்கசாலைத் தெருவில் உள்ள தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளியில், மிகவும் சிறப்புற நிகழ்ந்தது. அதற்குத் தமிழ்க்கடல் மறைமலையடிகளார் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். அதுபோது மறைமலையடிகளார், இராமலிங்க அடிகளார் பற்றி நிகழ்த்திய தலைமைச் சிறப்புரை, இங்கு மிகவும் போற்றி எடுத்து வெளியிடப்பெறுகின்றது.

—ஆசிரியர்.]

**மறைமலையடிகள் பேச்சு :**

''ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்கு முன் இராமலிங்க அடிகளைப்பற்றி, வேண்டிய பகுதியொன்றும், வேண்டாத பகுதியொன்றுமாக இரு பெருங் கூட்டத்தார் தோன்றினர். சுவாமிகள் மிகப்பெரியவர் என்றும், சிறியவர் என்றும் வழக்குகள் தோன்றின. இப்போட்டிக் கொள்கைகள் அக்காலத்தில் பலமாயிருந்தன. அப்போது நான் இளைஞனாயிருந்தேன். எவ்வழக்குடையாரிடத்தும் நான் சேரவில்லை. இராமலிங்க அடிகளிடம் எனக்குப் பெரிய நன்மதிப்பு உண்டு. என் ஆசிரியர் சீலத்திரு. சோமசுந்தர நாயகர் எனக்கு இப்பெரும் எண்ணம் உண்டாகுமாறு செய்து வைத்தார்.

ஆறுமுக நாவலர் எழுதியிருந்த நூல்களைப் படித்த காலை, எனக்கு அருவருப்பே ஏற்பட்டிருந்தது. ஆனால், அதுபோது என் ஆசிரியராயிருந்த நாராயணசாமி பிள்ளை என் மனநிலையைத் திருத்தினர்கள். இலக்கிய இலக்கணங்களை முறையே பயிலாமல் அருள்கொண்டு பாக்கள் பாடிய அருளாளர் இராமலிங்கம் என்பதை என் ஆசிரியர் எனக்குக் கூறி, அருவருப்பை அகற்றிவிட்டார். எனக்குத் துலக்கம் உண்டாயிற்று. ஆனாலும் திரும்பவும் ஆறுமுக நாவலர் குழுவினர் இராமலிங்க சுவாமிகளை இழித்துப்பேசவே, எனக்குக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அவருடைய வரலாற்றைப் பற்றிப் பலர் பலவாறாகக் கூறினர்கள். அவருடைய பாக்களைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு அவா உண்டாயிற்று. பிறகு, ஒரு நல்ல பதிப்பாக வெளியாகியிருந்த அருட்பாவை வாங்கிப்படித்த போது, அருட்பாக்களின் உயர்வு தோன்றியது. ஆனால், அப்போதுகூட சுவாமியாருடைய பாடல்கள் உயர்வாயிருக்கலாம். அவருடைய வாழ்க்கை சரியாக இருக்காதுபோலும் என்று மனக் குழப்பம் கொண்டேன்.

பிறகு, கிறித்தவக் கல்லூரியின் ஆசிரியராக அமர்ந்த போது சீலத்திரு சோமசுந்தர நாயகரின் பழக்கம் எனக்கு ஏற்பட்டது. அவரிடம்''இராமலிங்கர் உயர்ந்தவரா? தாழ்ந்தவரா? நீங்கள் சொன்னால் சரி'' என்று வினவினேன். அதற்கு நாயகர் பின்வருமாறு கூறினர்கள் :

''தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள் பெரியவர்கள்தாம். இராமலிங்க சுவாமிகளும் பெரியவர்களே. ஆனால் ஆறுமுக நாவலரவர்களைவிட இராமலிங்க சுவாமிகள் அளவுக்கு மேற்பட்டு உயர்ந்தவர்கள்.''

இதைக் கூறுகிறபோது, சீலத்திரு நாயகரவர்களின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் ஒழுகிற்று.

பிறகு, நாயகரவர்கள் சிறிது நேரம் சும்மாயிருந்துவிட்டுத் திரும்பவும், ''அவருடைய அன்பின் சிறப்பை என்னால் சொல்ல முடியாது. மாணிக்க வாசகரின் அன்புக்கு அடுத்தபடி இராமலிங்க சுவாமிகளின் அன்பு; இவ்வளவுதான் நான் சொல்ல முடியும்'' என்றார்.

''ஆனால் நாவலர் இழித்துக் கூறியதேன்?'' என்று கேட்டேன். அதற்கு நாயகரவர்கள்,

''உள்ளபடியே ஆறுமுக நாவலரவர்கள் இராமலிங்க சுவாமிகளை இழித்துக் கூறவில்லை.

இராமலிங்க சுவாமிகளின் கூட்டத்தார் தேவார திருவாசகங்களின் உயர்வை அறியாமல் அவற்றைக் குறை கூறிக்கொண்டு திரிந்ததைக் கண்டித்து, அவர்களுக்குத் தேவார திருவாசகங்களின் உயர்வை எடுத்துக் காட்டித் திருத்தவே முயற்சி செய்தார்கள்'' என்று கூறினர்கள்.

பிறகு நான் இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவை ஒழுங்காக முறையே படித்தேன். தேவார, திருவாசகங்களுக்கும், அருட்பாவுக்கும் வித்தியாசமே காணவில்லை. அதன் பின்னர், தேவார திருவாசகங்கள் என்னும் தெவிட்டா அமுதங்களை ஈந்த அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், திருஞான சம்பந்தர் ஆகிய நால்வரிடத்தும் உள்ள மிகுதியான அன்பு, அருட்டிரு இராமலிங்க அடிகளிடத்தும் எனக்கு உண்டாயிற்று.

திரும்பவும் முன்போல இராமலிங்க சுவாமிகளைச் சேர்ந்தவர்களுக்கும் சேராதவர்களுக்கும் கலகம் உண்டாயிற்று. நான் எதிலும் கலந்து கொள்ளாமல் தனித்திருந்தேன். இராமலிங்க சுவாமிகளை இழித்துரைக்கும் கூட்டத்தினர் பெருகினர். சென்னை அன்பர்கள் என்னிடம் வந்து பெரியவர் ஒருவரை இழிவாகக் குறைத்துப் பேசுகையில் அக்குறையைத் தவிர்க்க உதவி செய்ய வேண்டுமென்றுகேட்டுக் கொண்டார்கள். அக்காலத்தில் எனக்கு உதவியாகத் திரு. தங்கவேலு முதலியார் அவர்களுமிருந்தார்கள். அப்போது கலகம் மும்முரமாயிருந்தது. பிறகு, எதிர்ப்பக்கத்தார் எதிர்ப்புக்குன்றி மறைந்து, இறைவன் அருளால் இராமலிங்கப் பெருமானின் பெருமை 'குன்றில் இட்ட மணிவிளக்கே போல' நிலைபெற்றுவிட்டது. அன்று முதல் நாளுக்கு நாள் அவருடைய அருட்பாவின் பெருமை பெருகிக்கொண்டே வருகிறது.

---



13—4—75-ம் நாள் அன்று கோவை மாவட்டம் பூண்டி அருள்மிகு வெள்ளிங்கிரி ஆண்டவர் திருக்கோவிலின் குடிநீர்த் திட்டமான சுமார் நான்கு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சுவாமி முடியாறு திட்டம் பற்றி அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன், அவர்களுடன் கோவை துணையர் திரு. எஸ். கோபால கிருஷ்ணன், பி.எஸ்ஸி., அறங்காவலர்கள் மற்றும் அறங்காவலர் குழுத் தலைவர், செயல் அலுவலர், மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடும் காட்சி.

# அம்பிகையின் அமுத வெள்ளம்

— மீனாட்சி சுந்தரம் —

### 31. தியானிக்கும் முறை

வழிபாட்டில் மந்திரம் பாவனை கிரியை என்னும் மூன்றும் சிறப்பிடம் பெறும். இம் மூன்றிற்கும் மிக்க ஆற்றலும் பயனும் உண்டு. பாவனை என்பது தியானம். . தேவி அட்டமா சித்திகளையும் வழங்குபவள். அட்டமாசித்திகளுக்குரிய தெய்வங்கள் எல்லாம்; தேவியைச் சூழ்ந்து பணிந்து வணங்கி நிற்கும். தேவியின் திருமேனியினின்று அட்டமாசித்திகளும் தோன்றின. அத்தகைய சிறப்பு மிக்க தேவியின் திருமேனியைத் தம்முடைய மேனியாகவே பாவித்து, ஞானிகள் தியானம் செய்வர். அந்தத் தியானத்தினால் விளையும் பயன், பின்வரும் பாடலால் விளக்கப்பெறுகின்றது.

அம்மே! நின் மெய்ப்பிரிவாம்
    அணிமாதி தொழும் அழியா,
இம்மேனி தம்மேனி
    எனத்தெளிந்து பாவிப்பார்,
செம்மேனி அரன்வாழ்வும்,
    சிதைவது எனப் புறக்கணித்து,
வெம்மேனி ஊழி அனல்
    தீபமிட விளங்குவார்.

உலக உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்குபவளே! நின்னுடைய திருமேனியினின்று பிரிந்து வெளிப்பட்டுத் தோன்றுவனவாகிய அணிமா மகிமா கரிமா லகிமா பிராப்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் என்னும் எண்வகைச் சித்திகளும், அவற்றிற்குரிய அதிதேவதைகளும், நின்னைத் தொழுது வணங்கும். அத்தகைய சிறப்பு மிக்க நின்னுடைய இந்தத் திருமேனியைத் தம்முடைய மேனியே என்று தெளிவடைந்து நினைத்துத் தியானித்து வழிபடுபவர்கள், மிகச் சிறந்த பேறுபெற்றவர் ஆவர். அத்தகைய பெரியோர்கள், சிவந்த திருமேனியை உடைய சிவபிரானின் சிவலோகப் பெருவாழ்வும்கூட, ஒருவகையில் அழியக்கூடியது என்று அதனை விரும்பாமற் புறக்கணிப்பார்கள். ஊழிக்காலத்து அனலும்கூட, தமக்குத் தம் முன்னிலையில் எரியும் ஒரு சிறிய தீபம் போல் நிற்க, அவர்கள் தம்முடைய மேனியானது மிகப் பெரிய அருட்பெருஞ்சோதியாக விளங்கப் பெறுவர்.

உலக உயிர்களுக்கெல்லாம், தேவியே அரும்பெரும் தாயாகத் திகழ்தலின் ''அம்மே'' எனச் சிறப்பித்து விளித்தார். எல்லாச் சக்திகளுக்கும், சித்திகளுக்கும் தேவியே மூலகாரணமாகத் திகழ்தலால், ''நின் மெய்ப்பிரிவாம் அணிமாதி'' என்றார். அச்சித்திகள் எல்லாம் தேவியின் ஏவல்வழி ஒழுகி வழிபட்டு நிற்றலின் ''அணிமாதி தொழும்'' என்றாள். தேவியின் திருமேனி ஏனையோர் உடல் போல அழிந்து படாது அருளுருவாய் விளங்குவதாகலின், ''அழியா இம்மேனி'' என்றார். தம்முடைய கண்களால் நெருங்கிய நிலையினின்று கண்டு களிக்கப்பெற்றதாகலின், அதனை அண்மைச் சுட்டினால் விதந்து வியந்து ''இம்மேனி'' என்று புகழ்ந்து போற்றினர். பாவனை செய்தல், தெளிந்து சிறந்த மனநிலை உடையோர்க்கே இயலுமாதலின் ''தெளிந்து பாவிப்பார்'' என்றார்.

அத்தகையோர் வீடும் வேண்டா விறலினராய் விளங்குவர் ஆகலானும், தேவி அயன் திருமால் சிவன் செல்வமும் ஒன்றோ எனச் செய்யும் சிறப்பினள் ஆதலானும், ''செம்மேனி அரன் வாழ்வும் சிதைவது எனப் புறக்கணித்து'' என்றார். ''அன்புருவம் பெற்று அதன் பின் அருளுருவம் அடைந்து, பினர் இன்புருவம் ஆயினை நீ வாதவூர் எம் இறையே'' என்றபடி, தேவியை வழிபடுவோர் இன்புருவம் பெறுதலின் அதனை ''வெம்மேனி'' என்றார். வெம்மை-வேண்டல். தேவியின் திருவருள் நிரம்பப் பெற்றவர்கள் முடிவில் ஒளிவடிவம் பெறுதலின் ''வெம்மேனி ஊழி அனல் தீபம் இட விளங்குவார்'' என்றார். இச்செய்யுள் தேவியைத் தியானிக்கும் முறையையும் அதன் பயனையும் அறிவுறுத்திற்று.

### 32. தேவியின் மூல மந்திரம்

தேவியின் மூலமந்திரம் பதினைந்து எழுத்துக்களால் ஆனதாகும். ஆதலின் அதனைப் 'பஞ்சதச அட்சரி' என்று பெரியோர்கள் கூறுவர். இது மூன்று கண்டங்களாக இருக்கும். அவை சூரியன் சந்திரன் அக்கினி என்னும் முச்சுடர்கள், இச்சை ஞானம் கிரியை என்னும் முச்சக்திகள், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகள், சத்துவம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்கள் ஆகியவற்றைக் குறிக்கும். கடைக்கண்டம் மூன்று எழுத்தும், முதற்கண்டம் நான்கு எழுத்தும், இடைக் கண்டம் ஐந்தெழுத்துமாக இருக்கும். கண்டந்தோறும் இறுதியில் மாயையின் எழுத்தும் இதன்கண் பொருந்தியிருக்கும். முதற்கண்டத்தும் கடைக் கண்டத்தும் சக்தியின் எழுத்தும், மூன்று கண்

டத்தும் காமனின் எழுத்தும் வருதல் பயன் கருதிய முறைமை.

''அரியதா கும்சிவம் சத்திமதன் அவனிபின்பு
ஆதித்தன் மதிமதன வேள்
பெருகுவான் இந்திரன் பின்புபரை தபனன்மால்
பேசின் முக்கண்டம் அடைவே
உரியதாம்; அந்தத்தின் மாயை மும்முறை அமைத்து
உறும் எழுத்து அடைய உணர்வால்
தெரியுன் நாமத்து உனெடும் உனது உறுப்பாம்
என்று செப்பும் நான்மறைகள் உமையே''

உமையம்மையே! அரிய பொருளாய் இருக்கின்ற சிவத்தின் எழுத்து (க), சக்தியின் எழுத்து (எ), மன்மதனின் எழுத்து (ஈ) பூமியின் எழுத்து (ல), பின்பு சூரியனுடைய எழுத்து (ஹ), சந்திரனின் எழுத்து (ஸ), காமனின் எழுத்து (க), வானத்தின் எழுத்து (ஹ), இந்திரனின் எழுத்து (ல), பின்பு பராசக்தியின் எழுத்து (ஸ), காமனின் எழுத்து (க), திருமாலின் எழுத்து (ல) ஆகிய வற்றை முறையே கொண்டு உன்னுடைய தசாட்சரி என்னும் மந்திரம் அமைந்திருக்கும். இம் மூலமந்திரம் மூன்று கண்டமாய், ஒவ்வொரு கண்டத்தின் இறுதியிலும் மாயையின் எழுத்து (ஹ்ரீம்), மும்முறை அமையப் பெற்று விளங்கும். இவ்வாறு பதினைந்து எழுத்தாகப் பொருந்துகின்ற இம்மூலமந்திரமானது, உனக்குரிய திருப்பெயராய் உனக்கு உறுப்புப் போல விளங்கும் என்று நான்கு வேதங்களும் சொல்லுகின்றன, என்பது இப் பாடலின் கருத்து :

தேவியின் மூல மந்திரத்தினுல் எத்தனையோ அரிய பல நலன்களை அடையலாம் என்பது இச்செய்யுளில் அறிவுறுத்தப்படுகின்றது.

தேவியின் மூல மந்திரம் மூன்று கண்டமாக அமைந்தது என்பதனை அறிவித்தற்கு, பின்பு பின்பு பின்பு என்று மூன்று முறை குறிப்பிடப் பட்டது. தேவியின் மூலமந்திரத்தில் இன்னின்ன எழுத்துக்கள் உள்ளன என்பார், அவ்வற்றிற்குரிய அதிதேவதைகளின் பெயர்களைக் குறிப்பிட்டார். எனவே எல்லாத் தேவதைகளையும் வழிபடுவதனுல் எய்தும் பயன்களையெல்லாம், தேவி ஒருத்தியே தரவல்லவள் ஆவாள் என்பது உணர்த்தப்பட்டது. இதன் விரிவு எல்லாம் மந்திர நூல்களில் வல்ல குருவினிடம் உபதேச முறையில் முறையே கற்றுப் பெற்று உணர்தல் வேண்டும். (32)

## 33. செபிக்கும் முறைமை

தேவியின் மூல மந்திரம் பதினைந்து எழுத்துக்களைக் கொண்டது என்பதனை முன்னர்க் கண்டோம். அம்மந்திரம் ஒன்றேயாயினும் அதனை அவரவர்கள் விரும்பும் பயனைப் பெறுதற்கு ஏற்றபடி, வெவ்வேறு வகையான நிலைகளில் அவ்வவற்றுக்குரிய அதிதேவதைகளின் எழுத்துக்களை அமைத்துச் செபித்தல் வேண்டும். அங்ஙனம் செபிக்கும் முறையினைப் பின் வரும் செய்யுள் நன்கு எடுத்து விளக்குகின்றது.

மோக போக விழைவி ஞர் உன்
மூல வித்தை தன்னின்முன்
ஆக மாரன் யோனி பொன்அணங்கு
அமைத்து நெய்யினுல்,
யோக மாச்சிவத் தழற்குள்
ஓம முற்று விமலையே
த்யாக மாமணிக் கொடு அக்க
வலயம் உட் செபிப்பரே.

விமலையே! மோகத்தைச் செய்யும் போகங்களை விரும்பினேர் உன்னுடைய மூல மந்திரத்தின் தொடக்கத்தில் 'க்லீம்' என்னும் மன்மதனின் எழுத்தும், 'ஹ்ரீம்' என்னும் சக்தியின் எழுத்தும், 'ஸ்ரீம்' என்னும் திருமகளின் எழுத்தும் ஆகிய இந்த மூன்றெழுத்துத் தொடர்களையும் முறையே அமைத்து, சமித்துக்கள் முதலிய எல்லாம் கூடி நிறைந்த சிவவடிவமாக இருக்கின்ற அக்கினியில், காமதேனுவின் நெய்யினுல் ஓமம் செய்து, தியாகத்தை உடைய பெரிய சிந்தாமணிகளைக் கைக்கொண்டு, அவற்றுல் அமைந்த அக்கமாலையால் அன்புடன் செபிப்பார்கள்.

இதன்கண் போகம் என்றது சுவர்க்கம் முதலிய பதவியின்பப் பேறுகளை. அவைகள் வீடுபேறு எய்தவொட்டாமல் மேலும் மேலும் இச்சைமீதூர்தல் ஆகிய மோகத்தையே பெரிதும் விளைவிப்பனவாதலின் ''மோக போகம்'' என்றுர். மூலவித்தை என்றது மூலமந்திரத்தை. மாரன்-மன்மதனுக்குரிய எழுத்து. யோனி—சக்தியின் எழுத்து. பொன் அணங்கு-திருமகள், திருமகளுக்குரிய எழுத்து. ஓமம் செய்வதற்குரிய நெருப்பினை வறிதே ''தழல்'' என்னுது ''யோகமாச் சிவத்தழல்'' என்று சிறப்பித்தார். அதற்கு ஏற்பக் காமதேனுவின் நெய் என்றும், சிந்தாமணியால் இயன்ற செபமாலையென்றும் குறிப்பிட்டார். எனினும் அவைகள் உலக மக்களுக்குக் கிடைத்தல் அரிதாதலின் பசுவின் நெய் என்றும், தாமரை மணியால் இயன்ற செபமாலையென்றும் கொள்ளுதல் பொருந்தும். தியாகமாமணி-தாமரை மணி. அக்க வலயம்—செபமாலை. இச்செய்யுள் பல்வேறு போகங்களையும் நுகர விரும்புவோர் தேவியின் மூல மந்திரத்தைச் செபிக்கும் முறை கூறியது. (33)

## 34. சக்தி சிவ வடிவு

அம்பிகை அழிவில்லாத ஞானச்சுடராக விளங்குபவள். சூரியன் சந்திரன் என்னும் இரு சுடர்களும் அவளுக்கு இரண்டு தனங்களாக அமைகின்றன. அத்தகைய அம்பிகை சிவத்தின் வடிவேயாவாள். அச்சிவம் ஒன்பது வகை வடிவினை உடையதாகத் திகழும். சிவமும் சக்தியும் தம்முள் வேறுபாடு இன்றி விளங்கும். இரண்டும் தம்முள் ஒன்றினென்று விரவிப் பரவித் திகழும். இவ்வுண்மை பின்வரும் செய்யுளிற் செவ்விதின் விளக்கப்படுகின்றது.

இருசுடர் முலைத்துணைச் சிவன்வடிவு நீ; அதனை
யானும் நவமாக நினைவேன்;
உருவுநிறை தன்னில் அளவொத்த பரமானந்தம்
உடைய பரனெடு பரையுமாய்
மருவும் இனிதாம் உங்கள் கூட்டம்அது சேடமும்,
மறுத்து அதனை யுடையதுவுமாய்,
அருகில் இருவர்க்கும் ஒரு பொதுவாகி நிற்குங்
கொல்?
அழிவற்ற ஞான முதலே !

அழிவற்ற ஞான ஒளியாய் விளங்குகின்ற முதல்வியே! சூரிய சந்திரர் என்னும் இரண்டு சுடர்களை இரண்டு தனங்களாகக் கொண்டு நீ திகழ்கின்றாய். இத்தகைய நீ, சிவத்தின் வடிவே யாவாய். அச்சிவத்தின் வடிவினை ஒன்பது கூறு களாக நூல்கள் நுவலும். யானும் அங்ஙனமே நினைந்து தியானிப்பேன். சிவம் சக்தி என்னும் இருவரின் வடிவையும் இயல்பையும் எங்ஙனம் நிறுத்து ஆராய்ந்து பார்க்கினும், அளவு ஒத்த நிறையுடையதாய், பரமானந்த நிலையின தாகவே விளங்கும். உங்கள் இருவரது கூட்ட மும் முறையே ஒன்றினொன்று விரவிச் சேட மாகவும், அதனின் வேறாகிய சேடத்தை உடையதாகவும், இருவருக்கும் அருகில் ஒரு பொதுவாகவே நிற்கும் என்பது இப்பாடலின் பொருளாகும்.

அம்பிகையை ''இரு சுடர் மூலத்துணை நீ'' என்றதனால், உலகின் வடிவமெல்லாம் சக்தி யின் வடிவேயாம் என்றதாயிற்று. அடுத்து ''அதனை யானும் நவமாக நினைவேன்'' எனவே மீண்டும் அவ்வுலக வடிவமெல்லாம் சிவ வடிவ மாகும் என்பது அறிவுறுத்தப் பெற்றது. இதனால் சக்தி வடிவமே சிவவடிவம், சிவ வடிவமே சக்தி வடிவம் என்பது தெளிவுறுத்தப் பட்டது. சக்தி, சிவன் வடிவு என்னும்பொழுது சக்தியானவள் சேடமாகவும், சிவனானவன் சேடத்தை உடையவனாகவும் சொல்லப்படும். சிவன், சக்திவடிவு என்னும் பொழுது சிவன் சேட மாகவும், சக்தி சேடத்தை உடையவளாகவும் கொள்ளப்படும். அதனால் இருவருடைய கூட்ட மும் இருவருக்கும் பொது என்பது தெளியப் படுதலின் ''உங்கள் கூட்டம்அது சேடமும், மறுத்து அதனை உடையதுவுமாய், அருகில் இருவர்க்கும் ஒரு பொதுவாகி நிற்கும்'' என்றார்

''அருளது சக்தியாகும் அரன்தனக்கு; அருளை இன்றித் தெருள் சிவம் இல்லை; அந்தச் சிவம் இன்றிச் சக்தியில்லை'' என்றும்; ''சிவம் சக்தி தன்னை ஈன்றும், சக்திதான் சிவத்தை ஈன்றும் உவந்து இருவரும் புணர்ந்து இங்கு உலகுயிர் எல்லாம் ஈன்றும்'' என்றும்; ''நவந் தரு பேதம் ஏக நாதனே நடிப்பன்'' என்றும் வரும் சிவஞான சித்தியார் செய்யுட்கள் ஈண்டு இயைபுபற்றி எண்ணி உணரத்தக்கன. *(34)*

## 35. நீயன்றி ஒன்றும் உளதோ?

அம்பிகையே இவ்வுலகில் உள்ள எல்லாப் பொருளாகவும் விளங்குகின்றாள். அம்பிகை இல் லாமல், இவ்வுலகப்பொருள் எதுவும்இல்லை என்பதனைப் பின்வரும் பாடல் இனிது உணர்த்து கின்றது.

மனமும் நீ, வெளியும் நீ, வளியும் நீ, கனலும் நீ,
மறிபுன லும்நீ, புவியும்நீ,
நினையின் பரம்அற வளர்ந்துஒளி பரந்துவிடின்
நீயன்றி ஒன்றும் உளதோ?
உனது மாஞான ஆனந்த உருவைப் புவன
உருவென வகுத்து அருளவோ?
அனையுமாய் மகவும் ஆமாறுபோல், நீ சத்தி
அருணவடிவாயது, உமையே!

உமையம்மையே! மனமும் நீ, ஆகாயமும் நீ, வாயுவும் நீ, நெருப்பும் நீ, அலையெறிகின்ற நீரும் நீ, நிலமும் நீ. தெளிய நினையுமிடத்து நினக்கு மேல் ஒன்று இல்லையாக நீ வளர்ந்து, ஒளியாக எங்கும் பரந்துவிடின், நின்னையன்றி வேறு ஒரு பொருளும் உள்ளதா? இவ்வாறு இருக்கின்ற உன்னுடைய பேரறிவின்பத்தை யுடைய உருவத்தினை, நீ பின்பு உலக வடிவ மாக வகுத்து வேறுபட்டிருப்பதாகத் தருவதற் கோ, நீ சிவந்த நிறமுடைய சக்தியின் வடிவ மாயினை? இஃது ஒருத்தி தாயாக இருந்து கொண்டே சேயாகவும் ஆவது, எத்தகைய அதிசயமோ அதுபோன்ற ஓர் அதிசயச் செயலே யாகும்.

மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களிலும், முறையே நிலம் நீர் தீ வளி விசும்பு மனம் என்னும் தத்துவங்களாக வைத் துத் தேவியை ஞானிகள் தியானிப்பர். ஆதலின் ''மனம் வெளி வளி கனல் புனல் புவி நீ'' என்றார். இதனால் அம்பிகையை நீங்கித் தனி யாக வேறு ஒரு பொருளும் இல்லையென்பது உணர்த்தப்பட்டது. ''ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்றில்லை, யார் உனை அறியகிற்பாரே?'' என் னும் திருவாசகம் இங்கு நினைவு கூரற்பாலது. மனம் வெளி வளி கனல் புவி எனக்கூறியது, அவைகள் தோன்றும் முறைமை கருதி. ஒடுங் கும் முறைமையாயின், புவி புனல் கனல் வளி வெளி மனம் எனக்கூறுதல் வேண்டும்.

தேவி தன்னுடைய உருவத்தை, மேற் குறித்தபடி அறுவகைப்பட்டிருக்கின்ற உலக வடிவமாக வகுத்து வேறுபடுத்தித் தருவதாலும் அவ்வுலக வடிவம் தேவியாகவே இருத்தலாலும் ''அனையுமாய் மகவும் ஆமாறு போல்'' என்றார். நீ அன்றி ஒரு பொருளும் இல்லை என்றதனால், இச்செய்யுள் பொருள் அவநுதி என்னும் அணி யாகும். முன்னைய செய்யுளில் ''இரு சுடர் மூலத்துணை நீ'' என்று குறிப்பினால் கூறியதனை, இச்செய்யுளில் விரித்துத் தெளிவுற விளக்கி யருளினார். *(35)*

**—ஆசிரியர்**

—தொடரும்.




சிதம்பரம், சைவ சமயத்தின் தலை சிறந்த பெருந் தலம். உலகம் வியந்து போற்றும் சிறந்த கலை வடிவமாகத் திகழும் நடராசப் பெருமான் எழுந்தருளி விளங்கும் புண்ணியப் புனிதப் பெருந்தலம் சிதம்பரமேயாகும். தமிழ் நாட்டில் எத்தனையோ பல நூற்றுக்கணக்கான கோயில்கள் இருப்பினும் ''கோயில்'' என்றால், அது சிதம்பரத்தை மட்டுமே சிறப்பாகக் குறிக்கும். அத்தகைய பெரும் சிறப்பு வாய்ந்தது சிதம்பரம். சைவத் திருமுறைகளில் சிதம்பரத்தினைக் ''கோயில்'' என்றே குறிப்பிட்டுப் பெரியோர்கள் வழங்கியுள்ளனர்.

தலம் என்றால் சிதம்பரமே. தெய்வத் திருவுருவம் ஆகிய மூர்த்தம் என்றால், அது நடராசப் பெருமானின் வடிவமே. தீர்த்தம் என்றால் அது சிதம்பரத்தில் உள்ள சிவகங்கையே ஆகும். இதனைச் சைவப் பெருஞ் சான்றோர் ஆகிய குமரகுருபர சுவாமிகள்,

''தீர்த்தம் என்பது சிவகங்கையே
ஏத்தரும் தலம் எழிற் புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''

என்று வியந்து போற்றிப் பாராட்டித் துதித்திருக்கின்றார்.

சிதம்பரத்திற்குத் தில்லை, புலியூர், பொது, புண்டரிகபுரம், சிதாகாசம், சிற்றம்பலம் முதலிய பல பெயர்கள் உண்டு. முற்காலத்தில் இத்தலம், தில்லை என்ற ஒருவகைப் புதர்ச் செடிகள் நிறைந்த காடாக இருந்ததனால், இதற்குத் தில்லை, தில்லைவனம் என்னும் பெயர்கள் ஏற்பட்டன. வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் வழிபட்டு அருள் பெற்றதனால், இதற்குப் புலியூர் என்று சிறப்புப் பெயர் ஏற்பட்டது. திருப்பாதிரிப்புலியூர், திருஎருக்கத்தம் புலியூர், திருவோமாம்புலியூர் என்னும் வேறு பிற தலங்கள் இருப்பதனாலும், அவைகளையெல்லாம் விட, இங்கேயே மிக்க பெரும் பற்றுடன் நடராசப் பெருமான் எழுந்தருளி நிலைபெற்று வீற்றிருந் தருள்வதனாலும், இது பெரும் பற்றப் புலியூர் என்று மிகவும் சிறப்பித்துப் புகழ்ந்து ஓதப்படும். ''பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே'' என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். ''எச்சமயத்தவரும் வந்து இறைஞ்சா நிற்பர்'' என்று தாயுமான சுவாமிகள் பாடியபடி, பக்தர்கள் எல்லோருக்கும் பொதுவான தலமாக விளங்குதலால், இதற்குப் பொது என்றும் ஒரு பெயர் உண்டு. ஆன்மாக்களின் இருதயம் ஆகிய புண்டரிகம் (தாமரை) போல விளங்குவதனால், இதற்குப் புண்டரிகபுரம் என்று காரணப் பெயர் ஏற்பட்டது. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களுக்குரிய தலங்களுள், இது ஆகாசத்துக்குரிய தலமாதலால், இதற்கு ஞானகாசம், சிதாகாசம், சிதம்பரம், சிற்றம்பலம் என்னும் பல பெயர்கள் வழங்கும். இவற்றுள் தில்லை என்னும் பெயரும் சிற்றம்பலம் என்னும் பெயரும், மிகவும் சிறப்பாகச் சைவத் திருமுறைகளில் பெரிதும் எடுத்து ஓதப் பெற்றுள்ளன.

''அல்லல் என்செயும்? அருவினை என்செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்?
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனர்க்கு
எல்லை யில்லதோர் அடிமை பூண்டேனுக்கே''

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

''செல்வ நெடுமாடம் சென்றுசேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே''

என்பது திருஞானசம்பந்தர் தேவாரம்.

நடராசப் பெருமானுக்கு உரிய சபைகள் ஐந்து என்பர். அவைகளுள் திருவாலங்காடு இரத்தின சபை; மதுரை இரசித சபை (வெள்ளி அம்பலம்); திருநெல்வேலி தாமிர சபை; திருக்குற்றாலம் சித்திர சபை; சிதம்பரம் கனக சபை (பொன்னம்பலம்) ஆகும்.

இவைகளேயன்றிச் சிதம்பரம் கோயிலிலேயே நடராசருக்கு ஐந்து சபைகள் உண்டு. அவைகள் முறையே சிற்சபை, இராச சபை, கனக சபை, நிருத்த சபை, தேவ சபை எனப்படும். நடராசப் பெருமான் இருக்குமிடம் சிற்சபை; ஆயிரக்கால் மண்டபம் இராச சபை; சிற்சபைக்கு முன்னால் உள்ளது கனக சபை; கொடி மரத்திற்கு அருகில் மிகவும் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியிருப்பது நிருத்த சபை; பேரம்பலம் என்பது தேவசபை; இவைகளெல்லாம் நேரிற் கண்டு தரிசித்து மகிழ வேண்டிய பெருஞ் சிறப்புடையவையாகும்.

இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலைகளில் விளங்கியருள்கின்ருன் என்பது சைவ சித்தாந்தம். இவற்றை முறையே வடமொழியில் சகளம், நிஷ்களம், சகள நிஷ்களம் என வழங்குவர். சிதம்பரத்தில் சகளத் திருமேனியாகிய உருவம் நடராசர் வடிவம். நிஷ்களத் திருமேனியாகிய அருவம் சிதம்பர ரகசியம். சகள நிஷ்களத் திருமேனியாகிய அருவுருவம் ஸ்படிகலிங்கம். இந்த ஸ்படிக லிங்கமே, அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எனப் போற்றப்படுவதாகும். இவை மட்டுமேயன்றிச் சிதம்பரம் திருக்கோயிலில் இரத்தின சபாபதியாகிய மரகத நடராசரும், சுவர்ண கால பைரவரும் எழுந்தருளி விளங்குகின்றனர்.

சிதம்பரம் கோயிலில் உள்ள பேரம்பலம், சிற்றம்பலம், திருவணுக்கன் திருவாயில், திருக்களிற்றுப்படி என்னும் இடங்களைக் குறித்துச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சேக்கிழார் சுவாமிகள் தமது பெரிய புராணத்திற் குறிப்பிட்டுப் புகழ்ந்து பாடியிருக்கின்ருர். திருவணுக்கன் திருவாயில் நடராசப் பெருமான் ஆகிய சபாநாயகர் எழுந்தருளியிருப்பது. திருக்களிற்றுப்படி, யானைத் துதிக்கை வடிவாய் இரண்டு புறமும் அமைந்துள்ள ஐந்து படிகள். இவ்வைந்தையும் கடந்த மேனிலையிலேயே, சபாநாயகர் எழுந்தருளியிருக்கின்ருர். யானைத் துதிக்கை பிரணவத்தையும், ஐந்து படிகள் ''நமச்சிவாய'' என்னும் பஞ்சாக்கர மந்திரத்தையும் குறிக்கின்றன.

சிதம்பரத்தினை வைணவர்கள் 'திருச்சித்திர கூடம்' என வழங்குவர். இங்கே பெருமாள் தில்லைக் கோவிந்தராசர் எனவும், தாயார் புண்டரீகவல்லி எனவும் பெயர் பெற்றுக் கோயில் கொண்டுள்ளனர். திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார் என்னும் இருவரும், முறையே பெரிய திருமொழி, பெருமாள் திருமொழிப் பாடல்களால் தில்லைச் திருச்சித்திர கூடம் என்னும் சிதம்பர தலத்தினை மங்களாசாசனம் செய்து போற்றியுள்ளனர்.

சிவபெருமான் செய்தருளிய தாண்டவங்கள் ஏழு. அவைகள் முறையே காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், உங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் எனப்படும். இவற்றுள் சிதம்பரத்தில் நடராசப் பெருமான் செய்தருள்வது ஆனந்த தாண்டவம் ஆகும்.

''ஆனந்தக் கூத்தன்
அருள்பெறில் நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகி நின்று
ஆடாமோ தோள் நோக்கம்''

என்று மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில் இதனைக் குறிப்பிட்டிருக்கின்ருர். இந்தத் தாண்டவமே சிருட்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் நிகழ்வதற்குக் காரணமாக இருப்பதனல், இதனைப் பஞ்சகிருத்தியப் பரமானந்த தாண்டவம் எனவும் பெரியோர்கள் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

சிதம்பரம் கோயிற் கோபுர தரிசனம் மிகவும் விசேடமானது. ''கோபுர தரிசனம் பாப விமோசனம்'' என்பது பழமொழி. சிதம்பரம் கோயிலை நான்கு அழகிய கோபுரங்கள் பெரிதும் அழகு செய்கின்றன.

சிதம்பரம் கோயிலுக்குள் கிழக்குக் கோபுர வாயில் வழியாக மணிவாசகரும், தெற்குக் கோபுர வாயில் வழியாக ஞானசம்பந்தரும், மேற்குக் கோபுர வாயில் வழியாக அப்பர் சுவாமிகளும், வடக்குக் கோபுர வாயில் வழியாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் வந்து வழிபட்டனர் என நூல்கள் கூறுகின்றன.

*(1)* சிதம்பரம் கோயிலின் கிழக்குக் கோபுரம், கி.பி. *1118* முதல் *1135* வரை அரசு செலுத்திய பேரரசனகிய விக்கிரம சோழன் கட்டியது. இதனைக் கி.பி. *1785*-ல் காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்ப முதலியாரின் தமக்கையார் ஆகிய சுப்பம்மாள் என்பவர் புதுப்பித்துத் திருப்பணி செய்தார்.

*(2)* மேற்குக் கோபுரம், கி.பி. *1251* முதல் *1268* வரை அரசாண்ட சுந்தரபாண்டியன் கட்டினன்.

*(3)* தெற்குக் கோபுரம், கி.பி. *1243* முதல் *1280* வரை அரசாண்ட கோப்பெருஞ் சிங்கன் என்னும் பல்லவ மன்னனல் கட்டப் பெற்றது.

*(4)* வடக்குக் கோபுரம், விசயநகரப் பேரரசரும், கி.பி. *1509* முதல் *1530* வரை அரசாட்சி புரிந்தவரும் ஆகிய கிருஷ்ண தேவ ராயர், தம்முடைய' ஒரிசா வெற்றியின் நினைவாகக் கட்டினர்.

கிழக்கு, மேற்குக் கோபுரங்களில் *108* நாட்டிய பேதங்களையும் அறிவிக்கும் சிற்பங்கள், அழகிய முறையில் அமைந்துள்ளன.

இங்குள்ள நூற்றுக்கால் மண்டபம் கட்டியவர், தொண்டை நாட்டு மணவிற் கூத்தனகிய காலிங்கராயன் என்பவர். சிவகாமி அம்மையின் கோயிலும், சிவகங்கை தீர்த்தமும், இரண்டாம் குலோத்துங்க மன்னனல் அமைக்கப்பட்டன. இங்குள்ள ஆயிரக்கால் மண்டபத்தில்தான், சேக்கிழார் சுவாமிகள் தம் பெரிய புராணம் அரங்கேற்றி யருளினர் என்பர்.

சிதம்பரம் கோயில், முதன் முதலில் சிம்ம வர்மன் என்னும் மன்னனல் அமைக்கப் பெற்றது. இக்கோயிலில் அண்டம், பிண்டம் என்னும் இரண்டின் நுட்பங்களையும் உணர்த்தும் நிலையில் அமைந்திருக்கின்றது.

அண்டத்தின் ஒரு பகுதி பரத கண்டம். அதில் உள்ள இலங்கைக்கும், இமயமலைக்கும் இடையில் உள்ளது, தில்லை என்னும் சிதம்பரம். இலங்கை இடகலை நாடி. இமயம் பிங்கலை நாடி. சிதம்பரம் சுழுமுனை என்னும் நடு நாடி எனப்படும்.

நான்கு வேதங்கள், *4* கோபுரங்கள்; *1,000* கால் மண்டபம், சகஸ்ராரம் என்னும் *1,000* இதழ்த் தாமரை; சிவகங்கைத் தீர்த்தம் சகஸ்ராரத்தை அடுத்துள்ள அமிழ்தப் பொய்கை; நான்கு தம்பங்கள், நான்மறையின் அதிதெய்வங்கள்; அடுத்துள்ள *28* நெடும்

தூண்கள், 28 ஆகமங்கள்; 96 பலகணிகள் 96 தத்துவங்கள். விமானத்தின் 9 கலசங்கள், நவசக்திகளின் அடையாளம். விமானத்தின் 64 கழிகள் 64 கலைகள்; கனக சபையில் வேயப் பெற்றுள்ள பொன் ஓடுகள் 21,600. அவை மனிதர்கள்விடும் 21,600 சுவாசங்களின் எண்ணிக்கையை உணர்த்துகின்றன. அப்பொன் ஓடுகளில் அடித்துள்ள ஆணிகள் 72,000. அவை நம் உடம்பில் உள்ள 72,000 நாடிகளைக் குறிக்கும்.

இங்குள்ள இராச சபை, தேவ சபை, நிருத்த சபை, கனக சபை, சிற் சபை என்னும் ஐந்து சபைகளும் தூலவுடல், சூக்குமவுடல், குணவுடல், கஞ்சுக உடல், காரண உடல் என்னும்

அன்னமய கோசம்
பிராணமய கோசம்
மனோமய கோசம்
விஞ்ஞானமய கோசம்
ஆனந்தமய கோசம்

என்பவற்றைக் குறிக்கின்றன. இத்தகைய பற்பல தத்துவ நுட்பங்கள், சிதம்பரம் கோயிலமைப்பில் புலப்படுத்தப்பட்டுள்ளன.


சிதம்பரத்தில் நடராசப் பெருமான் கோயில் மட்டுமேயன்றி, இளமையாக்கினர் கோயில் என்னும் திருப்புலீச்சுரம், பதஞ்சலி முனிவர் பூசித்த அனந்தேச்சுரம், தில்லைக் காளியம்மன் கோயில், பிள்ளையார் கோயில், மத்யந்தனேசுவரர் கோயில், செங்கழு நீர்ப் பிள்ளையார் கோயில், சேக்கிழார் கோயில், கமலீசுவரர் கோயில், வீரபத்திரர் கோயில், நந்தனர் கோயில், கூத்தாடும் பிள்ளையார் கோயில் என்னும் பலவும் உள்ளன.

மேலும் இங்குச் சிவகங்கைத் தீர்த்தம் மட்டுமேயன்றி, தெப்போற்சவம் நிகழும்ஞானப் பிரகாசர் குளம், நந்தனர் ஓமகுண்டத்தில் மூழ்கி எழுந்த ஓமக்குளம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், திருப்பாற்கடல் தீர்த்தம் என்பனவும் உள்ளன.

கிழக்கே திருவேட்களம் என்னும்தேவாரப் பாடல் பெற்ற தலம் உள்ளது. அங்கேயே உமாபதி சிவாசாரியார் எனும் சைவ சித்தாந்த சந்தானுசிரியரின் சமாதிக் கோயில் உள்ளது.

சிங்காரத் தோப்பு என்னும் இடத்தில், அவர்தம் ஞானசிரியர் ஆகிய மறைஞான சம்பந்தரின் திருக்கோயில் உள்ளது. இவைகளெல்லாம், அன்பர்கள் சிதம்பரத்திற்கு வந்து, நேரில் கண்டு தரிசித்து மகிழத் தக்கவையாகும். சிவ பக்தர்களுக்குச் சிதம்பரமானது, பூலோக கைலாசமாக விளங்குகின்றது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

[ஆசிரியரின் வானொலிப் பேச்சு, 4—8—75]



முன்மண்டப அடிக்கல் நாட்டு விழா மதிப்பீடு சுமார் மூன்றரை இலட்சம். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன், அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சி. உடன் இருப்பவர்கள், தவத்திரு சுந்தர அடிகளார், சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கவாசகம், செயல் அலுவலர் ம. ப. சீரங்கபாணி, பி.ஏ., நாள்: 13—4—75.

# சகல கலாவல்லி மாலை

''சகல கலாவல்லி மாலை'' என்பது, கலைகளுக்கெல்லாம் தெய்வம் ஆகிய சரசுவதி தேவையைப் பற்றிய துதி நூல்களுள், தலை சிறந்ததொன்றாகத் தமிழ் மொழிக்கண் விளங்குவதாகும். இதனைப் பாடியருளியவர், குமர குருபர சுவாமிகள் என்னும் ஞானத் தவ முனிவராவார்.

குமர குருபரர், திருநெல்வேலி மாவட்டத்தில், ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரின் வடபாலிலுள்ள திருக் கைலாசம் என்னும் தலத்தில், சைவ வேளாளர் குலத்தில் தோன்றியருளியவர். இவர்தம் தந்தையார், சண்முக சிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாமசுந்தரி அம்மையார். இவர் இளமையில் ஐந்து ஆண்டுகள் வரையில், பேச்சின்றி ஊமைபோல இருந்து வந்தார். அது கண்டு வருந்திய பெற்றோர்கள், இவரைத் திருச்செந்தூருக்கு எடுத்துச் சென்று, செந்திலாண்டவர் சந்நிதியில்வளர்த்தி விட்டுத் தாமும் பாடு கிடந்தனர். செந்தில் முருகன் திருவருளால், குமர குருபரர் பேசும் ஆற்றல் பெற்றார். கல்வி நலனும், புலமைநலனும், கவிதைத் திறனும் கைவரப் பெற்றார். அதன் பயனாகச் செந்திற் பெருமான் மீது ''கந்தர் கலிவெண்பா'' என்னும் நூலைப் பாடி அருளினர். இவர் பாடியருளிய நூல்களுள் முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், சிதம்பரச் செய்யுட் கோவை, நீதி நெறி விளக்கம் முதலிய பல நூல்கள் குறிப்பிடத் தக்கவை.

குமர குருபர சுவாமிகள், காசியிற் சென்று சில காலம் தங்கி வதிந்து வந்தார். அதுபோது டில்லி மாநகரை ஆண்டு வந்த முகம்மதிய அரசரைக் கண்டு நெருங்கிப் பழகி, அவர் வாயிலாகச் சில உதவிகள் பெற விரும்பினர். ஆதலின் அவ்வரசரின் மொழியில் புலமை பெற வேண்டும் எனக் கருதினர். அக்கருத்து நிறைவேறுதற் பொருட்டுக் கலைமகளைக் குறித்துச் 'சகல கலா வல்லி மாலை' என்னும் இத்துதி நூலைப் பாடினர். கலைமகளின் திருவருளால், டில்லி அரசரின் மொழியில் நல்ல புலமை பெற்றார். இவர்தம் புலமை நலனையும், தவ ஆற்றலையும் கண்டு வியந்து மகிழ்ந்த அம்முகம்மதிய அரசர், குமர குருபர முனிவர் காசியில் இருந்து தவம் புரிந்து வதிதற்கு உரிய திருமடம் அமைப்பதன் பொருட்டுக் கேதார கட்டத்தில் இடம் உதவினர். அவ்விடத்தில் அமைந்த திருமடமே, இன்றும் புகழ்மிக்க குமாரசுவாமி மடம் என வழங்கிச் சிறந்து விளங்கி வருகின்றது.

இவ்வாற்றால், குமர குருபரர் அருளிய 'சகல கலாவல்லி மாலை'யின் வரலாற்றையும் சிறப்பையும், நாம் அனைவரும் நன்கினிது உணரலாம். நவராத்திரி விழா நாளில், இச்சகல கலாவல்லி மாலையை, நம்மனோர் அனைவரும் பயின்று பாராயணம் செய்து நலமடைய முயல்வோமாக!

—ஆசிரியர்.

## (1) தகாது கொலோ?

வெண் தாமரைக்கு அன்றி நின்பதம்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண் தாமரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க, ஒழித்தான் பித்து
ஆக, உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலா வல்லியே!

பொழிப்புரை : உலகங்கள் ஏழினையும் பாதுகாத்து உண்டவனாகிய திருமால், திருப்பாற்கடலில் பள்ளி கொண்டு உறங்குதலைச் செய்யவும்; அவற்றையெல்லாம் அழித்து ஒடுக்குபவனாகிய உருத்திரன் பித்தனாகத் திரியவும்; மீண்டும் அவற்றை யெல்லாம் படைத்து உண்டாக்கும் முறைமையை உணர்ந்தவனாகிய பிரமதேவன், சுவைத்து நுகர்கின்ற கரும்பாகத் திகழ்கின்றவளே! எல்லாக் கலைகளுக்கும் உரிய தெய்வமாக விளங்கும் கலைமகளே! வெண் தாமரை மலருக்கு அல்லாமல், நின்னுடைய திருவடிகளைத் தாங்குவதற்கு, என்னுடைய வெள்ளை உள்ளமாகிய தண் தாமரைக்குத் தகுதியில்லையோ?

குறிப்புரை : எல்லாக் கலைகளுக்கும் உரிய சிறப்புத் தெய்வமாதலின் கலைமகள் ஆகிய சரசுவதியைச் 'சகல கலா வல்லி' என்றார். சகலம்—எல்லாம். கலா—கலை. வல்லி—கொடி, பெண்; வல்லவள் என்றும் ஆம்.

சகம்—உலகம். சகம் ஏழும் உண்டான்—திருமால். 'ஏழு' என்றது ஒரு பேரெண்ணைக் குறித்தது. உம்மை முற்றும்மை. திருமால் உலகத்தைக் காப்பவர். அவர், ஒரு சமயம் உலகங்களை எல்லாம் உண்டு வயிற்றில் அடக்கிக் காப்பாற்றி, அவற்றை யசோதைப் பிராட்டிக்குக் காட்டினர் என்பது வரலாறு. திருமால் திருப்பாற் கடலில் பள்ளி கொண்டிருப்பவர்.

ஆதலின் 'சகம் ஏழும் அளித்து உண்டான் உறங்க' என்றார். அளிக்க உண்டான் என்பது, அளித்து உண்டான் என வந்தது ; செயவென் எச்சத் திரிபு.

உலகத்தை ஒடுக்குபவர் உருத்திரர். அவர் சிவபிரானின் ஒரு கூறு எனத் தக்கவர். அடியவர்களிடத்து எல்லையற்ற பேரன்பும் பரிவும் உடையவராதலின், சிவபிரானுக்குப் 'பித்தன்' என ஒரு பெயர் வழங்கும். சிவபிரானின் கூறுதல் பற்றி, உருத்திரருக்குப் பித்தாதற் றன்மையை ஏற்றி 'ஒழித்தான் பித்து ஆக' என உரைக்கப்பட்டது.

உருத்திரர் உயிர்களின் கொடிய கருமமலம் பரிபாகம் ஆதற்பொருட்டு ஒடுக்கிய உலகத்தை, உயிர்களின் ஆணவமலம் பரிபாகம் ஆதற் பொருட்டுப் பிரமதேவர் மீளவும் படைப்பார். ஆதலின் அவரை, 'உண்டாக்கும் வண்ணம் கண்டான்' என்று குறிப்பிட்டார்.

கணவனைப் புகழ்தல் மனைவிக்கு மகிழ்ச்சியும் உவகையும் பயக்குமாதலின், திருமால் உறங்கவும், உருத்திரர் பித்தாகவும், உண்டாக்கும் வண்ணம் கண்டான் என்று, பிரமதேவரைக் குமர குருபரர் நயம் அமையத் திறம்படப் புகழ்ந்து கூறினர்.

வெண்தாமரை மலரில் வதிகின்ற நீ, என் உள்ளம் ஆகிய தண் தாமரையில் வந்து வதிதல் ஆகாதா? என இரந்து வேண்டுகின்றார். 'வெள்ளை உள்ளம்' என்றது இரட்டுற மொழிதல். மாசுமறுவற்றுக் கள்ளமும் சூதும் இன்றி வெள்ளை நிறமுடைய உள்ளம் என்றும், அறியாமை நிறைந்த உள்ளம் என்றும், பொருள் படும்.

(1)

## (2) பாடும் பணி

நாடும் பொருட்சுவை சொற்சுவை
 தோய்ந்து, நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்!
 பங்கயா சனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே!
 கன தனக் குன்றும், ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
 சகல கலா வல்லியே!

பொழிப்புரை : தாமரை மலர் ஆகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற, பசும் பொன்னால் இயன்ற சிறந்த கொடியைப் போல்பவளே! பருத்த தனங்களாகிய குன்றுகளையும், கூந்தலாகிய காட்டினையும் தூக்கிச் சுமக்கின்ற, கரும்பு போல்பவளே! சகல கலாவல்லியே! ஆராய்கின்ற பொருட் சுவையும் சொற்சுவையும் பொருந்தும்படி, ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நான்கு வகையான கவிகளையும் பாடுகின்ற தொண்டில் என்னை ஈடுபடுத்தி அருள்வாயாக!

குறிப்புரை : பங்கயம்—தாமரை; பங்கஜம் என்னும் சொல்லின் திரிபு. பங்கம்—சேறு; ஜம்— தோன்றுவது. ஆசனம்—இருக்கை. கரும்பு, குன்றையும் காட்டையும் சுமப்பதாகக் கூறியது அதிசய அணி. ஐம்பால்—கூந்தல் ; குழல் அளகம் கொண்டை பனிச்சை துஞ்சை என்னும் ஐந்து பகுப்பாக வகிர்ந்து முடிக்கப் படுதலின், கூந்தலுக்கு ஐம்பால் எனப் பெயர் அமைந்தது (சிந். 2437). குழல் அளகம் வகுத்தும், கொண்டை தொகுத்தும், பனிச்சை துஞ்சை விரித்தும் முடிக்கப்படும் என்க.

நினைத்த மாத்திரத்தில் விரைந்து பாடுவது ஆசுகவி ; கற்பவர் நெஞ்சம் களிதுளும்பும்படி சொல்லும் பொருளும் கற்பனையும் இனிமை அமையும்படி பாடுவது மதுர கவி ; மாலை மாற்று ஏகபாதம் கூடசதுக்கம் எழுகூற்றிருக்கை முரசபந்தம் நாகபந்தம் முதலிய பல்வேறு சித்திர அமைப்புக்கள் உடையதாகப் பாடுவது சித்திர கவி ; ஏதேனும் ஒரு பொருளை மிக விரித்துக் காப்பியம் முதலியனவாகப் பாடுவது வித்தார கவி.

(2)

## (3) என்று கூடுங் கொலோ?

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்அமிழ்து
 ஆர்ந்து, உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கு, என்று கூடும் கொலோ?
 உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
 கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
 சகல கலா வல்லியே!

பொழிப்புரை : நுண்ணறிவு கொண்டு ஆராய்ந்து தெளிவுற விளக்குகின்ற நூல்களை இயற்றுகின்ற புலவர்கள், கவியாகிய மழை பொழிதலைக் கண்டு, களிப்பு அடைகின்ற தோகையை உடைய மயிலே! சகல கலா வல்லியே! நின்னால் அருளப்பெறும் செழுமை மிகுந்த தமிழாகிய தெளிந்த அமிழ்தத்தை நிறைய உண்டு, நின்னுடைய அருளாகிய கடலில் குளித்துத் திளைக்கும்படியான சிறந்த பேறு எளியேனுக்கு எப்போது வாய்க்குமோ?

குறிப்புரை : கலாபம்—தோகை. சாயலும் மென்மையும் பற்றி மயிலாக உருவகித்தார். மயில், மேகம் மழை பொழிதலைக் கண்டு களிக்கும் இயல்புடையது. அதுபோலக் கலைமகளாகிய மயில், புலவர்கள் பொழிகின்ற கவியாகிய மழையைக் கண்டு களிப்பதாகக் குறிப்பிட்ட பொருத்தம், அறிந்து மகிழ்தற் பாலது.

(3)

## (4) பணித்தருள்வாய்

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
 கல்வியும், சொற்சுவைதோய்
வாக்கும், பெருகப் பணித்தருள்வாய்!
 வடநூற் கடலும்,
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்,
 தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
 சகல கலா வல்லியே!

பொழிப்புரை : வடநூல்கள் ஆகிய கடலையும், தேங்கி நிறைகின்ற செழுந்தமிழாகிய செல்வத்தையும், அடியார்களின் செம்மையான

சிறந்த நாவில் வீற்றிருந்து காக்கின்றகருணையை யுடைய கடலே! சகல கலா வல்லியே! செய்யுளை இயற்றும் திறனும், தமிழ் நூல்களின் அகப்பொருள் புறப்பொருள் என்னும் துறைகளைப் பொருந்திய கல்வி அறிவும், சொற்சுவை மிகுந்த வாக்கு வன்மையும், எமக்குப் பெருகும்படி வழங்கி அருள்வாயாக!

குறிப்புரை : சரசுவதி வடமொழி தென்மொழியாகிய இரண்டிற்கும் உரிய அதி தெய்வம். தொண்டர்களின் நாவில் வீற்றிருந்து கலைமகள் காத்தருள்கின்றாள். தன்னை வழிபடும் அடியார்களுக்கு அருள் புரிதலில் அவள் கருணைக் கடலாக விளங்குகின்றாள். தூக்கு — செய்யுள், செய்யுள் இயற்றும் திறன். பனுவல்— நூல். கல்வி—நூலறிவு. வாக்கு—கவிபாடும் திறன், பேச்சு வன்மையுமாம். (4)

## (5) அலராதது என்னே?

பஞ்சு அப்பு இதம்தரு செய்யபொற்
 பாத பங்கேருகம்என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே?
 நெடுந்தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
 செந்நாவும், அகமும், வெள்ளிக்
கஞ்சத்தவிசு ஒத்துஇருந்தாய்!
 சகல கலா வல்லியே!

பொழிப்புரை : நீண்ட நாளத்தை உடைய தாமரையில் வீற்றிருப்பவனும், அன்னக் கொடியை உயர்த்தி இருப்பவனுமாகிய பிரம தேவனது சிவந்த நாக்கிலும், தூய உள்ளத்திலும், வெள்ளைத் தாமரை மலராகிய தவிசின் கண் வீற்றிருப்பது போல எழுந்தருளி விளங்குபவளே! சகல கலா வல்லியே! செம் பஞ்சுக் குழம்பானது அப்பித் தீட்டப் பெற்ற—நன்மையைத் தருகின்ற—சிவந்த—பொன்போலும் நின் திருவடியாகிய தாமரை, என்னுடைய நெஞ்சமாகிய தடாகத்தில் மலராமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

குறிப்புரை : பிரமதேவர் தாமரை மலரில் வீற்றிருப்பவர். அன்னக்கொடியை உடையவர். அவரது நாவில் கலைமகள் தங்கியிருந்து வாழ்வதாகக் கூறுவது கவி மரபு. பிரமதேவரின் நாவில் மட்டுமேயன்றி, அவர்தம் திருவுள்ளத்திலும், கலைமகள் தங்கி வாழ்வதாகக் குமர குருபரர் அழகுறப் பாடியருளினர், கணவரின் உள்ளத்தில் இடம் கொண்டு வீற்றிருக்கப் பெறுதல் மனைவியர்க்குச் சிறப்பாகும். இஃது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணி. ‘என்நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே’ என்றபடி, கணவனின் உள்ளத்தில் இடம் பெற்று வாழ்தலே மனைவிக்குச் சிறந்த பேறு ஆதலின், இங்ஙனம் கூறினர். கலைமகளின் திருவடிகள் தாமரை மலர் என விளங்குபவை. தாமரை மலர் குளங்களில் வளர்ந்து மலர்தல் இயல்பு. ஆதலின் என்னுடைய உள்ளமாகிய குளத்திலும், நின்னுடைய திருவடியாகிய தாமரை மலர்தல் வேண்டும் என்பது கருத்து. பஞ்சு—செம்பஞ்சுக் குழம்பு. இதம்—நன்மை. பங்கேருகம்—தாமரை. தடம்—தடாகம், குளம். அம்சம்—அன்னம். துவசம்—கொடி, அஃது ‘அஞ்சத்துவசம்’ எனத் தமிழியல் முறையில் வந்தது. கஞ்சம்—தாமரை. தவிசு— இருக்கை, ஆசனம். (5)

## (6) எளிதெய்த நல்காய்

பண்ணும் பரதமும் கல்வியும்
 தீஞ்சொற் பனுவலும், யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
 நல்காய்! எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
 கனலும் வெம்காலும், அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
 சகல கலா வல்லியே!

பொழிப்புரை : எழுதப் பெறாத வடமொழி வேதங்களிலும், வானம் நிலம் நீர் நெருப்பு காற்று என்னும் ஐம்பூதங்களிலும், அன்பர்களின் கண்கள் உள்ளங்கள் ஆகியவற்றிலும், பரவி நிறைந்திருப்பவளே! சகல கலா வல்லியே! இசையும் நடனமும் நூலறிவும், இனிய சொற்களை உடைய கவிதையும் ஆகியவற்றை, யான் நினைக்கின்ற பொழுதே எளிதாக அறிந்துணர்ந்து இயற்றவல்ல ஆற்றலை அடையும்படி, எமக்கு அருள் செய்வாயாக!

குறிப்புரை : எழுத்து வடிவில் இல்லாமல், தொன்று தொட்டுச் சந்தை ஓதி வளர்க்கப் பெற்று வழங்கி வருதலின், வடமொழி வேதம் ‘எழுதா மறை’ எனப்படும். கலைமகளின் புகழும் சிறப்பும் வேதங்களில் ஓதப்படுகின்றன. நிலம் நீர் தீ காற்று விசும்பு என்னும் ஐம் பெரும் பூதங்களிலும், தன் தெய்வத் தன்மையால், அவள் பரவி விரவி நிற்கின்றாள். அடியார்கள் தம் கண்களால் கண்டும், கருத்தால் நினைந்து தியானித்தும், வழிபட்டும் வருகின்றனர். ஆதலின் இவ்விடங்களில் எல்லாம் கலைமகள் நிறைந்திருப்பதாகக் குமர குருபரர், புகழ்ந்து துதிக்கின்றார். சகல கலாவல்லியாகிய கலைமகளைத் தொழுதால், இசை நடனம் நூல் அறிவு கவித்திறன் முதலிய எல்லாக் கலைத் துறைகளிலும், சிறந்த புலமையை எளிதாகப் பெறலாம் என்பது கருத்து. (6)

## (7) கடைக்கண் நல்காய்

பாட்டும் பொருளும், பொருளால்
 பொருந்தும் பயனும், என்பால்
கூட்டும்படி, நின் கடைக்கண் நல்காய்!
 உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
 அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
 சகல கலா வல்லியே!

பொழிப்புரை : அன்பும் பக்தியும் கொண்டு, அடியார்கள் இயற்றுகின்ற கலைநலம் சிறந்த தமிழ்க் கவிதை ஆகிய பாலையும், நீரையும் பிரித்துத் தெளிவுறுத்தி நுகர்கின்ற வெள்ளை அன்னமாகிய பெண் தெய்வமே! சகல கலா வல்லியே! செய்யுளும், அதன்

கருத்தும், அக்கருத்தால் பொருந்துகின்ற அறம் பொருள் இன்பம் வீடு என்னும் பயன்களும், எம்பால் வந்து சேரும்படி, நின்னுடையகடைக் கண் பார்வையை வழங்கி அருள்வாயாக!

குறிப்புரை : வெண் தாமரை மலரில் வீற்றிருத்தலாலும், அன்னம் போன்ற நடையும் சாயலும் உடைமையாலும், வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு விளங்குதலாலும், 'வெள்ளோதிமப்பேடு' என்றார். ஓதிமப் பேடு—பெண் அன்னம். அன்னமானது, பாலையும் நீரையும் தனித் தனியே பிரித்து உண்ணும் இயல்பின எனக் கவிஞர்கள் பாடுவார்கள். அதற்கு ஏற்பக் கலைமகளாகிய அன்னமும், அடியவர்கள் இயற்றும் கவிதையாகிய பாலில் உள்ள நீராகிய குற்றங்களைப் பிரித்து ஒதுக்கி உண்டு களித்து அருள் புரிகின்றது என்றார். இவ்வாறன்றி, அவர்கள் பாடுகின்ற கவிதையாகிய தீம்பாலில், அமிழ்தத்தின் சுவையும் பண்பும் வெளிப்பட்டு விளங்கும்படி கலைமகள் அருள் புரிகின்றாள் எனக் கொள்ளினும் ஆம்.

## (8) அடிமை கொள்வாய்

சொல் விற்பனமும், அவதானமும்,
கவி சொல்ல வல்ல
நல் வித்தையும், தந்து அடிமை கொள்வாய்!
நளினாசனம் சேர்
செல்விக்கு அரிது என்று, ஒருகாலும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெரும் செல்வப் பேறே!
சகல கலா வல்லியே!

பொழிப்புரை : தாமரை மலராகிய இருக்கையில் வீற்றிருக்கின்ற, செல்வத்திற்குரிய திருமகளுக்கு இயலாதது என்று, ஒரு காலத்திலும் அழியாதபடி கல்வியாகிய பெரிய செல்வத்தின் பேற்றினை அருளுகின்ற சகல கலா வல்லியே! அவையிற் பேசுகின்ற அரிய சொல் வன்மையையும், அவதானம் என்னும் சிறந்த நினைவாற்றலையும், கவி பாடுதற்கு வல்லமை உடைய நல்ல கலைத் திறமையையும்கொடுத்து, எம்மை நின் அடிமையாக ஆட்கொண்டருள்வாயாக!

குறிப்புரை : நளினம் — தாமரை, செந்தாமரை. செல்வி—செல்வத்துக்கு உரிய திருமகள். பொருட் செல்வமானது விரைவில் அழிந்துபடும் இயல்புடையது. கேடில் விழுச்செல்வமாகிய கல்விச் செல்வமோ, என்றும் அழியாமல் எழுமையும் ஏமாப்பு உடையதாகத் திகழ்வது. அத்தகைய கல்விச் செல்வத்தை வழங்குபவள், சகல கலாவல்லியாகிய கலைமகளே யாதலின், 'ஒருகாலமும் சிதையாமை நல்கும் கல்விப் பெருஞ் செல்வப் பேறே!' எனச் சிறப்பித்துப் புகழ்ந்தார். சொல் விற்பனம்—சொல் வன்மை, பேசும் திறன். அவதானம்—ஒரே சமயத்தில் பல செய்திகளைக் கூர்ந்து நோக்கி மறவாமல் கூறவல்ல நினைவாற்றல். வித்தை—கலைத்திறன். (8)

## (9) நினைப்பவர் யார்?

சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன,
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலம்தோய் புழைக் கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு,
அரசன்னம் நாண, நடை
கற்கும் பதாம்புயத்தாயே!
சகல கலா வல்லியே!

பொழிப்புரை : நிலத்தில் படும்படி நீண்ட, துளை அமைந்த துதிக்கையை உடைய, நல்ல பெண் யானையுடன், அரச அன்னமும் நாணும்படி, அழகிய நடையைப் பழகுகின்ற திருவடியாகிய தாமரையை உடையவளே! சகல கலா வல்லியே! சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக விளங்குகின்ற, உண்மை மெய்யுணர்வினது காட்சி என்று சொல்லும்படி விளங்குகின்ற உன்னை, மனத்தால் அறிந்து அளந்து நினைக்க வல்லவர்கள் யாவர்?

குறிப்புரை : பெண்களின் நடைக்குக் கவிஞர்கள், பெண்யானையின் நடையையும், அன்னத்தின் நடையையும் உவமையாகக் கூறுவர். குமர குருபரர் அங்ஙனம் கூறாமல், கலைமகளின் நடையழகைக் கண்டு யானையும் அன்னமும் நாணுவதாகக் குறிப்பிட்டார். துதிக்கை நீண்டு நிலத்தில் படும்படி விளங்குவது, சிறந்த யானைக்கு இலக்கணம் என நூல்கள் கூறும். ஆதலின் 'நிலம் தோய் புழைக்கை நற்குஞ்சரத்தின் பிடி' என்றார். புழை—துளை. புழைக்கை—துதிக்கை. குஞ்சரம்—யானை. பிடி—பெண் யானை. 'அரச அன்னம்' என்பது அரசன்னம் என வந்தது. பதம்—திருவடி. அம்புயம்—தாமரை. பதம்+அம்புயம். 'பதாம்புயத் தாய்' என்பதற்குத் திருவடிகளை உடைய தாயே என்றும், பொருள் கொள்ளலாம்.

ஞானம்—மெய்யுணர்வு. ஒருவரின் உணர்வு அவர் கூறும் சொல்லிலும், அஃது உணர்த்தும் பொருளிலும் வெளிப்படும். சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக விளங்குவதும், உயிராக உலவுவதும், உயிராற்றலை விளைவிப்பதும், ஞானமே ஆதலின், ''சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானம்'' என்றார். மெய்யுணர்வாகிய ஞானத்திற்குத் தெய்வமாக விளங்குபவள் கலைமகள். ஞானமே அவளது திருவுருவம். ஞானம்—தூயது, வெண்மையானது. கலைமகளின் தோற்றம் ஞானத்தின் தோற்றம் (காட்சி) எனும்படி உள்ளது என்பார் ''மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன நிற்கின்ற நின்னை'' என்றார். நின் புகழையும் சிறப்பையும் மனத்தால் நினைந்து ஆராய்ந்து அளந்து கூற வல்லவர்கள் ஒருவரும் இல்லை என்றபடி. (9)

## (10) கண்கண்ட தெய்வம்

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும், என்
பண்கண்ட (அ)ளவில், பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்


விண்கண்ட தெய்வம் பலகோடி உண்டேனும்
விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலா வல்லியே!

பொழிப்புரை : சகல கலா வல்லியே! உலகத்தைப் படைக்கின்ற பிரமதேவர் முதலாக, வானுலகத்தில் விளங்குகின்ற தெய்வங்கள் பலகோடி உண்டு எனச் சிலரால் கூறப்படினும், உண்மையாகக் கூற முற்பட்டால், உன்னைப் போன்று கண்கூடாகப் பலனைத் தருகின்ற தெய்வம் வேறு உண்டோ? வேறு எதுவும் இல்லையாதலின், உலகம் முழுவதற்கும் நிழலைத் தருகின்ற வெண் கொற்றக் குடையின் கீழே வீற்றிருக்கும் சிறப்பின் மிக்க பெரிய அரசர்களும், எம்முடைய பாடற்றிறனை அறிந்த உடனே, எம்மைப் பணிந்து சிறப்புச் செய்யும்படி அருள் செய்வாயாக!

குறிப்புரை : கல்வியானது, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பேறுகளையும் பயக்கும்; புகழை விளைவிக்கும்; கவலைகளைத் தீர்க்கும்! இவ்வாற்றால் சிற்றுயிர்களுக்கெல்லாம் உற்ற துணையாக் விளங்குவது கல்வியே யாதலின், அதனை அளிக்கும் தெய்வம் ஆகிய கலைமகளை ''விளம்பில் உன்போல் கண்கண்ட தெய்வம் உளதோ?'' என்று சிறப்பித்தார். ''தெய்வம் பல்கோடி உண்டேனும்'' என்பதில் உம்மை எதிர்மறை. அஃதாவது தெய்வம் ஒன்றே; ஒரு சிலர் பல கோடி தெய்வங்கள் உண்டு (Polytheism) என்று கூறுவது உண்மையன்று; அவர்கள் கூறுவதனை வாதத்திற்கென ஒரோ வழி உடன்படினும், உன்போற் கண் கண்ட தெய்வம் வேறு இல்லை என்பது கருத்து. புவியரசரும் போற்றும் கவியரசராக ஆகுமாறு, தமக்கு அருள் செய்தல் வேண்டுமென்பது இப்பாடலின் உட்கிடை. 'மன்னரும்' என்பதில் உம்மை சிறப்பும்மை. டெல்லி அரசரின் அன்பும் ஆதரவும் தமக்குக் கிடைத்தல் வேண்டும் என்னும் தமது விருப்பத்தை நிறைவேற்றி அருளும்படி, குமர குருபரர் கலைமகளை இப்பாடலில் வேண்டுதல் செய்து கொண்டமை அறிந்து மகிழ்தற்குரியது. கண்ட+அளவில், கண்டளவில் என வந்தது; தொகுத்தல் விகாரம். கலைமகளின் அருளைப் பெறக் குமர குருபரர் பாடியருளிய இத்துதி நூலைப் பாராயணம் செய்வதனால், நாமும் கலைமகளின் அருளைப் பெறலாம் என்பதில் ஐயம் இல்லை.

திமிரம் அகற்றும் சிறப்புமிகும்
தெய்வக் கவிஞர்! திருச்செந்தூர்
நமது முருகன் அருள்பெற்ற
ஞானச் செல்வர்! தவமுனிவர்!
அமிழ்தின் இனிய நூல்கள்பல
அளித்த கலைஞர்! காசிவரை
தமிழை வளர்த்த குமரகுரு
பரநற் சான்றோர் தாள்பணிவாம்

—ஆசிரியர்.



மன்னார்குடி அருள்திரு இராசகோபால சுவாமி திருக்கோயிலில் நிகழ்ந்த ''திருமண மண்டபத் திறப்புவிழா'' நிகழ்ச்சியில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்களும், உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசுவாமி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. கு. பாலகிருட்டினன், எம்.எல்.ஏ., அவர்களும், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. து. கோ. சந்திரசேகரன் செட்டியார் அவர்களும், பிறரும் கலந்து கொண்டு சிறப்பித்தல். (10-7-1975).

# அருள்திரு
# கோதண்டராமசுவாமி ஆலயம்

## அதம்பார் (அஞ்சல்), நன்னிலம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

அருள்திரு கோதண்டராமசுவாமி ஆலயம், நன்னிலம் — ஆடுதுறை பேருந்து மார்க்கத்தில், நன்னிலத்திலிருந்து வடக்கே 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. இக்கோவிலைப் பார்வையிட்ட பாஸ்கரத் தொண்டைமான் தென்னாட்டுக் கோவில்கள் பற்றி எழுதிய கட்டுரையில் ''அழகுள்ள இராமனைத் தரிசிக்க'' அதம்பார் செல்லவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இத்தலத்தின் புரான வரலாறு.

*''மாரீசன் மாயமானுய்த் தோன்றியதும் சீதை மானை விரும்பியதும் லட்சுமணர் இது மாயமான் என்று தடுத்ததும் ஸ்ரீ இராமன் தொடர்ந்து வந்து அதம்பார் என்று கூறும் ஸ்ரீ இராமபிரானை இங்கு மானுடன் தரிசிக்கலாம்''.*

ஸ்ரீ இராமபிரான் கம்பீரமாகவும், ஆஜானுபாகுவாகவும் இருக்கும் தோற்றமும் ஸ்ரீ இளைய பெருமாள் (இலட்சுமணர்) ஸ்ரீ இராமனைச் சற்றுத் திரும்பி நோக்கும் காட்சியும் ஸ்ரீ சீதை தன் விருப்பத்தைத் தெரிவிப்பதுபோல் நின்ற சாயலுடன் நிற்கும் தோற்றமும் கூடிய பிம்ப லட்சணம் உள்ளதை இங்குக் கண்கூடாகக் காணலாம்.

இக்கோவிலைத் திருப்பணி செய்யவேண்டிய நிலைமையில் உள்ளது. இதற்காக நாகப்பட்டினம் உதவி ஆணையர் அவர்கள் அனுமதியுடன் திருப்பணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திருப்பணி செய்வதற்கு ரூ. 30,100/-க்கு எஸ்டிமேட் போடப்பட்டு இந்து சமய அறநிலைய ஆணையர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ளது. நிதிவசதியின்மையாலும், அரசின் உதவி கிடைக்காததாலும் திருப்பணி துவக்கப்படாமல் உள்ளது.

அழகுள்ள ஸ்ரீ இராமனைத் தரிசிக்க அதம்பார் வர மெய்யன்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

**பி. ஆறுமுகம்பிள்ளை,**
நிர்வாக அறங்காவலர்.

# திருப்புலியூர் மாயப்பிரான்

—ந. சுப்புரெட்டியார்

இத்திருப்பதி எம்பெருமான் மீது நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளியுள்ள பதிகத்தைச் சிந்திக்கின்றோம். இந்தப் பதிகம் தோழியின் பாசுரமாகச் செல்லுகின்றது. திருவாய் மொழியில் தோழி பாசுரமாக வரும் பதிகங்கள், மூன்று. இம்மூன்று பதிகங்களும் பிரணவத்தில் உள்ள உகாரத்தில் பொருளான அநந்யார்ஹத்துவம் (எம்பெருமானைத் தவிர வேறு ஒருவருக்கு உரியதல்லாத தன்மை) வெளியிடப்பெறுகின்றது என்பதை நாம் அறிவோம். ஆன்மாக்கள் யாவும் பரமபத நாதனுக்கே அடிமை என்பதையும் உணர்வோம். இந்தத் திருவாய்மொழியில் தோழியின் பாசுரம் செல்லும் முறையை நினைத்துப் பார்க்கின்றோம்.

பராங்குச நாயகி வயது முதிர்ந்துமங்கைப் பருவம் அடைகின்றாள்; கணவனை நாடி அடைய வேண்டிய வயதல்லவா இது. திருப்புலியூர் எம்பெருமானுடன் இயற்கைப் புணர்ச்சியும் நடைபெற்று விடுகிறது. தலைவியின் உயிர்த் தோழியானவள் தலைவியின் உருவ வேறுபாட்டாலும் சொற்களின் வேறுபாட்டாலும் புணர்ச்சி உண்டானமையை ஒருவாறு அறிகின்றாள். தன் மகளின் உண்மை நிலையை அறியாத தாய் தந்தையர் இவளுடைய திருமணத்தை நிச்சயித்து மண முரசும் அறைவிக்கின்றனர். இதனை அறிந்த தோழி மனங்கவல்கின்றாள். 'பரதனே அரசன்' என்று அறைவித்த முரசொலி செவிப்பட்டபோது பரதாழ்வான் எங்ஙனம் மனக்கிலேசம் அடைந்தானோ அங்ஙனமே தோழி இப்போது துயர் அடைகின்றாள். இவ்வாறு சிந்திக்கின்றாள். ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில், வாழகில்லேன்''(22) என்று கூறியவள் இவள். ''அன்றிப்பின் மற்றொருவர்க்கென்னைப் பேச லொட்டேன் மாலிருஞ் சோலையெம் மாயற் கல்லால்'' என்ற பிடிவாதத்தைப் பிடிக்கின்றவள். மாறாக ஏதேனும் நடைபெற்றால் இவள் உயிர் தரியாள். அப்படி நடைபெறுவதை எப்படியாயினும் தடுத்தேயாக வேண்டும். அங்ஙனம் செய்ய முயலுங்கால் திருப்புலியூர் நாயனாருடன் புணர்ச்சி உண்டானமையை அறிவிப்பின், அஃது என் காவற் சோர்வாலே நிகழ்ந்தது என்று ஏற்பட்டுவிடும். அறிவியாது ஒழியில் இவள் வாழாள். இந்நிலையில் செய்ய வேண்டியது என்ன?'' என்பதாக.

தோழி இங்ஙனம் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது தலைவியை பெற்றோரும் மற்றோரும் தலைவியின் வடிவ வேறுபாட்டிற்குக் காரணம் யாதாக இருக்குமோ என்று ஆராயும் நிலையைக் காண்கின்றாள். தானும் அவர்களுடன் ஆராய்வதாகச் சேர்ந்துகொண்டு இதனை விலக்கவேண்டும் என்று உறுதி செய்கின்றாள். அந்த முறையைக் கூறுவதாக அமைந்ததே இத்திருவாய் மொழி. இதுவே அகப்பொருள் நூலார் குறிப்பிடும் 'அறத்தொடு நிற்றல்' (23) என்பதாகும். இத்திருப்பதி எம்பெருமான் மீதுள்ள பதிகம் இதனையே கூறுகின்றது.

தோழி முதலில் இவ்வாறு தொடங்குகின்றாள் :

''கருமாணிக்க மலைமேல் மணித்
 தடந்தாமரைக் காடுகள் போல்,
திருமார்வு வாய்கண்கை யுந்தி காலுடை
 யாடைகள் செய்யபிரான்
திருமால் எம்மான் செழுநீர் வயல்
 குட்டநாட்டுத் திருப்புலியூர்
அருமாயன் பேரன்றிப் பேச்சிலள்
 அன்னைமீரிதற் கென் செய்கேனோ''

(மணித் தடம்—தெளிந்த தடாகம்; உந்தி—கொப்பூழ்; கால்—திருவடி; உடை—தரித்திருக்கும் செய்ய ஆடைகள் எனக் கூட்டுக; பேர்—திருநாமம்.)

என்பது பாசுரம். எம்பெருமானின் திவ்விய அவயவங்களின் அழகினைக் கண்டு அவ்வடிவழகு அல்லது மற்றொன்று அறியாதபடி ஈடுபட்டாள் என்று தாய்மார்க்கு உரைக்கின்றாள். அநுபவிப்பார் நெஞ்சு குளிரும்படி கருமையுடையதாய், பிரகாசத்தால் மிக்கு இருப்பதாய், தனக்கு மேல் ஒன்று இல்லாததான இனிமையுடையதாய் இருப்பது ஒரு மலை மேலே என்ற கருத்துத் தோன்ற 'கருமாணிக்க மலைமேல்' என்கின்றாள். இத்தகைய ஒரு மலைமீது தெளிந்த ஒரு தடாகம் தாமரைக் காடுகள் பூத்ததுபோல் எம்பெருமானது எழில் நீல மேனியில் திருமார்பு, திருவதரம், திருக்கண்கள், திருக்கைகள், திருஉந்தி, திருவடிகள் முதலிய உறுப்புக்கள் அமைந்துள்ளன என்பது தோன்ற 'மணித்தடம் . . . ஆடைகள் செய்யபிரான்' என்கின்றாள். பக்தர்கட்குப் பற்றுக்கோடாகவுள்ள பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கும் திருமார்பாதலால் சிவந்து காணப்பெறுகின்றது. அப்பிராட்டி வழியால் உறவு செய்தார்க்கு அநுகூலமான சொற்களைப் பேசுகிறது அவனது திருப்பவளம். இன்சொற்கள் சொல்லப்புக்கு இனியனான தன்னைக் கண்ட காட்சியால் தடுமாறினால்,

குறையும் தலைக்கட்டிக் கொடுப்பது செவ்வரி படர்ந்த திருக்கண். அவனது நோக்கிற்குத் தோற்றுரை அணைப்பது திருக்கை. உத்தேசிய மான நிலத்தில் (அதாவது திருவடிகளில்) விழா நின்றால் காற்கட்டவல்லது திருஉந்தி. இது நடுவே அமுக்கும் 'சுழி' அன்றோ? இவை எல்லாவற்றிற்கும் தோற்று விழும் இடம் எம் பெருமானது திருவடிகள். இவையாவும் காட்டி லெறிந்த நிலா போலாகாமல் பக்தர்கட்கு அனு பவிக்கக் கொடுக்குமவன் என்பதனைக் குறிப் பிடவே 'பிரான்'(25) என்கின்றாள். இங்ஙனம் எம்பெருமானின் திருமேனியழகினை,

''என் அரங்கத்து இன்னமுதர்
குழல் அழகர் வாய் அழகர் கண் அழகர் கொப்பூழில்
எழுகமலப் பூ அழகர்'' 26

என்று ஆண்டாள் கூறி அநுபவித்ததையும் நினைத்துப் பார்க்கின்றோம். மேலும் இங்கு பர வியூக விபவம் இவைகளுக்குரிய திருநாமங் களையும் சொல்லாமல், அல்லாத உகந்தருளின் திவ்விய தேசங்களில் நிற்கின்றவர்களின் பெயர் களையும் சொல்லாமல் குட்டநாட்டுத் திருப்புலி யூர் எம்பெருமானுடைய திருநாமங்களையே வாய்வெருவா நிற்கின்றாள் என்பது தோன்றத் 'திருப்புலியூர் அருமாயன் பேரன்றிப்பேச்சிலள்' என்கின்றாள். அவள் நிலை தனக்கு அப்போது தான் தெரியும் என்பது தோன்ற 'அன்னைமீர் இதற்கு என் செய்கேன்' என்கின்றாள்.

இந்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பதியைச் சதா புகழ்ந்து கொண்டிருக்கின் றாள் தலைவி என்பதனையும் குறிப்பிடுகின்றாள். 'புன்னையும் பொழில் சூழ் திருப்புலியூர் புகழும் இவளே'' என்பதாக.

''அணி மேருவின் மீதுலவும்
துன்னு சூழ் சுடர் ஞாயிறும்
அன்றியும்பல் சுடர்களும் போல்
மின்னு நீள்முடி யாரம்பல்கலன்
தானுடை எம்பெருமான்''

(அணிமேசு—அழகிய மேரு; துன்னு—செறிந்து; ஞாயிறு—கதிரவன்; பல்சுடர்—கோள்கள்; உடுக்கள்; முடி—கிரீடம்; ஆரம்—மாலை).

என்ற பாசுரப் பகுதியால் அத்திருப்பதி எம் பெருமானது திவ்விய ஆபரண அழகில் தலைவி ஈடுபட்டுப் பேசும்படிகளை விரித்துரைக்கின்றாள். ''மேரு மலையின்மீது ஆயிரம் கதிர்கள் விரித் தாற் போன்ற திருவபிடேகமும், விண்மீன் கூட் டங்கள் மின்னினாற்போன்ற பல மாலை வரிசை களும் மற்றும் அணி வகைகளும் ஒளிரும் அழகை என்னவென்று சொல்வது?'' என்று வாய்வெருவி நிற்கின்றாள் என்று குறிப்பிடுகின் றாள் தோழி. இவற்றாலும் சோலையைப் பற்றிக் குறிப்பிடுவதாலும் இவளுக்கு அத்தலத்து எம் பெருமானோடு கலவி நேர்ந்ததாகவே நினைக்கத் தோன்றுகிறது என்பது தோழியின் குறிப்பு.

ஆழ்வார் நாயகி இரவும் பகலும் திருப் புலியூர் வளத்தையே புகழ்ந்து கொண்டிருக்கின் றாள் என்பதை அடுத்துக் குறிப்பிடுகின்றாள் தோழி.

''புகழும் இவள் நின் றிராப்பகல்
பொருநீர்க்கடல் தீப்பட்டு, எங்கும்
திகழும் எரியோடு செல்வதொப்பச்
செழுங்கதிர் ஆழிமுதல்
புகழும் பொருபடை ஏந்திப்போர்
புக்கசுரரைப் பொன்றுவிதிதான்
திகழும் மணிநெடு மாடம் நீடு
திருப்புலி யூர்வளமே'' 29

(பொருநீர் கடல்—விலை எறியும் கடல்; தீப் பட்டு—நெருப்புக் கொளுந்தி; எரி—தீக்கொழுந்து; ஆழி—சக்கரம்; பொருபடை—போர்செய்யும் ஆயுதங்கள்; பொன்றுவித்தான்—அழித்தவன்).

என்பது பாசுரம். கடல் வண்ணனை எம்பெரு மான் திருவாழியாழ்வான் முதலான திவ்வியா யுதங்களை யணிந்து கொண்டு எழுந்தருள்வது 'ஒரு கடல் நெருப்புக் கொளுத்தி நடந்து செல் லுகின்றதோ?' என்று ஐயுறும் படியாகவுள்ள தென்கின்றாள் தலைவி. அன்றியும், இந்த எம் பெருமாள் திருவாழி திருச்சங்கு முதலிய திவ் வியாயுதங்களுடன் போர்க்களத்தின் சென்று அரக்கர்களைத் தொலைத்தருளும் பேராற்றலை இரவும் பகலும் இடையீடின்றிப் புகழ்ந்து கூறுகின்றாள். இதனாலும் இத்திருப்பதி எம் பெருமானுடன் இன்னுக்கு ஒரு சம்பந்தம் நிகழ்ந்ததாகத் தோன்றுகின்றது என்று குறிப் பாக புலப்படுத்துகின்றாள் தோழி.

மேலும் தோழி கூறுகின்றாள் : ''வண்டி னம் முரலும் சோலை, மயில் இனம் ஆடும் சோலை, கொண்டல்மீதணவும் சோலை, குயில் இனம் கூவும் சோலை, அண்டர்கோன் அமரும் சோலை'(30) என்றெல்லாம் சோலைகளின் வளத் தைப் பேசுகின்றான்; வயலடங்கலும் கரும்பும் செந்நெல்லுமாய் வளர்ந்திருக்கும் அழகைச் சொல்லுகின்றாள்; அங்கு உழுவதும் நடுவது மான பண்ணையில் நடைபெறும் செயல்களின் அழகினையும், சுற்றிலும் நீர் நிலைகள் சூழ்ந்திருக் கும் வனப்பையும் வாய்வெருவுகின்றாள். இங் ஙனம் இப்பெண்பிள்ளை பேசும் அழகுகளை என் சொல்வேன்? இத்துடன் நின்றாளா?

''சீர்வளம் கிளர் மூவுல
குண்டுமிழ் தேவபிரான்
பேர்வளம் கிளர்ந்தன்றிப்பேச்
சிலள்.'' 31

அத்தலத்து எம்பெருமானின் 'ஆபத்தில் தோழன்' என்றிருக்கும் திருக்குணத்தில் ஈடு பட்டு அவன் பிரளயகாலத்தில் எல்லா உலகங் களையும் தன் திரு வயிற்றில் வைத்துப் படைப் புக்காலத்தில் அவற்றை வெளிநாடு காண உமிழ்ந்த அற்புதச் செயலையும் பேசுகின்றாள். இவற்றையெல்லாம் சொல்லும்போது இவளு டைய வடிவு ஆபரணம் பூண்டாற்போன்று விளங்கும் அளவு சொல்லுந்தரமன்று'' என்று குறிப்பிடுகின்றாள். இதனாலும் இத்தலத்து எம் பெருமானுடன் 'கலவி நேர்ந்திருக்க வேண்டும் பால் தோன்றுவதை ஊகிக்க வேண்டும்' என்கின்றாள்.

இன்னும் இத்தலத்து எம்பெருமானுடன் புணர்ச்சி நடைபெற்றிருத்தல் கூடும் என்ப தற்குச் சான்றுகளையும் காட்டத் தொடங்குகின் றாள் தோழி.

''புனையிழைகள் அணியும் ஆடையுடையும்
புதுக்க ணிப்பும்
வினையும் நீர்மைய தன்று இவட்கிது;
நின்று நினைக்கப்புக்கால்
சுனையினுள் தடந் தாமரை
மலரும் தண் திருப்புலியூர்
முனைவன் மூவுல காளிஅப்பன்
திருவருள் மூழ்கினளே'' 32

[புனை—பூணுதல்; புதுக்கணிப்பு—வடிவில் பிறந்த புதுமை; முனைவன்—முன்னோன்; ஆளி—ஆள்பவன்]

என்பது பாசுரம். தலைமகளிடத்துக் காணப் பெறும் மூன்று சிறப்புக்களை எடுத்துக்காட்டித் தன் ஊகத்தை உறுதிப்படுத்துகின்றாள் தோழி. 'அவள் அணிந்திருக்கும் ஆபரணங்கள் முன்பு நாம் பூட்டினாற்போல் இல்லை; கலைத்துப் பூண்டாற்போல் தோன்றுகின்றதன்றோ?' என்கின்றாள். 'உடுத்தின ஆடையும் நாம் உடுத்தினபடி இல்லை; முகத்தலைப் பார்த்து உடுத்தது போல் அல்லவா உளது? வேறுபாடுதோன்றவில்லையா?' என்று ஆடையின் மீது கவனத்தை ஈர்க்கின்றாள். 'இவள் வடிவிலும் பிறந்திருக்கும் புதுமைகள் தோன்றவில்லையா? இதற்கு முன்பு இது கோடையொடின வயல் போலேயன்றோ இருந்தது? இப்போது நீர் பாய்ந்த வயல் போலே தோன்றும் செவ்வியைப் பாருங்கள்' என்கின்றாள். காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் நின்று ஆராயப் புகுந்தாலும், இவளிடம் பிறந்துள்ள அழகுகள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவை என்பதையும் உணர்த்துகின்றாள். எம்பெருமானுடைய படிகளையே நினைக்க முடியாதபோது அவன் திறத்தில் ஈடுபட்டாருடைய படிகளை நினைக்குந்தரமன்று என்பதனையும் பெற வைக்கின்றாள். இவற்றால், 'முனைவன் மூவுலகாளி அப்பன்' திருவருள் மூழ்கினளே' என்று இயற்கைப் புணர்ச்சி நடைபெற்றுவிட்டதை உறுதிப்படுத்துகின்றாள்.

'மேற்கூறிய சான்றுகள் மட்டுமா? வேறு சான்றுகளும் உள்ளன' என்கின்றாள்.

''திருவருள் மூழ்கி வைகலும்,
செழுநீர்நிறக் கண்ணபிரான்
திருவருள் களும்சேர்ந் தமைக்கடை
யாளம் திருந்தஉள.'' 33

[வைகலும்—நாள்தோறும்].

எப்பொழுதும் அவன் திருவருளிலேயே மூழ்கிக் கிடக்கின்றாள். அவனுடைய திருவருள் இவளிடம் சேர்ந்தமைக்கு மறைக்க முடியாத அடையாளங்கள் பல உள்ளன என்று கூறி ஒன்றினை மட்டிலும் காட்டுகின்றாள்.

''திருவருள் கமுகு உண்பழத்தது
மெல்லியல் செவ்விதழே.'' 34

[கமுகு—பாக்குமரம்; இதழ்—உதடு].

''எம்பெருமான் திருவருளால் இத்திப்பதியில் வளர்ந்த கமுகு—திருவருள் கமுகு— ஈன்ற செவ்விய பழத்தின் நிறத்தை யல்லவா ஒத்துள்ளது இவளது உதடுகளின் நிறம்? இதனை நீங்களே ஆய்ந்து பார்க்கலாமே?'' என்கின்றாள். இவ்விடத்தில் 'திருவருட்கமுகென்று சில உண்டு; அதாவது நீரால் வளருகையன்றிக்கே, அத்தால் வளருவன சில'' என்ற பகுதி எண்ணி எண்ணி மகிழத் தக்கது.

இத்திருப்பதியின் இயற்கைச் சூழலைக் கூறுவாள் போல் அங்கு அஃறிணைப் பொருள்களும் கூட ஒன்றோடொன்று கலந்து பரிமாறி வாழா நிற்கும் என்பதனையும் காட்டுகின்றாள். மெல்லிய இலைத் தழைப்பையும் அழகினையும் உடைய வெற்றிலைக் கொடி முதிர்ந்து இளகிப் பருத்த கமுக மரத்தைத் தழுவி நிற்கின்றது. ''(வெற்றிலை) தன் கணவனான கமுகுக்குத் தன் உடம்பை முற்றூட்டாகக் கொடுக்கும் போலே காணும்'' என்பது ஈடு. இதற்கு மேல் தென்றற்காற்று வாழைத் தோப்பில் வீசா நிற்கின்றது. 'இப்படிப்பட்ட வாய்ப்பு அமைந்த தலத்தில் இவளும் தானுகந்த பொருளை அணையப் பெற்றது வியப்பு அன்று, முறையே' என்று குறிப்பிடுகின்றாள். ''மல்லல் அம் செல்வக் கண்ணன் தான் அடைந்தாள் இம் மடவரலே'' (35). மேலும், ''படம் அரவு அணையான் தன் நாமம் அல்லால் பரவாள் இவளே'' (36). அத்திருப்பதி எம்பெருமானின் திருநாமமே யன்றி வேறொரு பெயரையும் சொல்லுவதில்லை. அங்ஙனமே 'பரவாள் இவள் நின்று இராப்பகல் ... திருப்புலியூர் புகழன்றி மற்றே'' (37), 'திருப்புலியூரின் புகழை வாய்விட்டுச் சொல்லுவது தவிர வேறொன்றும் அறியாள் இத்தலைவி' என்கின்றாள். இதனாலும் அத்தலத்து எம்பிரானுடன் இவளுக்குக் கல்வி நேர்ந்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றாள்.

158608

இறுதியாக மேற்கூறிய காரணங்கட்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்த மாதிரி, இதற்கு வேறுவிதமான முடிவும் கூறமுடியாதவாறு, பிறிதொரு காரணம் கூறுகின்றாள் :

''அன்றிமற் றொருபாய மென்? இவள்
அம்தண்து ழாய்க்கமழ்தல்
நின்ற மாயப்பிரான் திரு
வருளாமிவள் நேர்பட்டதே.'' 38

இவளது உடம்பில் அழகிய குளிர்ந்த திருத்துழாயின் மணம் வீசுவதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? என் உடம்பிலாவது உங்கள் உடம்பிலாவது திருத்துழாயின் மணம் வீசுகின்றதோ? எம்பெருமான் திருமேனியில் அணிந்தாவல்லது இம்மணம் 'வீசுவதற்குக் காரணம் உண்டோ?' என்கின்றாள். ''இராஜ புத்திரனை அணையாதார்க்குக் கோயில் சாந்து நாறுகைக்கு விரகு உண்டோ'' என்பது ஈடு. இதனால் திருப்புலியூரில் நின்ற மாயப்பிரானுடைய திருவருளுக்கே இவள் இலக்காயினாள் என்று தோழி சொல்லித் தலைக்கட்டுகின்றாள்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் அலைபாய்ந்த வண்ணம் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் கிழக்கே

திருமுக மண்டலம் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாயப்பிரானையும், பொற்கொடி நாய்ச்சியாரையும் சேவிக்கின்றோம். நாமும் நம்மாழ்வார்போல் நாயகி நிலையை அடைய முயல்கின்றோம். அந்த நிலையை அடைதல் அவ்வளவு எளிதா என்ன? ஏதோ பாவனை செய்துகொண்டு ஆழ்வார் பாசுரங்களை ஓதி மனங்கரைகின்றோம். அவரோ,

''நேர்பட்ட நிறைமூ வுலகுக்கும்
நாயகன் தன்னடிமை
நேர்பட்ட தொண்டர் தொண்டர்
தொண்டர் தொண்டன் சடகோபன்''

[நேர்பட்ட—வாய்த்த; நேர்பட்ட—சேர்த்த; தொண்டர்—அடியார்கள், பாகவதர்கள்.)

என்று தம்மை ''அடியார்கள், அவர்க்கு அடியார்கள், அவர்க்கு அடியார்கள், அவ் அடியார்க்கு அடிமைப்பட்டவன்'' என்று சொல்லிக்கொள்ளுகின்றார். அந்த மனநிலை வர வேண்டும், செய்படவும் வேண்டும் என்று அவாவி நிற்கின்றோம். தன் முனிப்பு கரைந்தால்தானே அது வரும்? இந்தப் பத்துப் பாசுரங்களையும் பக்தியுடன் ஓதினதால் அன்பே வடிவெடுத்தவனை நெடுமாற்கு அடிமை செய்வதற்கு வாய்த்தவர்கள் ஆனோம் என்ற பெருமிக உணர்வினையும் பெறுகின்றோம். இந்நிலையில் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் இத்திருப்பதி பற்றிய பாசுரமும் நினைவிற்கு வருகின்றது.

''முதல் வண்ணம் ஆமே
மலைவண்ணம்; முன்னை
விதி வண்ணம் நீங்கி
வீடுமே—சதுரத்
திருப்புலியூர் நின்றான்
திருத்தண் துழாயின்
மருப்புலிஊர் தென்றல் வரின்.'' 40

என்ற பாசுரத்தையும் ஓதி உளங்கரைகின்றோம். இந்தப் பாசுரமும் ஒரு பெண் பேச்சாகவே அமைந்திருக்கும் நேர்த்தியையும் நினைத்துப் பார்க்கின்றோம்.

இந்தத் திருப்பதி எம்பெருமானிடம் விளங்கும் குணத்தைப்பற்றி ஆசாரிய ஹிருதயம்,

''அவகாஹித்தாரை அநந்யார்ஹம்
ஆக்கும் நாயக லட்சணம், வளம்புகழும்
ஊரிலே குட்டமிடும்'' 41

[அவகாஹித்தாரை—மூழ்கினவர்களை; அநந்யார்ஹம் ஆக்கும்—பிறர்க்கு ஆகாமல் அவன் ஒருவனுக்கே உரித்தாக்குதல்; நாயக லட்சனம்—தலைவனுக்கு உரிய இலக்கணங்கள்; வளம் புகழும் ஊர்—திருப்புலியூர்; குட்டமிடும்—நிறைந்திருக்கும்.]

என்று குறிப்பிடுகின்றது. திருப்புலியூரில் தலைவனுக்கு உரிய இலக்கணங்கள் விளங்கும் என்ற அதன் பொருளையும் சிந்திக்கின்றோம். இறையநுபவம் நிறைந்த உள்ளத்துடன் நம் இருப்பிடத்தை நோக்கித் திரும்புகின்றோம்.

**—முற்றும்.**


## அருள்மிகு பத்ரகாளியம்மன் மற்றும் மீனாட்சியம்மன் ஆலயம்

(அம்பாத்துறை அஞ்சல்-624301, திண்டுக்கல் வட்டம், மதுரை மாவட்டம்)

### திருப்பணி நன்கொடை அளிக்க வேண்டுகோள்

திண்டுக்கல் வட்டம், அம்பாத்துறை நகரில் கூன்பாண்டியன் என்ற சவுந்தரபாண்டியனால் கடஸ்தாபனம் செய்ததும், ஒருவருடம் வரை பிரதிதினமும் புதிய வாவி உண்டாக்கி ஸ்ரீ அம்பாளுக்கு அபிஷேகம் நடத்தி சித்தி பெற்றதுமான அருள்மிகு பத்ரகாளியம்மன் ஆலயம் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

இவ்வாலயத் திருப்பணிக்குழு அறநிலைய ஆட்சித்துறையால் நியமிக்கப்பட்டு, சுமார் ரூ. 10,000/- செலவாகும் என உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி திருப்பணி வேலைகள் நடத்த அன்பர்கள் நிதி உதவி செய்து அருள்மிகு அம்பாளின் இன்னருள் பெறுய்யுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:
''திருப்பணிக்குழுச் செயலாளர், அம்பாத்துறை அஞ்சல்,
திண்டுக்கல் வட்டம், மதுரை மாவட்டம். (624301).

ப. சண்முகம் பிள்ளை,
திருப்பணிக்குழுத் தலைவர்.

கரு. நடராஜபிள்ளை,
நிர்வாக அறங்காவலர் &
திருப்பணிக்குழுச் செயலாளர்.

பொ. கிருஷ்ணசாமி நாயக்கர்
வி. அயோத்திராமன்
கு. ஆறுமுகம் செட்டியார்
சா. கருப்பையா
அறங்காவலர்கள்.




# வாலி வழக்கு

புரிசை சு. முருகேச முதலியார்

**வாலியும்—சுக்ரீவனும் :**

வாலி ஒரு சிறந்த சிவ பக்தன். அவன் இராம பக்தனுங்கூட. வாலி சோழ வள நாட்டில், காவிரிக்கு வட கரையிலுள்ள, வடகுரங்காடுதுறை யென்னும் திருத்தலத்தில், சிவபெருமானை வழிபட்டவன். சைவ சமயப் பெருந்தலைவராகிய திருஞானசம்பந்தர் வாலியை வாலியார், என்று சிறப்புறக் கூறுவார்.

''நீலமா மாணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொ டொல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்
ஆலுமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
நீலமா மணிமிடற் றடிகளை நினையவல் வினைகள் வீடே',

இத்திருப்பாடல் வாலிக்கு எவ்வளவு சிறப்பு அளிக்கின்றது பாருங்கள். வாலிஇராமபிரானைப் புருஷோத்தமனாகப் போற்றுகின்றனன். சுக்ரீவனால் அறைகூவப்பட்டுப் போருக்குப் புறப்படலாயினன் வாலி. வாலியின் மனைவியாகிய தாரை, உனது தம்பிக்கு யாரோ புதுத் துணைவர்கள் வந்துளராமெனக் கூறினள். வாலி, அமரர் அசுரர் அரக்கர் யாவரினும் என்னை முன்னின்று வெல்லுவாரிலர். பின்னை யார் என் பின்னவனுக்குத் துணை வர உள்ளனர் என்றனன். தாரை யாரோ இராம இலக்குவராம், அண்ணன் தம்பிகளாம், அரச குமாரர்களாம் என்றனள். வாலி திடுக்கிட்டனன். அவன் எடுத்த எடுப்பில், பாவீ! நீ இப்படி அடாத மொழிகளைப் பகரலாமா என அதட்டினன். தாரை அச்சமுற்றனள். வாலி இராமபிரான் சிறப்பியல்புகளை உணர்ச்சி ததும்ப உரைக்கலாயினன். ''உலக மக்கள் தாம் அறியாமல் செய்துவிட்ட தீவினைகளைத் தீர்த்துக் கொள்ள வழி தேடுகிறார்கள். அது, தெரியாமல் திகைக்கிறார்கள். இவ்வகை மக்களுக்கு, அறச்செயலின் ஆற்றலை விளக்கித் தேற்ற வந்த செம்மல் இராமன். அப்பெருந் தகையின் கொள்கைக்கு நேர்மாறான செய்கைக்கு அண்ணல் வந்திருப்பதாக உனக்கு யார் சொன்னவர்கள்? சொல்லுவார் சொல்லினாலும் நீ எப்படி நம்பி அதை என்னிடமும் சொல்லலுற்றனை. உனது பேதைமைப் புத்தியால் நீ பாபத்திற்கு உள்ளாயினை '' என்றனன். (வாலி வதை 22-வது பாடல்).

''உழைத்தவல் லிருவினைக் கூறுகாண்கலாது
அழைத்து அயர் உலகினுக்கு அறத்தின் ஆறுஎலாம்
இழைத்தவற்கு இயல்புஅலது இயம்பி என் செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மையால்''

மேலும் வாலி கூறினான். இராமன் தனது தம்பிமார்களையே தனது உயிராகக் கொண்டவன். அவன், எனக்கும் என் தம்பிக்கும் உள்ள வேற்றுமையை ஒருக்கால் நீக்க முற்படலாம். ஆனால், அவன் இருவரில் ஒருவனுக்குத் துணையாக வந்து அவனுக்கு நன்மை செய்து அயலவனாக ஒருவனை யெண்ணும் அழிகரம்பிற்குச் செல்லக்கூடாத செம்மல். இராமன் ஒரு தர்ம சமுத்திரம். அவனையா இப்படி தப்பிதமாக எண்ணுவதும் இசைப்பதும் என்றனன்.

''தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்
இம்பரின் இலதுஎன எண்ணியேய்ந்தவன்
எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரினில்
அம்பு இடை தொடுக்குமோ அருளின் ஆழியான்''

இராமன் தனது தந்தையும் மந்திரிகளும் கூடி நாளை நீ அரசன் என்று வற்புறுத்த அதனை ஒப்புக்கொண்டு உலகத்திற்கு முதல்வனானன். இனிப் பட்டங்கட்டுச் சடங்கொன்றுமே பாக்கியாக நின்ற நேரம். அந்த நேரத்தில் தன்னைப் பெற்றதாய்க்கு மாற்றவளான கைகேயி தடுத்துக் கானகஞ் செல்லப் பணித்தனள். இக்கொடுமை செய்தவள் மகனுக்குத் தான் ஏற்றுக்கொண்ட அரசெலாம் மனமகிழ்வோடு அளித்து வனம் புக்க பெருந்தகை. இந்த ஐயனைப் போற்ற வேண்டும்; நீ தூற்றுகின்றாய், இது அடுக்குமா?'' என்றனன் வாலி. (வாலி வதை 24-ல்).

158608

ஏற்றபே ருலகெலாம் எய்தி ஈன்றவள்
மாற்றவள் ஏவமற் றவள்தன் மைந்தனுக்கு
ஆற்றரு முவகையோ டளித்த ஐயனைப்
போற்றலை நீயிது புகறற் பாலையோ

இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கே நோக்கி நடக்கும் பேரறிவுடையவர்களுக்கு ஒருவனைச் சார்ந்து ஒருவனைப் பகைப்பதில் விருப்பமும் வருமோ. அதுவொரு பெருமையாகுமோ. அவர்களுக்கொவ்வாதது எல்லாம் நீபேசிவிட்டனையே. உலகத்து உயிரெலாம் காக்க முன்னிற்கும் தருமத்தின் உருவமல்லவோ இராமன். அந்தத் தருமம் தன்னைத் தானே கெடுத்துக் கொள்ளுமோ?

இருமையும் நோக்குறும் இயல்பி னோர்க்கிது
பெருமையோ இங்குஇதில் பெறுவதுஎன் கொல்லோ
அருமையினின்று உலகளிக்கும் ஆறு உடைத்
தருமமே செகுக்குமோ தன்னைத் தானரோ''

என்றெல்லாம் உள்ளம் உருகத் தாரைக்கு உரைத்தனன் வாலி. எனவே இராமனையும், இராம பெருங்குடிப் பெருமை வரலாற்று வரிசையையும் எல்லாம் நன்கறிந்திருந்தவன் வாலி. அப்பெருங்குடியின்பால் பற்றும் பக்திமையுங் கொண்டிருந்தவன் வாலி.

வாலியான தனது கதாபாத்திரத்தின் காது களுக்கும் நல்ல காதணியைப் பூட்டுகின்ருர் கம்பர். அவன் தோட்கப்பட்ட செவியனும். அவன் காதில் போட்டுக் கொள்வது கேள்வி யாம். ''செவியுறு கேள்விச் செல்வன்'' என அறிமுகம் செய்விப்பார் வாலியை. இது திருக் குறளிலிருந்து தேடியெடுத்த செவியணி ''செல் வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலே''. இந்தத் திருக் குறளே வாலிக்குப் பட்டாவாக்கி விடுகிருர் கவிச் சக்கரவர்த்தி. அவர் ''கேள்விச் செல்வன்'' என்பதோடு விடாமல், ''செவியுறு''வும் சேர்த் திருப்பதால், செவிச் செல்வத்தையும் வாலியை யும் ஒருங்கே வகைப்படுத்திக் காட்டுகின்றனர் என்பதனை உணர வேண்டும்.

தான் பாராட்டிய பொருளேப் பழித்து உரைக்க நாணுகின்றவன் வாலி. அவன் அடிபட்டு விழுந்த பிறகும் இந்தத் தகுதிக்குப் பொருந்தாத செயல் செய்ததற்குக் காரணம்; அண்ணல் தனது தேவியைப் பிரிந்து துன்பத் தால் திகைப்புற்ற செயல் போலும் என இரங் குகின்றவன் வாலி. அவன் உயிர் துடிக்கும் நேரத்திலும் யான் உனக்கு உதவியொன்றும் செய்ய முடியவில்லேயேயென இரங்கும் பண்பு, உடையவன். மற்றபடி வாலியின் சிறப்பு இயல்பு களே வருமிடங்களில் பார்ப்போம்.

இனி சுக்ரீவனேப் பற்றி ஆராய்வோம். சுக்ரீவன் இவ்வளவு பரந்து சிறந்த இராமன் வரலாறு ஒன்றையும் ஒரு சிறு பகுதியையும் முன்னதாகத் தெரிந்திருந்ததாகத் தெரியவில்லே. அவன் அனுமன் அறிந்து வந்து கூறிய பிறகு தான், இராமன் இயல்புகளேயும் வரலாற்றை யுமே தெரிந்து கொண்டவன். அனுமன், இராம இலக்குவரைக் கண்டவுடன் அவர்கள் ஆற்றலே யும் அல்லலேயும் ஒருவாறு அறிந்து கொண்ட னன். அவை யாருஞ் சொல்லி அறிந்தனவல்ல. தனது நுண்ணறிவினுல்தானே அறிந்தவை. அவர்கள் நீ யாரெனக் கேட்டதற்கு மிகு மரி யாதையோடு,

''மஞ்செனத் திரண்ட கோல மேனிய மகளிர்க்
கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி நளிர் இரும் பனிக்குத்
தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்தசெய்ய கண்ண! யான்
காற்றின் வேந்தற்கு
அஞ்சனே யிடத்து வந்தேன் நாமமும் அனுமன்
என்பேன்''.

என மிகு சிறப்போடு விடையிறுத்தனன். ஆனுல் இராம இலக்குவர்களே அவன் அவ்வளவு தெரிந்த அளவினும் பணியவில்லே. பிறகு அநுமன் இலக்குவனுல் அவர்கள் வரலாற்றை யும் பண்புகளேயும் கேட்டுணர்ந்தனன். உடனே ''நின்ற அக்காலின் மைந்தன் நெடிது வந்து அடியில் தாழ்ந்தான்''. ஏன்? வணக்கமும் பிணக்கமும் சிந்தியாமல் செய்து கொள்ளுவன வல்ல. இக்காலத்தில்கண்டதற்கெல்லாம், கண்டவர்க்கெல்லாம் வணக்கஞ் சொல்லுவது ஒரு நாகரிகமாக மதிக்கப் பெறுகிறது. அப்படி அற்பத்திற்கெல்லாம் வணங்குகிருேம், அப் படியே அற்பக் குறைபாடொன்று நேர்ந்தால் உடனே பிணங்கிக் கொள்ளவும் செய்கின்ருேம். நன்கு ஆய்ந்தான். வணங்கத் தக்கவரென்று அறிந்தான். வணங்கினுன் வாயுவின் செல்வன். பிணக்கம் உண்டா? உலகம் ஒடுங்கும் நாளும் இல்லே.

இது அனுமன் செயல். நமது சுக்ரீவன் செயலென்ன? இராம இலக்குவரைக் கண்ட வுடன் இவர்கள் வாலியின் ஆட்களென அஞ்சி ஒளித்தனன். அனுமன் சென்று அறிந்து வந்து விளக்கியவுடன் எதிர் சென்ருன். வரவேற்ருன். தோற்றத்தால் அவர்கள் தெய்வ நலத்தையும் தெரிந்து மகிழ்ந்தான். ஆனுல் வணங்கினுன் என்பதேயில்லே. அவர்கள் இவன் வணக்கத்தை எதிர் பார்க்கவில்லே, பார்வையாளர்களாகிய நாம், பார்த்தே ஆக வேண்டும். நிகழ்ச்சிகள் வளரட்டும். பொறுத்துப் பார்ப்போம்.

அனுமனுல் அறிமுகஞ் செய்விக்கப் பெற்று இருவரும் உரையாடினுர்கள். இராமன் தனக்குக் கவந்தனுலும் சபரியாலும் சுக்ரீவனேப் பற்றித் தெரிந்ததையும் கூறி, எங்களுக்கு ஒரு துன்பம் வந்துளது, அது தீர உனது துணையை நாடித் தான் இங்கு வந்துளோம் எனவும் இயம் பினன் ஏந்தல். அன்றியும் உன்னுல் எங்கள் குறை தீருமென நம்புகின்ருேம் எனவும், நவின் றனன்.

''மையறுதவத்தின் வந்த சபரி யிம் மலேயில்
நீவந்து
எய்தினே யிருந்ததன்மை யியம்பினள் யாங்கள்
உற்ற
கையறு துயரம் நின்னுல் கடப்பது கருதி வந்தோம்.
ஐய! நிற்றீரும்'' என்ன அரிகுலத்து அரசன் சொல்
வான்

(அரிகுலம்—வானர குலம்). இப்படி ''கையறு துயரம்'' அதாவது ஒரு ஒப்பற்ற பொருளேயிழந்து தவிக்கும் துயரம் என விளக்க மாக உரைத்தும் உள்ளம் துடிக்கவில்லே சுக்ரீவ னுக்கு. அப்படியா! என்னுல் இயன்றதைச் செய்கின்றேன் என ஆதரவும் கூறவில்லே அவன். அடுத்து உடனடியாக எனக்கும் ஒரு குறை யுண்டு. அதனேத் தீர்க்க வேண்டி உங்களுக்கு யான் அடைக்கலம் புகுகின்றேன்; காக்கவேண் டும் என வேண்டினன் சுக்ரீவன். அவன், எனக்கு அண்ணன். மிக்க வல்லமையுள்ளவன். என்னேக் கொல்ல வழி தேடித் துரத்தினுன். நான் இந்த மலேயில் ஒளிந்ததால் உயிர் பிழைத் தேன். இதோ உங்களுக்கு அடைக்கலம் புகு கின்றேன். என்னேக் காப்பது உங்கள் கடமை என்றனன்.

''முரணுடைத் தடக்கைஓச்சி முன்னவன் பின்
வந்தேனே
இருள்நிலேப் புறத்தின்காறும் உலகெங்கும்
தொடர இக்குன்று
அரண் உடைத்தாக உய்ந்தேன் ஆருயிர் துறக்கல்
ஆற்றேன்.
சரண் உனேப் புகுந்தேன் என்னேத் தாங்குதல்
தருமம் என்ருன்

இப்பொழுதாவது வணங்கினுனு சுக்ரீவன். இல்லே; இன்னும் பார்ப்போம். இங்கு அவன் குறையைக் கேட்டவுடன் இராமபிரான் உள்

ளம் துடித்தது. அப்படியா! ஒரு அண்ணனு தம்பியைக் கொல்ல வருகின்றான் எனப் பெரிதும் இரங்கி, இது வரை நீ யடைந்த இன்ப துன்பங்கள் போக, இனி உனக்கு வருவது எனக்கும் பாதியாகும். உனக்குப் பகை எனக்கும் பகை; உனக்கு உறவு எனக்கும் உறவே. உனக்கு இனியானே நீ. எனக்கும் ஒரு தம்பி தான் என்றருளினன் இராமன்.

''என்றவக் குரங்கின் வேந்தை இராமனும் இரங்கி நோக்கி
உன்றனக்குரிய இன்பதுன்பங்கள் உள்ள முன்னாள்
சென்றன போக்கி மேல்வந்து உறுவன தீர்ப்பல் அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேர் என மொழியும் நேரா.''

''மற்றினி உரைப்பது என்னே வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளையெனது என் காதல்
சுற்றம் நின் சுற்றம் நீயே இன்னுயிர்த் துணைவன் என்றான்''

இதுகேட்டு வானரப் படைஞர்கள் பெரிதும் மகிழ்ந்து ஆரவாரித்தனர். அனுமன் புளகாங்கிதம் கொண்டனன். ஏன்? இதற்காக நெடுங் காலம் எதிர் பார்த்த நிகரில் அமைச்சன் அவன். ஆதலால்தான் அனுமனுக்கு இவ்வளவு மகிழ்ச்சி

''ஆர்த்தது குரங்கின் சேனை அஞ்சனைச் சிறுவன் மேனி
போர்த்தன பொடித்தரோமப் புளகங்கள்''

மகிழ்ச்சி மிக்க அனுமன் அப்பொழுது எழுந்து அடியில் விழுந்து வணங்கினான். பின்னர் எப்பொழுதுதான் இந்த அண்ணலை அந்த சுக்ரீவன் வணங்குகின்றனன்? அவன் தனது மாளிகைக்குச் சென்று விருந்திட்டு, வாலியின் வரலாறு உரைத்து, தன் மனைவியை வாலி கவர்ந்ததைக் கூறி அவர் வெகுண்டு போருக்கெழ, இவ்வண்ணலால் அவனை வெல்லலாகுமோவெனச் சுக்ரீவனுக்கு ஐயம் வர. அனுமனைத் தனியழைத்து அதனை உரைக்க அனுமன் சந்தேகம் வேண்டாம் மராமரத்தை யெய்யச் செய்து அண்ணல் வலியை அளந்து காட்டுகின்றேன் என உறுதி உரைத்து, இராமபிரானை அழைத்துச் சென்று மராமரத்தைக் காட்ட, அவர் வில் வளைத்து நாண் தொனி செய்து கணை தொடுக்க உலகம் கிடுகிடுக்க, மரங்கள் துளைபட, அப்பொழுது தான் இராமன் அடிகளில் வீழ்ந்து வணங்கினான் இந்தச் சுக்ரீவன்.

எனவே இராமபிரான் பண்பிற்கு வணங்கினவனல்ல சுக்ரீவன்; பலத்திற்கு வணங்கினவன். விருந்தினனாக வந்த அண்ணலின், துன்பத்தில் பங்கு கொள்ள முற்படவில்லை ; சுக்ரீவன்தான் தருவதற்கு முன்னே அவரால் ஒன்று கிடைக்குமா என்ற கைம்மாற்றுக் கருத்திலேயே நின்றவன் சுக்ரீவன். இங்கே இராமன் தன் தகுதிக்கு ஏற்ப அவனுக்கு வாக்குறுதியை வாரி வாரி வழங்கிவிட்டான். இது வரையில் இதற்கேற்ற முழுத் தகுதியுள்ள பாத்திரம் சுக்ரீவன் அல்லன் என்பது விளங்குகின்றது அல்லவா?

**சீதையும் உருமையும் :**

''உருமை யென்றிவற்குரியதாரமாம் அருமருந்தையும் அவன் விரும்பினான்'' என அனுமன் வாக்காக வரும் ஒரு இடத்தைத் தவிர சுக்ரீவன் மனைவியாகிய உருமையைப் பற்றிப் வேறு செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. மதங்கர் சாபத்தால் தான் சார முடியாத மலையில் தன்னால் துரத்தப்பட்ட சுக்ரீவன் ஒளிந்து கொண்டனன் என்பதை வாலி அறிந்தனன். அவனை வெளிவரக் காண்பதற்காக அவன் மனைவியை வாலி தகைத்து வைத்திருந்தனனா? அல்லது உருமையைத் தன் மனைவிபோலவே பாவித்தனனா என்பதற்கு விளக்கம்எங்குமில்லை. ஆனால், வாலியின் மனைவி தாரையின் வாக்காக ''ஓயாவாளி ஒளித்துநின்று எய்வான்—ஏயா அந்த இராமன் என்று உளான்—வாயால் ஏவினன் என்னில் வாழ்வு எலாம்—ஈயாயோ அமுதேயும் ஈகுவாய்.''

இப்படித் தாரை சொல்லுவது, வாலியின் உயிர் நீங்கிய உடலைக் கட்டிக் கொண்டு வருந்துகின்ற பொழுதுதான். இதில் இராமன் உன்னைக் கண்டு உனது தம்பிக்கு விட்டுக் கொடு எனக் கூறியிருந்தால் நீ உனது வாழ்வு அனைத்தையும் தந்திருப்பையே, அப்படியன்றி மறைந்து கொன்று என்னை வருந்த வைத்தனனேயென் மாழ்குகின்றாள். அம்மாழ்கலில் ''வாழ்வு எலாம் ஈயாயோ''வாலி உருமையோடு வாழ்ந்திருந்தான். அந்த வாழ்க்கைக்கு உரியானையும் விட்டுக் கொடுத்திருப்பான் எனக் கொள்ளலாம். ஆனால் இது உறுதியான உரையாகாது. ஒரு ஐய உரைதான். அன்றி அரச போகம் அனைத்தையும் விட்டுக் கொடுத்திருப்பாயே யென்ற கருத்தமைய அவள் சொல்லியும் இருக்கலாம். ஒரு பெரிய அரச போகத்தை விடப் பெண் போகம் பெரியதல்ல. கடவுள் தரும் இன்பத்தைப் பற்றி ஒரு பெரியவர் பேசுகிறார்.

''கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனி மலர்க்குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு இன்னம்பர் ஈசனே''

என இதில் கனிச் சுவையை முதலிற் கூறிப் பிறகு அதைக் கீழ்ப்படுத்திச்செங்கரும்பின் சுவையைச் சொல்லிப் பிறகு அவ்விரண்டினையும் தாழ்த்தி, அதற்கு மேலே பனிமலர் குழல் பாவை நல்லார் இன்பத்தை மேம்படுத்திக் காட்டி, அவற்றிற்கு மேன்மேலாகத் தனிமுடி கவித்து ஆளும் அரச போகத்தை விதந்தெடுத்துக் காட்டிப் பேரின்பத்தைக் காட்ட அதற்கப்பாலே செல்லுகின்றார் அவர். அது, அப்பாலுள்ளது. இப்பாலுள்ளவாழ்வில் தலைசிறந்த வாழ்வு அரச வாழ்வுதானாதலால் தாரை ''உன் தம்பி ஒரு சிறு வட்டத்திற்குள் அரசு செய்கின்றான். உனது வசமிருக்கும் பகுதியே பெரியது, இராமன் கட்டளையிட்டிருந்தால் இரண்டு பகுதியையும் சேர்ந்து அவனே ஆளத் தந்திருப்பாயே, பரிவுரையாரும் கூறமலே பாற்கடல் முயற்சியில் வந்த அமுதமெல்லாம் பரிந்தளித்த வள்ள

லாயிற்றே. இன்று உன்னால் மெச்சப்படும் இராமன் பரிந்துரையும் உனக்கு வந்தால் அனைத்தரசையும் தருவாயென்பதில் ஐயமில்லையேயெனவும் பொருள் தரும் ''வாழ்வெலாம்'' என்ற சொல். ஆகவே இந்த ஒரு சொல்லைக் கொண்டும் உருமை வாலியின் காதலியெனக் கூறிவிட முடியாது. அன்றி, அனுமான் வாயால் இவற்கு உரிய தாரமாம் உருமையென்னும் அருமருந்தையும் விரும்பினான் என்று வருகிறதே எனலாம். வருகிறது. அனுமனோ கன்னியர் முகமே காணாதவன். அவன் ஐம்புலனடக்கம் பெற்ற அருந்தவன். வாலி ஒரு மாதைக் கவர்ந்து, மடக்கி வைத்ததையே, அனுமன் உள்ளத்திற்கு ஒவ்வாத செயல் ஆதலால் தனக்குப் பிடிக்காததைப் பெரிது என்று அனுமன் அலங்கரித்திருக்கலாம். ஒரு மரண தண்டனையை விடுதலை செய்வதிலேயே உயர்ந்த நீதிபதிகளின் நோக்கமிருக்கும், வழக்கில் தங்களுக்கு வரும் ஐயங்களையெல்லாம் அவர்கள் மரணவாயிலில் துடிக்கும் ஒருவனுக்காகத்தான் வழங்க முற்படுவார்கள். அதுபோல உருமை கற்பிற்குரியவளா, அது நீங்கினவளா என்ற ஐயம் வருகிறது. இதற்கு நீங்கினவள் தான் என்பதை உறுதியாக்க உள்ளம் தடைபடுகின்றது. உருமை வாலிபாலிருந்து சுக்ரீவன் பால் வந்து அவனோடு அளவளாவிக் கொண்டு தான் இருக்கின்றாள், சுக்ரீவனும் உருமை வாழ்வை அருவருக்காமல் அரச வாழ்வையும் மறந்து அவளோடு காலங் கழிக்கின்றனன் என்பதும் இந்த தாரை வாக்காகவே நமக்குக் கிடைக்கின்றது.

கார்காலம் கழித்தும் இராமன் பால் வராதிருந்த சுக்ரீவனை வெறுத்து இலக்குவனை அண்ணல் ஏவ, அவன் வரவிற்கு அஞ்சி அனுமனும் அங்கதனும் தாரையினிடம் சென்று முறையிட அவள் உதவியை மறந்து கிடந்த தனது மைத்துனனை வெறுத்து அனும அங்கதரிடம் பேசுகின்றபொழுது,

> ''தேவி நீங்கஅத் தேவரில் சீரியோன்
> ஆவி நீங்கினன் போல் அயர்வான இது
> பாவியாது பருகுதிர் போலும்நும்
> காவி நாண்மலர்க் கண்ணியர் காதல்நீர்''

என்று கேட்கின்றாள் தாரை. இந்த இடிப்புரை, யாரை நோக்கியது? பிறவிச் சாமியாரான அனுமனை நோக்கி இப்படிப் பேசுவாளா? அல்லது தனது மகனைப் பார்த்துக் கேட்கின்ற கேள்வி தான் இதுவா? அவள் தனது மைத்துனனது காம மயக்கத்தால் வந்த அல்லலை நோக்கி அறைவதல்லவா இது? தாரை ''நும் என்றது சுக்ரீவன்தான். அவளா சுட்டப்படுகின்றவள் உருமைதான். ''நீர்நும் காவி நாள்மலர்க் காதல் நீர்பருகுதிர்போலும்'' என்ற சொற்றொடருக்கு வடநூல் துறை போன ஒருவரை உரையெழுதச் சொன்னால், அவர் ஒரு நூலே எழுதி முடித்துவிடுவார். ''கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேஉள'' என்ற திருக்குறள் விளக்கத்தில் பரிமேலழகர் ''வடநூலார் இடக்கராகக் கூறும் யாவும் இதனுள் அடங்கும்'' என்கின்றனர். அதனால்தான் வடநூலார் இன்பத் துறைக்கும் இடக்கருக்கும் கைதேர்ந்தவர்கள் என யான் துணிந்து கூறுகின்றேன்.

இவ்வளவு பெருவாழ்வு ஊருக்குப் போய் இருந்து வந்த உருமையினிடத்தில் சுக்ரீவனுக்கு உறும்வாழ்வு. இதெல்லாம் நோக்க உருமை திறமானவளாகவே அங்கு இருந்திருக்கலாம் என எண்ணவும் திடமிருக்கின்றது.

சீதையின் தவவாழ்க்கை, உடையவன் இடத்தில் தனது உடலையும் உயிரையும் ஒப்புவிக்க வேண்டும் என்ற ஒரே நிலையில் இருந்தது. தேடிச் சென்றது தூதுவன். நாடிப்பார்த்த காலம் உயிரூசலாடும் கொந்தளிப்பான காலம். இராவணன் காதல் ஏக்கத்தையும், சீதையின் கற்பின் ஆக்கத்தையும் ஆற்றலையும் அநுமன் கண்ணாரக் கண்டு வந்து சொல்லினான். தன்னைத் திரிசடைத் தாங்கத் தான் ஒரு சடையுற்றுக் கரிசடைந்த காட்சியளாக மீண்டவள் சனகன் பாவை. அவள் அல்லலுற்ற கோலத்தை மல்லலுற்றதாகத் திருத்திக் கொள்ளவிபீடணன் வேண்டினான். மானவள் மறுத்தனள். அண்ணலின் குறிப்புரை இதுவென்றனன் அவன். அழகுபடுத்த வான மாதர் காத்திருந்தனர்; செய்து முடித்தனர். சீதை செம்மல் முன் உற்றனள். கொற்றவன் வெற்றித் திருவை வேறு நில் என்றனன். தேம்பினள்; தயங்கினள்; மிகவும் சாம்பினள்; வெந்தழற்புகுந்து பூங்குளம்புக்கெழுந்தவாறு மீண்டனள். உலகம் ஐயுறாதவொன்றிற்கு, உடையவன் ஐயுற்றவன்போல் தேர்வு வைத்துத் தெளிவாக்கிக் கைக் கொள்ள வந்த, கற்பின் பொற்பினள் கௌசலை மருமகள். இவ்வகையளல்லள் உருமை. இப்படியா அப்படியா வென ஐயுற நோக்கும் நிலையள் அவள். அத்தகைய பொற்பினளை வஞ்சித்தானை ஏன்? ஏன்? எனக் கேளாமலும், முன்னதாகவும் (இராவணனுக்கும்) வதைத்தது சதியா, மதியா, அல்லது விதியா? என்பதனைப் பின்னர் பார்ப்போம்.

**அனுமன் :**

அன்பால், அருளால், அறிவால், ஆற்றலால், பண்பால், பணிவால், துணிவால், தூய்மையால், ஒப்புயர்வற்ற,ஒண்மையன் அனுமன். அனுமனில்லையேல் ஈழத்திற்கும் பாரதத்திற்கும் இணைப்புமில்லை; ஏந்திழை சானகியின் மீட்பும் இல்லை, எனத் தக்க எல்லையில் முயற்சியன் அனுமன். அனுமன், கொண்டதை நிறைவேற்றுங் கொற்றவன். அனுமன் எந்நாளும் அரசனல்ல; அமைச்சனே. ஆனால், அரசரை ஆக்கிக் காக்கும் அமைச்சன். இத்தகைய ஆற்றலன் தன் உள்ளத்திற்கொத்த ஒரு கொற்றவனை ஆக்கி வைக்க அடிப்படையிட்டனன். அதுதான் வாலி வதையும் சுக்ரீவன் வாழ்வும். தான் இட்ட அடிப்படையைத் தலைசேர முடித்து வைப்பதில் சிறிதும் உறக்கமற்று உழைத்த ஒள்ளியனாயினன் அனுமன்.

அனுமன்தான் ''சொல்லின் செல்வனாயிற்றே''. அவன் ''அளவறிந்து உண்'' என்றபடி, வாலியின்வாழ்க்கையைஇராமபிரானுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகக் கூறித் தமது கருத்திற்கொண்டதைச் சாதித்துக் கொண்ட சமர்த்தனாயினன். அனுமன் ''பொய்யிலா மெய்யன்''

ஆதலால் ஒருபோதும் பொய்யொன்றும் சொல்லவில்லை. அனைத்தும் மெய்தான். ஆனால் அனுமன் மெய் இராமபிரானுக்கு அப்புறம் இப்புறம் திரும்பிப் பார்க்கவும் இடமின்றி வாலியை முடிக்க வழி வகுத்துவிட்டது.

அனுமன் முதல் முதல் இராமபிரானுக்கு வாலியைப் பற்றி உரைத்தது. சுக்ரீவன் கூட்டுறவிற்கும் முன்னமே, சூரியகுமாரனான எங்கள் சுக்ரீவனை இந்திரன் குமாரன் என்னும் அன்பற்றவன் சீறினான். எங்கள் அரசன் மருண்டு வந்து இந்த மலையில் ஒளித்துள்ளான் என்று மட்டும் கூறினன். வாலியென்ற பெயரைக் கூடச் சொல்லவில்லை. என்றால் வாலியின் வல்லமைகள் எங்கே வரப்போகின்றன. அதன் பிறகுதான் அண்ணலை அவ்வரசன் அணுகியது. சுக்ரீவன் முறையீடுகளையும் வள்ளல் வாரி வழங்கிய அடைக்கல உறுதியுரைகளையும் முன்னமே குறித்தோம். உறுதி மொழியோ கொஞ்ச நஞ்சமல்ல. ''தீயரே எனினும் உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார். உன் காதல் சுற்றம் என் சுற்றம் நீயே என் உயிர்த் துணைவன். உன்னைச் செற்றவர் எனையுஞ் செற்றார்'' என்ன அழுத்தம். எவ்வளவு திருத்தம்.

பிறகு அரண்மனைக்குச் சென்றார்கள். அங்குப் பெண்மணிகள் இருந்த இடமாகவும் தெரிகிறது. எவரும் வரவேற்கவும் வரவில்லை. அரச மாட்சிமையுள்ள ஒருவரையும் காணவும் இல்லை. அந்நிலைமை அண்ணலை மிகவும் நைவித்து விட்டது. ''பொருந்து நன் மனைக்கு உரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ நீயும் பின்'' என்றனன் இராமன். ''நீயும்பின்'' என்ற சொல் ஐயன் உள்ளத்தெழுந்த துன்பக் கடலைக் கண்ணுறக் காட்டுவதாக இருந்தது. அனுமனுக்கு வாய்ப்பான காலம். சொல்லவல்ல சுந்தரன் தொடங்கினன். வாலியின் வல்லபத்தை, வரலாற்றை, முதலிலே வகுக்கிறான்.

வாலி என்றொருவன் உளன். அவனது வல்லமைக்கு எல்லையே கிடையாது. அவன் சூலபாணியாகிய சிவபெருமானைப் பூசித்து வரம் பெற்றவன். யாராவது அவனை எதிர்த்தனரெனின் அவர்களது வரத்திலும் வல்லமையிலும் சரிபாதி அந்த வாலிக்கு வந்துவிடும். ஆற்றலுள்ள காற்று அவனெதிர் செல்ல முடியாது. முருகன் வேலும் அவன் மொய்ம்பில் பாயாது. அந்த வாலியின் வால் எங்கும் உலா வரும். அவன் வால் இலங்கைக்குச் செல்லும் பொழுதெல்லாம் இராவணன் கொலுவிற்கு வர மாட்டான். அவன் இந்திரனது ஒப்பற்ற புதல்வன். சந்திர மண்டலத்தைக் கண்டது போல் இருக்கும் அவனது வடிவமும் நிறமும். நமன் கட்டளையைக் கடந்தாலும் வாலி கட்டளையின் வரம்பை யாரும் கடக்க முடியாது என்று வாலியின் உயர்வையெல்லாம் மிகப் பெரியதாக எடுத்து வகுத்துரைத்தனன் அனுமன். எப்படி இராமபிரான் நிலை? ஒரு அநாமதேயப் பேர்வழியைச் சொல்லுவதைப் போலே, வாலியென்று பெயரும் கூறாது, இவ்வளவில் ஒரு துளி சிறப்பையும் செய்யாது, ''இந்திரன் மகன் என்பவன்'', ''பரிவே இல்லாதவன்'' என்று முதன் முதலில் கூறப்பெற்ற, நாம் எதிர்க்க ஒத்துக் கொண்ட, ஒருவன்தான் இவ்வளவு சிறப்பிற்கும், பாதி பலம் கவரும் பாங்கிற்கும், உள்ளவனோ? கதைத் தொடர் இன்னும் முடிவு அடையக் காணோமே, என்றெல்லாம் உள்ளம் சுழற்சியுறத்தான் செய்யுமல்லவா? இது நிற்க. அனுமன் வாலியைப் பலபடி யேற்றியாயிற்று. இனி பாதாளத்தில் வீழச் செய்யும் வரலாற்று முடிவு வருகிறது. ஐயா! அவன் மாயாவியென்னும் ஒரு பேரரசனால் அறை கூவப்பெற்றுப் போருக்குப் புறப்பட்டவன். மாயாவி ஒரு பிலத்தில் புகுந்தனன். வாலி தனது தம்பியாகிய இந்தச் சுக்ரீவனை இளவரசே நீ அரசைப் பார்த்துக் கொள். நான் தொடர்ந்து சென்று அவனைத் தொலைத்து விட்டு வருகின்றேன் எனக் கூறிப் பிலத்துக்குள் ஏகினன்.

மாதங்கள் இருபத்தியெட்டு ஓடிவிட்டன. வந்திலன் வாலி. அண்ணனை உன்னி அழுத கண்ணும் சிந்தையுமானான் இந்த இளவல். குடிப் பெருமக்கள் அரசியல் முதல்வர்கள் அனைவரும் ஆற்றித் தேற்றி வாலி இருந்திருந்தால் இன்னும் வாராதிரான். அவன் கொல்லுண்டிருப்பான். என்ன செய்வது என இரக்கங்கூறி ஒருவாறு தேற்றி இளவலை முடிகவித்து அரசனாக்கி ஆளச் செய்வித்தார்கள். நடந்தது இதுதான், அவன் சென்ற வழியால் அவ்வசுரன் திரும்பவும் வரவுங் கூடுமென அவ்வழியை அடைத்துக் கல்மலைகளை இட்டுத் தூர்த்தும் வைத்தார்கள் பாதுகாப்பிற்காக. அங்கு பதினான்காம் வருடமும் பயங்கரப் போரில் ஈடுபட்டு, மாயாவியைக் கொன்றொழித்து, வாலி மீண்டனன். தான் சென்ற பிலத்தின் வழி மூடப்பட்டிருப்பதைக் கண்டனன். மாயாவியின் வெற்றி மயக்கத்தில் வந்த வாலி ஓசை இட்டழைத்தனன். எதிர் மொழியில்லை. இது நமது வரவைத் தடைப்படுத்தச் செய்த வேலை எனக் கருதித் தம்பியின் செயலில் மனமாறுபட்டுவிட்டனன். (மராமரப் படலம் 97).

''ஒளித்தவன்னுயிர்க் கள்ளையுண்டுளம்
களித்த வாலியுங் கடிதின் எய்தினன்
விளித்து நின்று வேறு உரை பெறான் இருந்து
அளித்தவாறுநன்று இளவலாரென

பின்னர் வாலியையா அந்த அடுக்கல் மலை தடுக்கும்! உடைத்து வெளியேறினன். பிறகு அவனைச் சுக்ரீவன் எதிர் சென்று வணங்கினான். நடந்ததைச் சொல்லி இரந்து வேண்டினான். வாலி சிறிதும் இணங்கவில்லை; பிணங்கினான். அவன் தம்பியை அடித்துத் துரத்தினான். எங்கெங்கும் ஓடிக் கடைசியாக இந்த மலையில் வந்து ஒளிந்து உயிர் வாழலாயினன். உடனே வாலி எங்கள் அரசனை இந்த சுக்ரீவனின் மனைவியாகிய உருமையும் கைக்கொள்ளலாயினன். வல்லமையுள்ள அன்பில்லாத அந்த வாலியால் அல்லலும் பட்டு அரசையும் இழந்து, மனைவியையும் பறிகொடுத்து மயங்கிக் கிடக்கின்றான் மன்னவன். இதுவே இந்த இல்லத்தில் பெண்களில்லாத நிறைகுறைவினுக்குக் காரணம். (மரா. 109).

''உருமை யென்றிவற் குரிய தாரமாம்
அருமருந்தையும் அவன் விரும்பினன்
இருமையுந்துறந் திவணிருந்தனன்
கருமம் இங்கிதே கடவுள் என்றனன்! அனுமன்.

இப்படிக் காலமும் இடமும் கண்டு, உணவுங் கையுமாயுள்ள நேரம், பாலும் அன்னமும் பருகும் நேரம் பார்த்து வாலி செயலை அனுமன் வகுத்துக் காட்டி முடித்தனன். கேட்டிருந்த செம்மல் எப்படிப்பட்டவன். பெற்ற அரசைச் சிற்றன்னை சொற்கேட்டுத் தம்பிக்கே விட்டுக் கொடுத்து வெளியேறிய விமலன். அவனுக்குத் தம்பியின் தாரத்தையும் வெளவினன் ஒருவன் உளன் என்றால் எப்படியிருக்கும். எங்கே அவன் என எழுந்தனன் ஏந்தல்.

''உலகம் ஏழினெடு ஏழும் வந்து அவன் உயிர்க்கு உதவி
விலகும் என்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
தலைமை யோடு நின் தாரமும் உனக்கு இன்று தருவேன்
புலமையோய் அவன் உறைவிடம் காட்டு எனப் புகன்றான்'' (மரா. 113

வள்ளலுக்கு வந்த ஆத்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ளச் சுக்ரீவன் சிறிது தயங்கி அனுமனை அழைத்துக் கொண்டு, அவ்விடத்தகன்றான். ஒரு திட்டமும் இன்றி நமது இட்டம்போலப் புறப்பட மட்டுப்பட்டவனே வாலியென மயங்குகின்றேனே என்றனன். அனுமன், வந்துள்ள வாள் வீரன் பாற்கடலில் பள்ளி கொண்ட பரமனே என்பதில் ஐயமில்லை. ஆயினும் உங்கள் ஐயமும் அகல மராமரத்தின்பால் விடுவோமெனக் கொண்டு சென்றனன். சென்றார்கள்; மரங்கள் துளைபட்டன. மன்னனுக்கும் மதிப்பு உண்டாகிவிட்டது. பின்னர் துந்துபி எலும்பைக் காட்டினார்கள். இவர்கள் நமது வல்லமையைப் பார்க்கின்றார்கள் என்பது தெரிந்த இராமனும் நமது தம்பி ஆற்றலையும் கொஞ்சம் இவர்களுக்குக் காட்டி வைப்பது நல்லதெனக் கருதினன். ஏன்? புது சம்பந்தம், ஆனதால் ஒருவர் பெருமையை ஒருவருக்குக் காட்ட வேண்டித்தானிருக்கிறது. துந்துபி எலும்பைப் பாதத்தால் தூக்கியெறிந்தனன் இளவல். கவியினங்கள் கண்டன; கருத்துள் அச்சங் கொண்டன.

அடுத்துச் செய்யும் செயலுக்கு வருவோம். பிறகுச் சீதா தேவியார் வானத்திருந்து வீசிய நகை முடிப்பொன்று அவர்களிடத்தில் இருந்தது. அதைக் கொண்டு வந்து வள்ளலின் முன் வைக்கச் செய்தனன் அனுமன். அண்ணல் அவிழ்த்துப் பார்த்தனன். மாதவியைப் பொல்லாதவளென மனமறிய இகழ்ந்து வந்தனன் கோவலன். அவனே கோசிகமாணிகொடுத்த மாதவி கைப்பட்ட ஓலையைத் தொட்டவுடன் மனம் வேறாகி அவளிடம் தப்பில்லை, நானே பிழைபட்டேன் என நைந்து நைந்து உருகினான் கோவலன். மாதவி வாங்கிப் பிழைக்க வந்தவள். சீதை சீதனத்தால் கற்பால் கனிவால் மணாளனைத் தாங்கிப் பெருமைப்படுத்த வந்த தையல். அவள் கைப்பட்ட ஒலை கனிவிக்கின்றது தன் கண்ணாளனை. இவள் வடிவெலாம் பற்றிக் கொண்டிருந்த பணிகளைத் தொட்டுப் பார்த்த பரமன் என்ன பாடுபட்டிருப்பன்? மயர்ந்தனன் மகிழ்ந்தனன், அயர்ந்தனன், அழுதனன், துயர்ந்தனன் துடித்தனன், தோன்றல். ''கருங்கடலைத் தோண்டினர் எங்கள் முன்னவர், கங்கையைக் கொண்டுவந்தனர் எங்கள் முன்னவர், மானும் புலியும் ஒரு துறையில் புனலுண்ணக் கண்டனர் எங்கள் முன்னவர், யான் கட்டிவந்த வளைக் காக்க விதியிலேனாயினன். அவள் யான் உயிரோடிருக்கும்போதே அவள் தனது கலன்களைக் கழிக்க நேர்ந்ததேயென்றனன். அவனது அகத்தின் அழுகையை யாரறிவார். (கலன் காண் படலம் 23).

''கருங்கடல் தொட்டனர் கங்கை தந்தனர்
பொரும்புலி மானொடு புனலுமூட்டினர்
பெருந்தகை யென்குலத் தரசர் பின்ஒரு
திருந்திழை துயரம்நான் தீர்க்க நோற்றிலேன்''

இத்தொலைவில் துயரம் கண்ட சுக்ரீவனும் மனங்கலங்கினன். ஐயனே? வாலியைப் பின்னே பார்த்துக் கொள்ளலாம். அந்த இராவணனைத் தொலைத்து அன்னையை மீட்பதை முன்னே வைத்துக் கொள்ளலாம் என்றனன்.

''என்னுடைச் சிறுகுறை முடித்தல் ஈண்டு ஓரீஇப்
பின்னுடைத் தாயினுமாகப்; போதும்,
மின்னிடைச் சனகியை மீட்டு மீள்துமால்
பொன்னுடைச் சிலையினாய் மீண்டு போயென்றான்''

ஆனால், அச்செயலைச் செய்ய ஐயன் ஒப்பவில்லை. அமைச்சனாகிய அனுமனும், காரணங்கள் சில காட்டி, வாலி வதையே முதலிடம் பெறவேண்டும் என்றனன். அநுமன், அரக்கர் வாழிடங்கள் பல. அவன் எங்குக் கொண்டு வைத்துளனோ. அவற்றையெல்லாந் தேடப் படைபலம் வேண்டும். அந்தப் படைகளைக் கூட்ட நமக்கு அதிகாரம் வேண்டும். அதிகாரம் வர அரசு மாற வேண்டும். அரசு மாற வாலி தொலைய வேண்டும். ஆதலால், இதுதான் முன் செயலாக வேண்டும்.

''கொடும்படை வாலியைக் கொன்று கோமகன்,
கடுங்கதிரோன் மகனுக்கிக், கைவளர்
நெடும்படைக் கூட்டினாலன்றி, நேடரிது;
(நேடுதல்—தேடுதல்)
அடும்படை அரக்கர்தம் இருக்கை ஆணையாய்''

என்று முடித்தனன் அனுமன். பின்னர்த் தோன்றலின் துயரமெங்கே? துணைவனின் சுறுசுறுப்பு எங்கே? எதுவும் அமைச்சர்களுக்கு அடக்கந்தான் அல்லவா. பிந்தி வைக்கப்பட்டது இராவணன் வதை, முந்தி வந்து நின்றது வாலியின் வதை.

மாபாரதத்தில், தம்பியின் கணைகளால் அண்ணனை அழித்துவிட்டுக் கலங்கியழுதான் தருமராசன். அவன் கண்ணனைப் பார்த்துக் கதறுகின்றான்: ''ஏ மணிவண்ணா! நீ மாமன் மகனாக வந்தாய். எங்கள் மாதா வாயைப் பூட்டிவிட்டாய். தம்பி அருச்சுனனை ஏவினாய், தமையன் கன்னனைக் கைகழுவச் செய்தாய். எங்களுக்கா பாரதப் போர்? எல்லாம் உங்கள் உள்ளம் போல்தான் அல்லவா'' என்றனன். பின்னர் நடந்த இதுதான் முன்னர் நடந்தது அங்கே. அமைச்சன் அனுமனே எல்லாவற்றையும் திசை திருப்பும் மாலுமியாய்ச் செயல்பட்டான் வாலியின் வதையில்.

# நம்மாழ்வார் கவிதை நலம்

புலவர் சி. முத்துப்பிள்ளை

''கடவுள் உண்டு' என்பவரை ஆத்திகர் என்றும், 'இல்லை' என்பவரை நாத்திகர் என்றும் கூறுகின்றோம். ஆத்திகரிடையே பல தெய்வ வழிபாடும், ஒரு தெய்வம் பற்றிய பல உருவ வழிபாடும் பண்டுதொட்டு இருந்து வருகின்றன. நாத்திகரிடையே பல தெய்வங்களும் இல்லை; பல உருவங்களிலும் தெய்வமில்லை என்ற கோட்பாடு நிலவி வருகின்றது.

கடவுள் பற்றிய வகையில் 'ஆம்' என்பது ஆத்திகர் முடிவும், 'இல்லை' என்பது நாத்திகர் துணிபுமாகும். இவ்விருவகைக் கோட்பாடும், இரு வகைக் கோட்பாட்டினரும் இன்று நேற்று அன்று, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே இருந்து வந்திருக்கக் காண்கின்றோம். 'சொல்லிற்குக் கீரன்' என்று பெருமை பூண்ட அருட்கவி நக்கீரனார், ''குறமகள் முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க'' என்று திருமுருகாற்றுப்படையில் நாத்திகரைக் குறித்துக் காட்டுகின்றார். 'முரணினர்' என்பது, கடவுள் இல்லை என்றும் மறுத்துக் கூறும் நாத்திகர் என்று பொருள்படுவது.

நாத்திகர், தமது 'இல்லை' என்ற கோட்பாட்டைப் பெரிய மின் எழுத்துக்களில் வானத்தின் ஒரு முனையிலிருந்து மறு முனை வரை எழுதி எழுதி இயற்கை, தாங்கள் கண்ணுக்குக் காட்டுவது போல் பெருமிதமான உண்மை!' என்றும் சாதிக்கின்றார்கள்.

ஆம் என்னும் உண்மை நித்தியமானதா? அல்லது இன்மை நித்தியமானதா? இதன் உண்மையை உணர்த்தும் தத்துவ வரலாறே இரணியன், பிரகலாதன் வரலாறு.

பரமனின் பெருநிலையை உணராத இரணியன், 'இல்லை' என்றான். ஆம் என்ற கோட்பாட்டினையுடைய பிரகலாதன், 'இல்லை என்ற அந்தச் சொல்லினும் உளன்' என்றான். 'அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உள்ளான்' என்ற கோட்பாட்டினையுடைய பிரகலாதனின் வாதத்தை, தூணினின்று வெளிப்பட்ட எம் பெருமான் நிலைநிறுத்தி, உண்மை நிலையை உலகிற்கு உணர்த்தியருளினர்.

இது போன்ற அருளற்புத நிகழ்ச்சிகளால் இறைவன், உண்மை நிலையை உலகிற்கு உணர்த்தியருளியதால், பண்டு தொட்டு இன்றுகாறும் பேரறிவாளர் பலரும் 'ஆம்' என்னும் கோட்பாட்டினராக ஒழுகி வருதலைக் காண்கின்றோம். ஆனால், வைணவ மெய்யடியார்களுள் தலைமை பூண்டு திகழ்பவராகிய, சடகோபர் என்று சிந்தை குளிரப் போற்றப் பெறும் நம்மாழ்வார் பெருமான் 'ஆம்' என்பதனுள் இன்மைக்கும் இடமுண்டு என்ற தத்துவத்தை உணர்த்தும் வகையில் நாத்திக விளக்கம் அருளியுள்ளார். அப்பெரியவரின் நல்லுரை, இன்றைய நாத்திகர்க்கு ஓர் அறிவுரையாக, பொன்னுரையாக நின்று பொலிவுறுகின்றது.

பகவானின் பெருமை மிகு கல்யாண குணங்களைப் போற்றிக் கூறுவதில் நம்மாழ்வார் பெருமானுக்கு நிகர் அவரேதான். ஏனென்றால், வேத வேதாந்தங்களின் உட்பொருள்களை இறைவன் திருவருளால் ஓதாதுணர்ந்த பெரியவர் ஆவர்.

பரம்பொருள் என்றும், மெய்ப்பொருள் என்றும், வேத முதற் பொருள் என்றும் போற்றப்பட்டு விளங்குகின்ற பரமன், எல்லாப் பொருள்களிலும் எப்பொழுதும் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன் என்பதனைப் பல தெய்வீகப் பெருமக்கள் கூறியுள்ளனர். எல்லாப் பொருள்களிலும் எப்பொழுதும் இறைவன் நீக்கமின்றித் தங்கியிருக்கின்றான் என்றால், அவ்வப் பொருள்களினுடைய வளர்தல், குறைதல் முதலிய தன்மை வேறுபாடுகளும், இன்ப துன்பங்களும் அப்பரம்பொருளாகிய இறைவனுக்கு உளவாமோ என்ற ஐயம் 'இன்மை' என்ற கோட்பாட்டினை உடையாரிடத்து உண்டாதல் இயல்பு. அவர்களுடைய ஐயத்தை நீக்குதற் பொருட்டே கடவுள் என்ற திருப்பெயரையும் அப்பரமனுக்கு வழங்கினர் பண்டைய சான்றோர்கள். இறைவன் அவ்வாறு தங்கியிருப்பினும், அவற்றினுடைய வளர்தல், குறைதல் முதலிய தன்மை வேறுபாடுகளும், இன்ப துன்பங்களும் தன்னைச் சாராமல், அவற்றினைக் கடந்து, அவற்றைக் கடந்ததால் மனம் மொழி மெய்களையும் கடந்து நிற்பவன் பரம்பொருளாகிய இறைவன் என்பதைக் கடவுள் என்ற திருப்பெயர் உணர்த்துகின்றது. இத்திருப்பெயருக்குரிய வேத நுட்ப விளக்கமாக, இன்மைக்கோட்பாட்டினரின் ஐயத்தைக் களைவதற்காக, மெய்ஞ்ஞான ஆசாரியராகிய சடகோபர்.

''புலனெடு புலன் அலன்'' என்று திருவாய் மொழிந்தருளியுள்ளார். இதில் உள்ள 'புலன்' என்ற சொல், பிரமாணங்களால் அறியப்

படுகின்ற எல்லாப் பொருள்களையும் உணர்த்தும். 'ஒடு' என்ற சொல், எல்லா உயிர்களினுடைய உள்ளங்களிலும் பிரவேசித்து, அவற்றிற்கு நியாமகனாய், ஆன்மாவாய் இருக்கும் நிலையைக் காட்டுகின்றது. ஆனால், எல்லா உயிர்களுள்ளும் உயிராய் நின்றால், உடலினுடைய வளர்தல், தேய்தல் முதலிய நிலை வேறுபாடுகளும், உயிர்களினுடைய இன்பதுன்பங்களும், இறைவனாகிய தன்னையும் பொருந்துமாறு இருக்கின்றனவோ என்றால், அங்ஙனம் இரான். தான் ஒட்டு அற்று, அவற்றைக்கடந்து விளங்கி நிற்பவன் என்பதனைப் 'புலன் அலன்' என்ற தொடர் காட்டுகின்றது. எனவே, அவ்வப் பொருள்களினுடைய தன்மை வேறுபாடுகளும், இன்ப துன்பங்களும் தன்னைத் தீண்டா வண்ணம் கடந்து நிற்பவன் இறைவன் என்ற தத்துவத்தை உணர்த்துவதன் வாயிலாக, 'இன்மை' என்ற கோட்பாட்டினரின் ஐயத்தைப் போக்கி, இறைவனின் கல்யாண குணத்தையும் போற்றுகின்றார். இறைவனின் இப்பெருநிலையினையே சடகோபர் மற்றொரு திருப்பாசுரத்தில்,

''யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயந் தோறும்
தோய்விலன், புலனைந் துக்கும்
சொலப்படான்; உணர்வின் மூர்த்தி;
ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதுமோர் பற்றி லாத
பாவனை யதனைக் கூடில்
அவனையும் கூட லாமே''

என்று மிக அழகாகத் தெளிவுபடுத்துகின்றார். இத்தத்துவ நுட்பத்தினையே ''தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற சுடரே'' என்று கம்பரும் குறித்துக் காட்டினார்.

''ஆம்'' என்னும் கோட்பாட்டினராகிய ஆத்திகப் பெருமக்கள், தாம் தாம் அறிந்த வகைகளில் அறியப்பட்ட அவ்வத் தேவர்களே இறைவர் என்று நினைந்து, அத்தேவர்களுடைய திருவடிகளையே பற்றுக் கோடாகப் பற்றுகின்றார்கள். அவர்களால் பற்றப்படுகின்ற அத்தேவர்களும், இறைவர் என்ற நிலையில் குறைவில்லாதவர்களாக இருக்கின்றார்கள். இதனை, நாம் பல திருக்கோயில்களில் நிகழும் வழிபாட்டிலும், பல தெய்வ வழிபாட்டிலும் தெளிவாகக் காண்கின்றோம். இந்நிலையினை உணர்ந்த நம்மாழ்வார் பெருமான், இதற்கான காரணத்தையும் உணர்ந்து,

''அவரவர் தமதமது அறிவுஅறி வகைவகை
அவரவர் இறையவர் எனவடி யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர், இறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே''

என்று மிக இனிமையாகப் பாசுரம் பாடியருளினார். அவரவரும் பற்றும் அவ்வத் தேவர்களும் இறைவர் நிலையில் குறைவிலராய் இருக்கக் காரணம், அத் தேவர்கள் தங்களுடைய ஆகமங்களில் விதித்து வைத்த முறையால், அவர்களை வணங்குகின்ற மக்கள் தாம் தாம் விரும்பிய பலன்களைப் பெறுமாறு, அத்தேவர்களின் உயிர்களுக்குள் உயிராக, அந்தராத்துமாவாகத் திருமகளின் கேள்வனாகிய திருமால் நின்று அருள் புரிவதே என்று சடகோபர் தெளிவு செய்கின்றார்.

''இன்மை''என்னும் கோட்பாட்டினராகிய நாத்திகர், திருக்கோயில்களையும், பல தெய்வத் திருவுருவங்களையும் கடிந்துரைக்கின்றனர். திருக்கோயில்களில் கடவுள் இல்லையென்றும், கோயில்களில் உள்ளதெய்வத்திருமேனிகளாகிய சிலைகளில் தெய்வங்கள் இல்லையென்றும் கருதுகின்றனர்.

சாம வேத சாரமாகிய திருவாய் மொழியினை அருளிய சடகோபர் 'ஆம்' என்ற நிலையினரையும், 'இல்லை' என்ற கொள்கையினரையும் கண்டுதானோ என்னவோ, இவ்விரு வகையினர் கோட்பாடுகளிலும் இறைவன் பொலிவுறுகின்ற பெரு நிலையினை —கல்யாண குணத்தினை இனிமை மிக இயம்புகின்றார். 'இல்லை' என்பார் கொள்கையிலும் இறைவன் இருக்கும் பெற்றியினைக் கூறும் பொருள் நுட்பம், இன்புறுத்துவதாயும் உள்ளது!

'பகவான் உண்டு என்றால், அவன் உள்ளவனாகின்றான், அப்பெருமானது திருவுருவங்கள் இவ்வுருவங்கள். பகவான் இல்லை என்று கூறினால், அவன் உருவமல்லாத அருவப் பொருள்கள். அஃதாவது, பகவான் சூக்கும சரீரமாக உள்ளவன் என்பதாகும் என்று சடகோபர் இருவகைக் கொள்கையிலும் பகவான் உள்ள பாங்கினைத் தெளிவு படுத்துகின்றார்.

''உளன் எனில் உளன், அவன்
உருவம் இவ்வுருவங்கள்,
உளன் அலன் எனில், அவன்
அருவம் இவ் அருவங்கள்''

''ஆம்'' என்ற கொள்கையினராகிய ஆத்திகரின் பற்றுதலுக்குப் பற்றுக்கோடாக இறைவன் பல தெய்வத் திருவுருவங்கள் கொண்டு விளங்குகின்ற சிறப்பினையும், தூலசரீரங்களாகத் திகழ்கின்ற சிறப்பினையும், 'இல்லை' என்ற கொள்கையினராகிய நாத்திகரின் வாதத்தில் பகவான் அருவநிலை கொண்டு —சூக்கும சரீரங்கள் உடையவனாகத் திகழ்கின்ற சிறப்பினையும் புகன்ற சடகோபர், அடுத்து பகவான் இருவகைக் குண நலன்களையும் கொண்டு விளங்கும் பெரு நிலையினை உணர்த்துகின்றார்.

''உளன் என்றும், இலன் என்றும் சொல்லப்படுகின்ற 'ஆம்', 'இல்லை' என்றநிலைகளையும் பண்பாக உடைய தன்மையினால், உருபியும், அருபியுமான இரு வகை உடைய தன்மையில் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் ஒழிவு இன்றிப் பகவான் நிறைந்திருக்கின்றான் என்று நம்மாழ்வார் பெருமான் பரந்தாமனின் கல்யாண குணத்தைப் போற்றுகின்றார்.

'' உளன்என, இலன் என,
இவைகுணம் உடைமையில்
உளன் இரு தகைமையொடு
ஒழிவு இலன் பரந்தே ''


பகவான் உண்டென்று சொன்னால், அவன் உருவப் பொருளாக உள்ளவன் ஆகின்றான் என்றும், உளன் அலன் என்று சொன்னால், அருவப் பொருளாய் நிற்கின்றான் என்றும் நம்மாழ்வார் நவிலுகின்ற பாங்கு, ஆத்திகரிடத்தும் பகவான் பொலிவுறுகின்ற எழிலினை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இதனை ஒட்டியே மற்றொரு வைணவப் பெரியவரும்,

'' உளன் என உணர்ந்தார்க்கு
உளையும் ஆயினை,
இலன் என இகழ்ந்தார்க்கு
இல்லையும் ஆயினை ''

என்றும் போற்றியதை இங்குக் கருத வேண்டியதாயுள்ளது. ஆத்திகர், நாத்திகர் ஆகிய இரு திறத்தாரும் முறையே உளன் என்று உருவ நிலைத் தன்மையும், இலன் என்று அருவ நிலைத் தன்மையுமாகிய குணங்களையே போற்றுகின்றனர் என்பதனை, நம்மாழ்வார் பெருமான் உரைக்காமல் உணர்த்துகின்றாரன்றோ?

வைணவ சமயத் தலைவர் என்று போற்றப் பெறும் சடகோபர் பெருமான் அருளிய இத் திருவாய் மொழிகள், இன்றைய நாத்திகவாதிகட்குத் தக்க தத்துவ உரைகளாக, நல்லுரை மொழிகளாக அமைந்து விளங்குகின்றமை, நம் மனோர்க்குப் பெரிதும் இன்பம் பயப்பனவாய் உள்ளன.

**



பொள்ளாச்சி அருள்திரு வரதராசப் பெருமாள் கோயிலின் தேர்த்திருவிழா, 31-3-1975 அன்று சிறப்புற நடைபெற்றபொழுது, **அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன்** அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல். அறங்காவலர் குழுத்தலைவர் திரு. N. பிச்சை மணி, B.A., B.L., அவர்களும், மற்றும் பல பெருமக்களும் உடன் உள்ளனர்.

# வருக! இராமேசுவரம்

தீர்த்தம், மூர்த்தி, தலம் ஆகிய முச்சிறப்புக்கள் கொண்ட பன்னிரு ஜோதிர்லிங்க தலங்களுள் ஒன்ருக விளங்குவதும், சிற்பக்கலைச் சிறப்பும், உலகப் பிரசித்தி பெற்ற மா பெரும் பிராகாரங்களுடன் கூடியதுமான அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு வந்து அருள்மிகு இராமநாத சுவாமி அருள்மிகு பர்வதவர்த்தினி அம்பாள் திருவருள் பெற்று எல்லா நலன்களும் அடைய ஆத்திகப் பெருமக்களை வேண்டப்படுகிறது.

இத்திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு உள்ளன.

சுத்தமான கோடி தீர்த்தம், பிரசாத பாக்கெட்டுகள், திருக்கோயில் புகைப்படம், தலவரலாறு புத்தகங்கள் முதலியவை திருக்கோயில் விற்பனை நிலையத்திலிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ள வேண்டப்படுகிறது. புண்ணிய தீர்த்தங்களில் புனித நீராடப் பக்தர்கள் தாங்களே நேரடியாகச் சீட்டுகள் திருக்கோயில் நுழைவாயிலில் பெற்று ஸ்நானம் செய்யக் கோரப்படுகிறது. எல்லா விவரங்களுக்கும் திருக்கோயில் அலுவலகத்தில் தொடர்பு கொள்ள வேண்டப்படுகிறது.

இத்திருக்கோயிலில் ஸ்ரீ இராமநாத சுவாமிக்கும், ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் 1-க்கு ரூ. 10/- வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும் வெள்ளிக் காசும் பெறலாம்.

இத்திருக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப்பணிக்குத் தாராளமாக நன் கொடை வழங்க வேண்டுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**தா. வேணுகோபால், பி.ஏ.,**
நிர்வாக அதிகாரி,

**அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்**

**தர்மகர்த்தர்கள் :**

1. திரு. எஸ். இராமநாத சேதுபதி,
   (இராமநாதபுரம் ராஜா), தலைவர், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில்.
2. திரு. ஏ. எல்.ஏஆர். சோமனுதன், செட்டியார், தேவகோட்டை.
3. திரு. டி. கே. சிறைமீட்டான், எம்.எல்.ஏ., பரமக்குடி,
4. திரு. ஆர்.எம். முருகப்ப செட்டியார், நடராஜபுரம்,
5. திரு. ஏ. டி. எம். இராமநாதத் தேவர், அஞ்சுக்கோட்டை.

# திருப்பொன்னூசல்

சிவனருள் சேதுராம்

முன்னுரை:

வாதவூரடிகளார் உத்தரகோச மங்கை என்ற திருத்தலத்தில் அருளிச் செய்த திருப் பாடல், 'திருப்பொன்னூசல்'. ஊஞ்சலில் ஆடிக்கொண்டே மகளிர், அங்கு இங்கு எனாத படி எங்கும் நிறைந்து இலங்கும் இறைவரை, உத்தரகோசமங்கையில் ஒளிவளர் சுடராய்க் கோவில் கொண்டுள்ள பெம்மானை, ஏத்திப் புகழ்ந்து பாடுவதாக இப்பாடல்கள் அமைந் துள்ளன.

அடியார்களை அண்ணலின் அருள், தூய்மை செய்யும் பாடல்கள் இவை. இக்கருத்தைத் தெரிவிக்கின்றது, இப்பாக்களுக்கு 'அருட்சுத்தி' என்று தரப்பெற்றுள்ள தலைப்பு. மாணிக்க வாசகப் பெருமானின் மற்றப்பதிகங்களில், இறைவர் மறக்கருணை காட்டி ஆட்கொண்ட வரலாறுகள் பல வந்துள்ளன. ஆனால் திருப் பொன்னூசல் பதிகத்தில், அறக்கருணையோடு அடியவர்களை ஆட்கொண்ட நிகழ்ச்சிகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. இவை இப் பதிகத்தின் தலைப்புக்கு விரிவுரைகளாக அமைந் திருப்பதைக் கண்டுணர்ந்து உவக்கலாம்.

வாதவூரடிகளார் இறைவர் தம்மை வலிய வந்து ஆட்கொண்டருளிய அரும் செயல்களைத், தலைவியை வாயிலாக வைத்து, ஒவ்வொரு பாடலிலும், உணர்வு மயமாகி உரைத்தருளு கின்றார். சொல்லினிமையும், பொருளினிமை யும், அருளினிமையும் பூண்டு மிளிரும் இப் பாடல்களின் விளக்கங்களை இவ்வரிசையில் காணலாம்.

குறிப்பு: ஊஞ்சல் ஆடுவதில் நமக்கு ஓர் அடிப்படை உண்மை உணர்வுக்கு வரும். பலகை நம்மைத் தாங்குகிறது என்று முதலில் எண்ணி மகிழ்ந்து ஆடுவோம். ஆடும்போது மேலும் சிறிது எண்ணிப் பார்த்தால், கயிறுகள்தாம் பலகையைத் தாங்குகின்றன என்பதை அறி வோம். படிப்படியாகக் கயிறுகளைக் கூரை யிலுள்ள வளையங்கள் தாங்குகின்றன என் பதை அறிவோம். வளையங்களைக் கூரை தாங்கு கிறது என்றும், கூரையைச் சுவர்கள் தாங்கு கின்றன என்றும், கடைசியாகச் சுவர்களையும் அவற்றின் வழி மற்ற யாவற்றையுமே நிலம் தாங்குகிறது என்றும், அடிப்படை உண்மையை யும் உணர்வோம்.

நிலமே நமது ஊஞ்சல் ஆட்டத்திற்கு அடிப்படையில் தாங்கும் பொருளாக இருப்பது போல, நம் வாழ்விலும், பெற்றார் உற்றார், மனைவிமக்கள், செல்வம், செல்வாக்கு, அதிகாரம் ஆட்சி, அறிவுத்திறமை, இவை ஒவ்வொன்றும், நமக்குப் படிப்படியாகத் துணைபோன்று காணப் பட்டாலும், கடைசியாக எல்லாவற்றுக்கும் துணையாகி, எல்லாவற்றையும் படைத்தளித்து, நமக்கு உறுதுணையாக விளங்கிவருவது, உடைய வனது அருளாற்றலே என்னும் பேருண்மையை, ஊஞ்சல் ஆட்டம் நமக்கு விளக்குகிறது. கயிறு அறுந்தால் தாங்கிக் கொள்வது நிலந்தான். மேற்கண்ட வாழ்வின் நலங்களில் எது இற்றுப் போனாலும், நாம் இடர்ப்பட்டால் நம்மைக் காப்பது ஆண்டவரின் அருட்பெருக்கேயாகும். எனவே ஊஞ்சல் ஆட்டம், உள்ளத்தில் அருள் உணர்வை ஆழப்பதிய வைக்கும் ஆட்டமாகும்.

மாண்புமிக்க மங்கையர்களே! மகிழ் வோடு ஊஞ்சல் ஆட வருகிறீர்களா? மரங் களின் கிளைகளில் கயிறுகளைக் கட்டி ஆடும் அற்ப ஊஞ்சல் நமக்கு வேண்டாம். மரக் கிளைகள் ஒடிந்து சரிந்தாலும், கயிறு அறுந்து போனாலும், நாம் கீழ் விழநேரிடுமே! இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பெற்று, மரப்பலகை யிட்ட, எளிய ஊஞ்சலும் நமக்குத் தேவை யில்லை. அத்தகைய ஊஞ்சல் அனைவர் இல்லங் களிலும் இருக்கின்றனவே!

ஆமாமடி! உடையவனின் உயர்நலங்களைப் பாடி ஆட இருக்கும் நாம், மிகமிக உயர்ந்த வகையான ஊசலில்தான் ஆட வேண்டும். மற்றப் பெண்களைப் போன்ற சாதாரணமான வர்கள் அல்லரடீ நாம்! ஐயனின் அன்பிற்கு உவந்து, அவரது அருள்பெற்றுப்பொலியும் அடி யார்கள் அல்லரோ நாம்? அவர் புகழை எந்நேர மும் இடைவிடாது பாடிக்கொண்டேயிருப்ப வர்கள் நாம்; செய்யும் பணிகளையெல்லாம் செம்மலின் திருவடிகளைப் பரவியே செய்ப வர்கள் நாம்! ஊசல் விளையாட்டின்போதும், உடையவர் நினைப்பே நம் உள்ளத்தில் நிறைந் திருக்கும்.

எனவே நம்தகுதிக்கு ஏற்ப, ஓர் அருமை யான ஊசலை உடையவர் நமக்கு அருளுவாராக! அந்த ஊசலின் கால்கள் நான்கும், சிறப்பு மிக்க பவளத்தால் செய்த தூண்களாக அமைய வேண் டும். நல்முத்துக்களைத் தங்கக் கயிற்றில் நெருக்கமாகக் கோத்த முத்து வடங்களே,

ஊஞ்சலைப் பற்றிப் பிணைத்திருக்கும் கயிறுக அமைய வேண்டும். அண்ணலின் புகழ்பாடும் அணங்கையர்களான நாம், அமரப்போகும் பலகையோ, கெட்டியான பொன்னினுல் செய்யப் பெற்றிருக்க வேண்டும். இத்தகைய சிறப்புக்களோடு ஓர் ஊசலை ஆண்டவர் நமக்கு அளிக்க, அதில் அமர்ந்து நாம் ஆட வேண்டுமடீ!

என் அன்பின் தோழியரே! இந்த உலகமே ஒரு பெரும் போர்க்களமாக அமைந்திருக்கிறது. அதில் அன்ருடம் போராடிக் கொண்டே நாம் வாழ்க்கை நடத்தி வருகிறோம். இந்தக் குடும்பப்போரில், பெண்களாகிய நாம், பலநேரங்களில் எதிர்த்து நின்று, வெற்றி தோல்விகளை ஏற்று, நாள்தோறும் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறிச் சமாளித்து வரவேண்டியிருக்கின்றதல்லவா? போர்க்களத்தில் வாள்களும் வேல்களும் மோதுகின்றன. நம் வாழ்க்கைப்போரிலோ, நம் கண்களே நமக்கு வாளாகவும், வேலாகவும் உள்ளன. அன்ருட நடப்புக்களைக் கூர்மையாகக் கவனித்து, தக்க நடவடிக்கைகள் எடுத்து, வெற்றிபெறக் கண்கள் தாமே நமக்கு உதவுகின்றன? அதனுல்தான் தோழியரே! இறைவர் நம் கண்களை அமைப்பில் வேலைப்போலவும், அறிவுக்கூர்மையில் வாளைப்போலவும் படைத்தருளியிருக்கின்ருர்.

எனவே போர்த்தொழிலில் பயன்படும் வேலைப்போலக் கண்களையுடைய வனிதா மணிகளே! சிறந்த பவளக்கால்களில், முத்து வடக்கயிற்றினுல் கட்டப்பெற்ற பொன்பலகையில் அமர்ந்து, நாம் பொன்னம்பலவரின் பெருமைகளைப் பாடியபடியே ஊசல் ஆடிக் களிக்கலாமா? ஆடியபடியே மனத்தில் அவரது அருமைத் திருவடிகளைப் பதித்துப் பணிந்து வணங்கலாமா? அந்த இணையடிகளின் ஈடு எடுப்பற்ற சிறப்பு தெரியுமா உங்களுக்கு? திருமால் எவ்வளவு சிறப்பு மிக்கவர்! அவர் பார்க்க இயலாமற்போன பாதமலரடிகளடீ அவை! அன்று அலர்ந்த புத்தம் புதிய செந்தாமரை மலர்களைப் போன்ற செவ்விய மலரடிகளடீ அவை! அத்தகைய சிவந்த பொற்பாத கமலங்களை, நாயைப்போன்ற இழிந்த போக்கைக் கொண்டுள்ள, அடியேனுக்கு நிலையான இருப்பிடமாகத் தந்துள்ளார், என் இறைவர்! உத்தரகோசமங்கையுள் உறைந்திருக்கும். அந்த உன்னதப் பரம்பொருள் வலியவந்து, நான் தஞ்சம் என்று பற்றி, என் நிலையான இருப்பிடமாகக் கொள்ளத் தமது இணையடிகளை 'அஞ்சேல்' என அபயம் தந்து அருள் புரிந்துள்ளார். தின்னத் தின்னத் தெவிட்டாததும், சுவைநயம் மிகுந்து பெருகுவதும், அருள் அமுதம் ஊற்றுகப் பெருகி வழிவதுமான, உத்தரகோசமங்கைப் பெம்மானின் திருவடிகளைத் தொழுதுபாடி, துதித்தபடியே நாம் பொன்னூசல் ஆடிக்களிப்போமாக.

---


# அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

## சிவந்திபட்டி, மம்சாபுரம்,

### ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

**கோயில் சிறப்பு விவரம்**

மேற்படி திருக்கோயில் அருள்மிகு ஆண்டாள் பிறந்த ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு அருகில் மேற்கே 7 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்து இருக்கிறது. மிகப் பழமையானது மிகப் புராதனமானது. கல்வெட்டுக்கள் உள. (தெளிவாகத் தெரியவும் இல்லை. புரியவும் இல்லை) ஏமூர் கொடிவழி வேளாளர்களுக்குப் பாத்தியப்பட்டது என நூல் வாயிலாகத் தெரிகிறது.

| | |
|---|---|
| வைகாசி மாதம் | விசாகத் திருவிழா |
| ஐப்பசி மாதம் | கந்தர் சஷ்டித் திருவிழா |
| கார்த்திகை மாதம் | கார்த்திகைத் திருவிழா |

மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. சென்னை தமிழக அரசு இந்து சமய அறநிலைய ஆணையர் உத்திரவு டி.டிஸ்.எண். 68145[74-ல் வழங்கப்பட்ட நிதி உதவித்தொகை 12000. இவற்றுடன் அனைவரும் நிதி உதவி தந்து கோயில் திருப்பணியை நிறைவேற்றி அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருவருள் பெற அனைவரையும் அழைக்கின்ருேம்.

மம்சாபுரம்

5-8-75.

பு. முத்துப்பிள்ளை, தலைவர்,
மா. வெங்கடாசலம் பிள்ளை.
கோ. கோவிந்தம் பிள்ளை,
அறங்காவலர்கள்.

# திருப்பதிகளின் திருப்பெயர்த் திருத்தங்கள்

மகாவித்துவான் பி.ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

உலக வழக்கில் பல சொற்கள் சிதைவுற்று இருப்பதை அறிஞர் அறிவர். மண் வெட்டியை மமிட்டி யென்பது; திருமண்பெட்டியைத் திரு மட்டியென்பது; திருமடைப் புள்ளியைத் திரு மாப்பிடியென்பது; மறுதாரை பாய்வதை மடி சார் பாயறது என்பதாகப் பல சிதைவுகள் பேச்சில் வந்துள்ளன. இவற்றைப் பற்றிப் பிரமாதம் ஒன்றுமில்லை. திவ்விய தேசத் திருப்பெயர்கள் பலவும் சிதைந்திருப்பது பற்றி, அவசியம் தெளிவுபடுத்த வேண்டியதாகிறது.

காஞ்சிபுரம் பகுதியில் திருப்புட்குழி என்றொரு திவ்விய தேசம். ஜடாயு க்ஷேத்திரம் என்பது இதற்கு வடமொழிப் பெயர். புள் - பறவை. திருப்புள் - ஜடாயு என்னும் கழுகுப் பறவை. இராமாவதாரத்தில் சக்கரவர்த்தித் திருமகனூர் சடாயு மகாராசர்க்கு இறுதிக்கடன் புரிந்த தலம் என்பது தலபுராண வரலாறு. இது நாளடைவில் திருப்புக்குழி ஆகிவிட்டது. காஞ்சிபுரத்திலிருந்து இராணிப்பேட்டை ஆர்க்காடு போகும் வழியில் திருப்பத்தில் இருக்கிற படியாலும், பள்ளமான இடத்தில் இருப்பதாலும், திருப்பக்குழி என்று பெயராயிற்று, என்று சிலர் வியாக்கியானம் பண்ணுகின்றார்கள். பாமர மக்கள் இதுதான் பொருள் என்று நம்பி விடுகின்றார்கள்.

திருநின்றவூர் என்பது தின்னனூர்ஆயிற்று. திருவெவ்வுளூர் என்பது திருவள்ளூர் ஆயிற்று. வடமொழியில் 'கிம்க்ருஹ க்ஷேத்திரம்' எனப்படுகின்றது. ''எவ்வுள் கிடந்தான்' என்று ஆழ்வார் பாடல். திருவள்ளூர் என்னமல் ''திருவுள்ளூர்'' என்றால் ஒருவாறு பொருந்தும். இடவெந்தையோடு திரு சேர்ந்தால் திருவிடவெந்தை ஆகும். 'இடவெந்தை எந்தை பிரானே' என்பது ஆழ்வார் பாடல். இதனைத் திருவடந்தை என்று தவறாக வழங்கி வருகின்றார்கள். இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள நித்திய கல்யாணிப் பெருமாள், அகிலவல்லி நாச்சியார் என்னும் தாயாரைத் தமது இடப் பாகத்தில் வைத்திருப்பதனால், இதற்குத் திரு இட எந்தை என்று பெயராயிற்று.

திருவேங்கடம் என்னும் திருப்பதிக்கு அருகில் தாயார் எழுந்தருளியிருக்கும் தலத்தை அலமேலுமங்காபுரம் என்று தெலுங்கர் வழங்கி வருகின்றனர். திருச்சானூர் என்று வழங்குகின்றார்கள் நம் தமிழ் மக்கள். அது கொச்சையான வழக்கு. இதற்குச் சுகபுரி என்பது தல புராணத்தில் வழங்கும் பெயர். சுகன் என்னும் முனிவர் தவம் புரிந்த தலம் என்றபடி. அதற்குச்சேரத் திருச்சுகனூர் என்பதே பொருத்தமான பெயராகும். ஆனால் இதனைத் திருச்சானூர் என்றும், சிரதானூர் என்றும் சாமானிய மக்கள் தவறாக வழங்கி வருகின்றனர்.

திருநாங்கூரைச் சேர்ந்த பதினொரு திருப்பதிகளுள் ''திருத்தேவனார் தொகை'' என்பது ஒன்று. இதனைக் 'கீழச்சாலை' என்றே பெரியவர்களும் வழங்கி வருகின்றார்கள். திருத்தேவனார் தொகை என்னும் திருப்பெயரை, அந்தப் பகுதியில் உள்ளவர்களும் பலர் அறியமாட்டார்கள்.

இதேபோல் ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்த நவ திருப்பதிகளுள் ஒன்றான வரகுண மங்கையைப் பெரியவர்களும் ''நத்தம்'' எனவே வழங்கி வருகின்றார்கள். ''வரகுண மங்கைக்கு எப்படி வழி?' என்று, ஒருகால் ஒரு பெரியவரைக் கேட்டேன். ''அப்படி ஒரு தலம் இந்தப் பக்கத்தில் இல்லையே. ஒருகால் அது மலைநாட்டில் இருக்கக் கூடும்'' என்றார், அந்த வைணவப் பெரியார்.

திருஇந்தளூரைத் திருவிழந்தூர் என்றே, பெரும்பாலான மக்கள் கூறி வருகின்றனர். இந்து என்னும் சந்திரன் சாபம் நீங்கப் பெற்ற தலம் ஆதலால் இதற்கு இந்தளூர் என்று காரணப் பெயர் ஏற்பட்டது. அது திரு என்னும் அடைமொழியோடு சேர்ந்து திருவிந்தளூர் என்றாயிற்று. அதனைத் திருஇழந்தவூர் என்று முறைகேடான பொருள் படும்படி, திருவிழந்தூர் என்று வழங்கி வருதல் பெரும் பிழையாகும்.

மலை நாட்டில் மூன்று நான்கு திவ்விய தேசங்கள், மலையாளர்களால் கொச்சையாகத் திரித்துச் சிதைத்து வழங்கப்பட்டு வருகின்றன. திருவித்துவக்கோடு என்பது திருமிற்றக்கோடு என்றும், திருவாறன்விளை என்பது ஆரம் முளை என்றும், திருவண்பரிசாரம் என்பது திருப்பதிசாரம் என்றும், திருவல்லவாழ் என்பது திருவல்லாய் என்றும் சிதைத்து வழங்கப்பெற்று வருகின்றன. இதனுல் மலைநாட்டுத் திருப்பதிகளின் யாத்திரைக்குச் செல்லும் பக்தர்கள் பலரும், தலங்களின் இருப்பிடமும் விவரமும் தெரியாமல் மயங்கும்படி நேர்கின்றது.

காஞ்சிபுரத்தில் உலகளந்த பெருமாள் சந்நிதியில் நீரகம்—காரகம்—கார்வானம் என்னும் மூன்று தலத்து எம்பெருமான்கள், தனித்தனி சந்நிதிகளில் சேவை சாதிக்கிறார்கள். ஊரகம் என்பது உலகளந்த பெருமாள் சந்நிதியின் திருநாமம். உரகம் என்பது வட சொல். அதற்கு ஆதிசேடன் என்பது பொருள். அச்சொல் ஊரகம் என்று நீட்டல் பெற்றிருக்கின்றது. பெருமாள் இங்கு ஒரு முனிவருக்கு ஆதிசேட வடிவினராகக் காட்சியளித்ததனால் இத்தலத்திற்குத் திருவூரகம் என்று திருப்பெயர் ஆயிற்று. திருநெடுந்தாண்டகத்தில் (8) 'நீரகத்தாய்' என்கிற பாசுரம் ஒன்றில் இப்பெருமான்களுக்கு ஆழ்வாரின் மங்களாசாசனம் அமைந்துள்ளது. இதில் ''பேரகத்தாய்' என்று இருப்பது, திருவரங்கம் பகுதியில் உள்ள அப்பக்குடத்தான் சந்நிதி என்று பிரசித்தமான திருப்பேர் நகரைக் குறித்தபடி. பாசுரத்தில் 'காவிரியின் தென்பால் மன்னுபேரகத்தாய்' என்று தெளிவாகவே அருளிச் செய்யப் பெற்றுள்ளது. அப்படியிருந்தும், இங்கு உலகு அளந்த பெருமாள் மிகப் பெரிய திருமேனி கொண்டு சேவை சாதிப்பதனால், 'பேரகத்தாய்' என்று உலகளந்த பெருமாளை, ஆழ்வார் மங்களாசாசனம் செய்தபடி என்று சிலர் சொல்லிப் போதருவது அறியாமையாகும்.

திருப்பேர்நகர் என்பது, சோழ நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாக வழங்குவதுபோல, பாண்டிய நாட்டிலும் ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்த நவ திருப்பதிகளுள் திருப்பேர்நகர் என்பது ஒன்றாக வழங்கப்பெறும். தென்திருப்பேரை என்பதே அது. திருப்பேரெயில் என்பது முழுத் திருப்பெயர். திருவாய் மொழியில் (7—3) இத்தலத்திற்கு மங்களாசாசனமான ''வெள்ளைச்சுரிசங்கு' பதிகத்தில் நிகமனப் பாசுரம் உட்படப் பதினொரு பாசுரங்களும் ''தென்திருப்பேரெயில்' என்றே உள்ளது. ''பேரையில்'' என்று ஒரு பாசுரத்திலும் கிடையாது. எயில் என்கிற பதத்தை விட்டு விட்டு, நாகை நாங்கை, குடந்தை, அழுந்தை, தஞ்சை முதலியவைகளைப் போல மரூஉவாகப் பேரை என வழங்குவது தவறன்று. ஆனால் ஆழ்வார் திருவாக்கில் பேரை என்று ஓரிடத்திலும் வந்தது கிடையாது. மணவாள மாமுனிகள் தாம் அருளிச் செய்த திருவாய்மொழி நூற்றந்தாதியில் இத்தலத்திற்கு அருளிய பாசுரத்தில் ''தெள்ளியமால் தென்திருப்பேர் சென்றுபுக'' என்றருளிச் செய்திருப்பது காண்க. இங்கே ''தென்திருப்பேரை சென்று புக'' என்று பாடமாக்கினால் வெண்பாவுக்குச் சிறிதும் சேராது. நாலசைச் சீர் வெண்பாவில் பயிலாது அன்றோ! அப்படி எங்கும் பாடமும் இல்லை!

இதுகாறும் கூறி வந்த சில எடுத்துக் காட்டுக்களால் திவ்விய தேசங்களின் திருப்பெயர்களை நம் மக்கள் எப்படியெல்லாம் திரித்துச் சிதைத்து வழங்கி வருகின்றார்கள், என்பதனைக் கண்டோம். இத்தகைய பிழைபாடுகளை உணர்ந்து திவ்விய தேசங்களின் திருப்பெயர்களை நம்முடைய ஆழ்வார்களும் ஆசாரியர்களும் எங்ஙனம் தமது பாடல்களிலும் நூல்களிலும் மங்களாசாசனம் செய்து குறிப்பிட்டுள்ளனரோ அங்ஙனமே போற்றி வழங்கி வருதல் நமக்கு உரிய கடமையாகும்.

**



கோவை மாவட்டம் பூண்டி அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோவிலுக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன், அவர்கள் வருகை தந்த பொழுது அவரை திருக்கோவில் சிறப்புக்களுடன் அழைத்துவரும் நிகழ்ச்சி. உடன் இருப்போர் செயல் அலுவலர் திரு. ம. ப. சாரங்கபாணி, பி.ஏ., சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கவாசகம்.
நாள்: 13—4—75

# மூன்று பிழைகள்!

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

இவ்வுலகில் பெரும்பாலான மக்கள், கடவுள் நம்பிக்கையுடையவர்களாகவே இருக்கின்றார்கள். உண்மையிற் சொல்லுவதாயின், நாத்திகர்கள் என்று எவருமே இல்லை. நாத்திகர்கள் என்பவர்கள், கடவுளுண்மையை மறுப்பதாகத் தவறாகக் கருதப்படுகின்றார்கள். நாத்திகர்கள் எனப்படுபவர்கள், கடவுளுண்மையை மறுப்பதில்லை; கடவுளைப் பற்றிக் கூறப்படும் பல்வேறு பொருந்தாக் கூற்றுக்களையே மறுக்கின்றார்கள். (There are no real atheists but only so called athiests. They object only to the false and inappropriate attributes which are assigned to Deity. They will rather have no God then one who is unworthy of belief).

நாத்திகர் என்போர் கடவுளை மறுப்பது இல்லை. கடவுளைப் பற்றிய தவறான கருத்துக்களையே மறுக்கின்றனர். (What the athiest denies is an idea of God, not God Himself).

கடவுள் நம்பிக்கையும், அதன் பயனாகிய சமயவுணர்வுமே, பிற உயிரினங்களினின்று மனிதனை வேறுபடுத்தி உயரிய தனிப் பெருஞ் சிறப்பு உடையவனாகச் செய்கின்றன. ஒரு மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு, மூச்சு எத்துணை அளவுக்கு இன்றியமையாத முக்கியத்துவம் உடையதாகத் திகழ்கின்றதோ, அத்துணை அளவுக்குக் கடவுளுணர்வும் இன்றியமையாத முதன்மையுடையதாகும் என்று, ஞானிகள் நவில்கின்றனர். (A knowledge of God is as necessary for true living as is the art of breathing for the body...We cannot do anything without breathing. But it may well be that we shall breathe all the better, and consequently walk, run, row, eat, think and speak better if we take some breathing exercises. This analogy is not exact because Divinity is much more then a mere breathing exercise).

**சமய உணர்வு :**

உலகெங்கணுமுள்ள மக்கள் அனைவரும் பொதுவாக, இயல்பாகவே கடவுள் நம்பிக்கையும், சமயவுணர்வும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். அதனை எவ்வளவுதான் பலவகைகளில் மாற்ற முயன்று முனைந்தாலும், அது திரும்பத் திரும்ப வேறு வழிகளில்கிளர்ந்து முளைத்தெழுந்து வளர்ந்து வரவே செய்கின்றது. (Man is incurably and incorrigibly religious).

1. நமக்கு மேற்பட்ட முழு முதற் பரம் பொருள் ஒன்று (Self-Existent, Primordial Principle, Unmoved Mover, Life, World Spirit, Elan Vital) இருக்கின்றது. அம்முழு முதற் பரம்பொருள், நம்மினும் மிக்க பேரறிவு பேராற்றல் பேரின்பம் ஆகிய பலப்பல குண நலங்களைப் பெற்று விளங்குகின்றது.

2. எல்லா வல்லமையும், பேரருளும் உடைய முழுமுதற் பெரும்பொருள் ஆகிய அக் கடவுளைத் தொழுது வழிபடுவது, மாந்தர் அனைவர்க்கும் உரிய நீங்காக் கடமையாகும்.

3. நல்லொழுக்கமும், நன்றி மிக்க பக்தி உணர்வும், அவ்வழிபாட்டிற்கு மிக மிக இன்றியமையாத உயிர்ப்பான பகுதிகளாகும்.

4. முழுமுதற் பெரும்பொருள் ஆகிய கடவுளின் திருவுள்ளம் அல்லது கட்டளைகளுக்கு மாறான செயல்கள் பாவம் ஆகும். பாவங்களைச் செய்வோன், அவற்றிற்காக வருந்துதலும், பின்னர் அவற்றைச் செய்யாதபடி திருந்துதலும் வேண்டும். கடவுளின் திருவுள்ளம் மகிழும்படி நாம் நடந்து கொள்ளுதல் வேண்டும். அது புண்ணியம் எனப்படும். கடவுளின் திருவுள்ளம் மகிழும்படி நடந்து கொள்ளுபவர்கள், அவர்தம் திருவருளைப் பெற்று, மேலான இன்பங்களையும் நலங்களையும் அடைவார்கள்.

5. இவ்வுலகமானது, எல்லாம் வல்ல கடவுளின் அருளாணையினால் இயங்கி வருகின்றது. அவ்வருளாணையே, அவரவர்கள் புரியும் நற்செயல் தீச்செயல்களுக்கு ஏற்ப முறையே இன்ப துன்பங்களை அளித்துக் காத்து அருள் புரிந்து வருகின்றது.

இத்தகைய கொள்கைகள், பொதுவாக எல்லாச் சமயங்களிலுமே அமைந்து காணப்படுகின்றன. இன்னோரனைய கொள்கைகள், கருத்துக்கள் எல்லாம், சமயங்களின் பொதுமை ஒருமைப்பாட்டை உணர்த்துகின்றன எனலாம்.

# அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில்,

# சங்கரநயினர்கோவில், திருநெல்வேலி மாவட்டம்.

பிற்காலப் பாண்டிய மன்னர்களில் ஒருவரான உக்கிரபாண்டியனுல் கட்டப்பட்ட இத்திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு புகழ்பெற்ற பிரார்த்தனைத் தலமாகும். அன்னை கோமதியின் அருந்தவத்துக்கு இரங்கி மாநிலத்தோர் சிவன் வேறு, திருமால் வேறு, என்று வேறுபடுத்துவது தவறு என்று உணரும் பொருட்டுச் சிவபிரான் ''பாதி சங்கரனும் பாதி நாராயணனுமாகக்'' காட்சி கொடுத்த தலம் இது ஒன்றே!

ஆண்டுதோறும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் முறையே 21, 22, 23 ஆகிய தேதிகளில் காலை 6.18 மணிக்குக் கதிரவன் சங்கரலிங்கப் பெருமானை வழிபடும் காட்சியை இன்றும் கண்டு வணங்கலாம். நாடெங்கிலுமிருந்து நோய்வாய்ப்பட்டவரும், மன நோய் உடையவர்களும் கோமதி அம்பிகையை வழிபட்டு நோய் நீக்கம் பெறுகின்றனர். வீடுகளில் நச்சுப் பூச்சிகள் வராமலிருக்கத் தங்கம் அல்லது வெள்ளியிலான பாம்பு, தேள், பூரான் இன்ன பிற உருவங்களையும், நோயின்றி வாழத் தங்கம் அல்லது வெள்ளியாலான கை, கால், முகம் இன்ன பிற உருவங்களையும் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

| | | |
|---|---|---|
| இறைவன் | : | அருள்திரு சங்கரலிங்கசுவாமி |
| இறைவன் | : | அருள்திரு சங்கரநாராயணசுவாமி |
| இறைவி | : | அருள்திரு அன்னை கோமதி அம்பிகை |
| ஸ்தல விருட்சம் | : | புன்னை |
| தீர்த்தம் | : | நாக சுனை |
| ஆகமம் | : | காமிகாகமம் |

மேலும் வழிபட வருபவர்கள் வசதிக்காக விடுதிகளும், கல்யாண மண்டபமும், நூல் நிலையமும் இத்திருக்கோயில் பொறுப்பிலுள்ளன. மேலும் இத்திருக்கோயிலாரால் ஓர் இலவசச் சித்த மருத்துவமனையும், ஓர் ஆரம்பப் பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

திருவாவடுதுறை ஆதீனம் பத்தாவது குருமகா சந்நிதானம் அவர்களால் பதிக்கப்பட்டு உள்ள ஸ்ரீ சக்கரம் மீதமர்ந்து நோன்பியற்றினல் வேண்டும் வரம் பெறலாம்.

**முக்கிய திருவிழாக்கள் :**

1. ஆடித்தபசுத் திருவிழா
2. சித்திரைத் திருநாள்
3. திருவெம்பாவைத் திருநாள்
4. திருக்கல்யாணத் திருநாள்
5. கந்த சஷ்டித் திருநாள்
6. நவராத்திரி இலட்சார்ச்சனை
7. தை மாதாந்தரத் தெப்ப உற்சவம்

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைதோறும் அருள்தரும் கோமதி அம்பிகையின் தங்கப்பாவாடை தரிசனம் உண்டு.

மேலும் இத்திருக்கோயிலில் ரூ. 4.5 லட்சம் செலவில் இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. திருப்பணிக்குப் பக்தர்கள் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விரைவில் இத்திருக்கோயிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

இத்திருக்கோயிலில் பத்திர தீபக்கட்டளை என்று ஒரு கட்டளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டளைக்காக அன்பர்களிடமிருந்து வரும் பணத்திலிருந்து கிடைக்கக்கூடிய வட்டியை வைத்து ஒவ்வொரு வருடமும் தை அமாவாசையன்று பத்தாயிரம் தீபங்கள் ஏற்றி வைத்துக் கட்டளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பக்தர்கள் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் குட்டித் திருவாசகம் என வழங்கும் கருவையந்தாதி பாடிய மன்னர் வரதுங்கராம பாண்டியன் வழிபட்ட அருள்மிகு பால்வண்ணநாதசுவாமி திருக்கோயில் இத்திருக்கோயிலின் துணைக் கோயிலாகும். மேற்படி திருக்கோயில் சங்கரன்கோவிலில் இருந்து வடக்கே இராஜபாளையம் ரோட்டில் சுமார் 8 மைல் தொலைவில் உள்ளதாகும். மேற்படி கரிவலம்வந்த நல்லூர் திருக்கோயிலில் 1—7—74-ல் திருக்குட நீராட்டு விழா சிறப்பாக நடந்துள்ளது. இது பாண்டி பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அபூர்வமான இத்திருக்கோயிலுக்கு அன்பர்கள் ஒரு முறையாவது வந்து வழிபட்டு அருள்பெற வேண்டுகிறோம்.

**திரு. பூ. உள்ளமுடையார்துரை,**
தலைவர், அறங்காவலர் குழு.

**ஈ. பிச்சையா, பி.ஏ.,**
நிர்வாக அதிகாரி.

கி. வெங்கட்ராமன்; திருமதி அரு. குருவம்மாள்; திரு க. பழனிச்சாமி—அறங்காவலர்கள்

**சமயக் கடமைகள் :**

பெரும்பாலான சமயங்கள், தமக்கென்று கோயில்கள் (Temples, Vihars, Churches, Mosques) உடையனவாக இருக்கின்றன. அவற்றில், அவ்வச் சமயங்களின் இயல்புகளுக்கும், கொள் கைகளுக்கும் ஏற்ற பெற்றி, ஏதோ ஒரு வகை யில் உருவங்கள் அல்லது அடையாளங்கள் (Images, Idols, Icons, Symbols) வைத்து வழிபடப் பெறுகின்றன. இவைகள் எங்ஙனம் இருப்பி னும், கடவுளைத் துதித்தல்—புகழ்தல்—போற் றுதல்—பிரார்த்தித்தல் (Litany, Prayer, Songs, Hymns, Psalms) என்பனவற்றை, எல்லாச் சமயங் களும் ஒரு முகமாக வற்புறுத்தி அறிவுறுத்து கின்றன.

கோயிலுக்குச் செல்லுதல், உருவ வழி பாடு புரிதல், இறைவனைப் புகழ்ந்து போற்றித் துதித்தல் என்பன மூன்றும், சமயக் கடமை களாக அமைந்து, நமக்கு நம் வாழ்க்கையிற் பல்வகை நலங்களைப் பயக்கின்றன. இவை களால் நமக்கு விளையும் நலங்களுக்கு ஓர் எல்லையே இல்லை.

ஆனால் ஒரு சிலர் இவற்றைப் பயனில என்று இகழ்ந்து ஏளனம் செய்வதுண்டு. கடவுள் கோயிலில்தான் இருக்கின்றாரா? கடவுளுக்கு உருவம் உண்டா? கடவுளைப் புகழ்ந்து போற்ற வேண்டுமா? அவர் என்ன புகழ்ச்சிப் பிரியரா? நாம் அவர்தம் எல்லையற்ற புகழை அளந்து ஆய்ந்து விட முடியுமா? என்றெல்லாம் வினவி, இம் மூன்றையுமே இகழ்ந்துரைத்து ஒரு சிலர் மறுத்து விடுவர்.

**சங்கரர் :**

ஆயினும், இந்தியப் பெருந் தத்துவ ஞானி களுள் தலைசிறந்த ஒருவராகிய சங்கரர் (கி.பி. 788—820), அவர்தம் கூற்றுக்களை ஏற்றுப் போற்றி உடன்படுவது போல, இம் மூன்றும் நம் வாழ்க்கைக்கு எத்துணை இன்றியமையாதன, நலம் பயப்பன என்பதனைக் குறிப்பிற் புலப் படுத்தியருள்கின்றார்.

''எல்லாம் வல்ல இறைவனே! யான் செய்யும் மூன்று பிழைகளைப் பொறுத்தருள்க. உருவமில்லாத உன்னைத் தியானிக்கும்பொழுது, யான் உனக்கு உருவம் கொடுத்து, உடையுடுத்தி விடுகின்றேன். சொல்லின் எல்லை கடந்து நிற்கும் உன்னை, யான் சொல்லுக்கு உட்படுத்திப் புகழ்ந்துரைக்கின்றேன். அங்கு இங்கு எனுதபடி எங்கும் பரவி விரவியுள்ள உன் சிறப்பியல் பினைப் புறக்கணித்துவிட்டு, உன்னைக் கோயில்களுக்குச் சென்று தேடிக் காண முயல்கின்றேன். இறைவனே! என்னுடைய இம்மூன்று பிழைகளையும் பொறுத் தருள்க''.

என்று சங்கரர் இறைவனை மன்றாடி வேண்டிக் கொள்கின்றார்.

**இருவகை இயல்புகள் :**

எந்த ஒரு பொருளுக்கும் சிறப்பியல்பு (சொரூப லட்சணம்), பொதுவியல்பு (தடத்த லட்சணம்) என இருவகை இயல்புகள் உண்டு. அம்முறையில் கடவுளுக்கும் இருவகை இயல்பு கள் உண்டு. கடவுள் உருவமற்றவர், சொற் களைக் கடந்தவர், எங்கும் நீக்கமற நிறைந்து வியாபித்திருப்பவர் என்பது கடவுளுக்குரிய சொரூப லட்சணம்.

அங்ஙனம் உருவமற்ற கடவுளே, உயிர்களை உய்வித்தற்பொருட்டு உருவங்களை மேற்கொள் கின்றார். சொல்லின் எல்லை கடந்து நிற்கும் கடவுளே, பக்தர்களின் பக்தி வலையிற் பட்டுச் சொல்லின் வரையறைகளுக்கு உட்படு கின்றார். எங்கும் வியாபித்துள்ள அவரே, அடியவர்களுக்கு அருள் புரிதற் பொருட்டுத் ''திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனிதன்னைச் சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே'' என்றபடி, திருக்கோயில்களுக்குள் தன் வியாபகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு எழுந்தருளி விளங்குகின்றார்.

ஆதலின் கடவுளை உருவங்களில் அமைத்து வழிபடுதலும், சொற்களினுற் புனைந்து புகழ்ந்து பாடுதலும், அவருக்குத் திருக்கோயில்கள் எழுப்பிச் சிறப்பொடு பூசனைகள் செய்தலும் முறையேயாகும். கடவுளைச் சிறப்பியல்பு (சொரூப லட்சணம்) பற்றியும், பொதுவியல்பு (தடத்த லட்சணம்) பற்றியும், அவரவர் மனப் போக்குக்கும், பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப வழிபடலாம். அதில் தவறு ஏதும் இல்லை.

**முடிவுரை :**

ஆதலின் ஒருவகையிற் பிழைகள் போல, இவைகள் மூன்றும் தோன்றுமாயினும், இவை தவிர்க்க முடியாதவை; மனிதர்களாகிய நமக்கு இவைகள் மிகவும் இன்றியமையாதவை : பெரும் பயன் அளிப்பவை என்பதனை, மிகவும் வற்புறுத்திக் குறிப்பினுல் அறிவுறுத்தியருள் கின்றார் ஆதி சங்கரர்! அவர் வற்புறுத்தி அறிவுறுத்தியருளியுள்ள நெறியின்படி, கோயிலுக்குச் சென்றும், தெய்வத் திருவுருவ வழிபாடு புரிந்தும், இறைவனைப் புகழ்ந்து துதித்தும், நாம் வையத்து வாழ்வாங்குவாழ்ந்து உய்ய முயல்வோமாக!

''மூன்று பிழைகள் புரிகின்றேன்,
முதல்வா என்னைப் பொறுத்தருள்க!
தோன்றும் உருவம் இலாதநின்னை,
உருவின் வைத்துத் தொழுகின்றேன்!
ஏன்றிங் கியம்ப வொணுதநின்னை,
எளியேன் புகழ முயல்கின்றேன்!
சான்றாய் எங்கும் பரந்தநின்னைக்
கோயில் சார்ந்து தடவுகின்றேன்!

—தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்

# அயோத்தி மாநகரம்

தமிழ்விரகன்

கோசல தேசத்தின் மாசிலா வளங்களையும் மாட்சிமைகளையும் புகழ்ந்து போற்றி விளக்கிப் பாடிய கவியரசராகிய கம்பர், அந்நாட்டின் அரும் பெரும் தலைநகராகிய அயோத்தி மா நகரின் பலதிறச் சிறப்புக்களையும் பாங்குற எடுத்து, அடுத்துப் பாடி விளக்க முற்படுகின்றார்.

கவிஞர்கள் என்போர் சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் நிரந்து இனிது எடுத்துப் பாடும் ஆற்றல் பெற்றவராவர். சிறந்த கவிஞர்கள் கையாளும் சொற்கள் செவ்வியனவாய், இனிமை மிக்கனவாய், நல்ல பொருள்களை உணர்த்த வல்லனவாய், சீரிய கூரிய இயல்புகள் வாய்ந்தனவாய் விளங்கும். இத்தகைய வித்தகச் சொற்களைத் திறம் தெரிந்து கையாள வல்ல உத்தமக் கவிஞர்களும், வான்மீகி வசிட்டர் போதாயனர் முதலிய வடநூல் வல்ல முனிவர்களும், புகழ்ந்துபோற்றிய அரும்பெருஞ் சிறப்புகள் வாய்ந்தது, அயோத்தி மாநகரம்.

செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளில்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர் அனைவரும், வடநூல்
முனிவரும் புகழ்ந்தது; வரம்பில்
எவ்வுலகத்தோர் யாவரும் தவஞ் செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ்வுல கத்தோர், இழிவதற்கு அருத்தி
புரிகின்றது அயோத்திமா நகரம்

உலகத்திலுள்ள மக்கள் அனைவரும், நல்ல பல பெருந் தவங்கள் புரிந்து, உயரிய வானுலகத்திற்குச் செல்லுதற்கு விரும்புவர். அங்ஙனம் எல்லோரும் அடைய விரும்பும் உயர்ந்த வானுலகத்தில் உள்ளவர்களும், அவ்வுலகத்தை விட்டு எவ்வகையிலேனும் நாம் அயோத்தி நகரத்தை அடைந்து, அந்நகரில் வாழும் பேறு பெற மாட்டோமா என்று, தமது மேல் உலகத்தினின்று கீழே இழிந்து வந்து அடைய விரும்புகின்ற பெருஞ் சிறப்புப் பெற்றது, அயோத்தி மாநகரம்!

(2) அயோத்தி மாநகரின் சிறப்பும் பெருமையும் அளவிடற்கரியன. அது, நிலமகளுக்கு முகம் போலவும், அம்முகத்தின்கண் அணியப் பெறும் அழகிய திலகம் போலவும், அந்நிலமகளின் அழகிய கவர்ச்சி மிக்க கண்கள் போலவும், நிலமகளின் நிறைந்த நீண்ட மங்கல நாண்போலவும், அவளது மார்பில் திகழும் நவமணி மாலைகள் போலவும், அவளது அரும் பெறல் உயிர் பொருந்தியிருக்கும் இடம் போலவும், பலவகைகளில் அழகுற்றுப் பொலிந்து விளங்குகின்றது. செல்வச் செழிப்பு மிக்குத் திகழ்வதனால், திருமகள் வீற்றிருக்கின்ற தாமரை மலர் போலவும்; எல்லாப் பொருள் வளங்களும் தன்பால் நிறையப் பெற்றிருப்பதனால், திருமாலின் திருமார்பில் உள்ள கவுத்துவம் போன்ற கவின்மிக்க மணித் திரள்கள் பலவும், தொகுத்து வைக்கப்பட்டுள்ள பொற்பேழை போலவும்; தேவர் உலகத்திற்கும் மேற்பட்டுச் சிறந்த தெய்விக உலகம் போலவும்; ஊழி முடிவில் எல்லா உலகுகளும் உயிர்களும் ஒடுங்கி வாழ்கின்ற உறையுள் போலவும்; அயோத்தி மாநகரம் தனிப் பெருஞ் சிறப்பு அமைந்ததாக விளங்குகின்றது. அதனை இத்தகையதென்று, ஓர் உவமை கூறி விளக்குவது என்பது, எவராலுமே இயலாத செயலாகும்.

நிலமகள் முகமோ? திலகமோ? கண்ணோ?
நிறைநெடு மங்கல நாணோ?
இலகுபூண் முலைமேல் ஆரமோ? உயிரின்
இருக்கையோ? திருமகட்கு இனிய
மலர்கொலோ? மாயோன் மார்பில் நன்மணிகள்
வைத்தபொற் பெட்டியோ? வானோர்
உலகின்மேல் உலகோ? ஊழியின் இறுதி
உறையுளோ? யாதென உரைப்பாம்!

(3) உமாதேவியை ஒரு பாகம் கொண்ட சிவபெருமானும், சீதேவி பூதேவி என்னும் தேவியர் இருவருக்கும் கொழுநனாகிய திருமாலும், அவர்தம் உந்திக் கமலத்தில் தோன்றிய பொறுமைக் குணம் மிக்க பிரமதேவனும், ஆகிய மும்மூர்த்திகளும் கூட, அயோத்தி மாநகருக்குச் சமமான ஒரு நகரத்தை எங்கும் கண்டிலர். அதனைக் காண வேண்டும் என்னும் அளவிலாப் பெரு விருப்பத்தினாலேயே, வானத்தில் சூரியனும், சந்திரனும் தம்கண்களை இமைக்காமலும், இடைவிடாமலும் சுழன்று சுழன்று அலைந்து திரிந்து வருகின்றனர். இதுவல்லாமல், அவர்கள் அங்ஙனம் சுழன்று அலைந்து திரிந்து வருவதற்கு, வேறு காரணம் யாது இருக்க முடியும்?

(4) பிரம தேவன் இந்த அயோத்தி மாநகரத்தைப் படைத்தற்காகவே, தேவேந்திரனது அமராவதி நகரையும், குபேரனது அளகாபுரி நகரையும், முதற்கண் படைத்துப் பயிற்சி செய்து கொண்டான். அதனாற் பெற்ற பயிற்சியின் முதிர்ச்சியினாலேயே, பின்னர் அயோத்தி

மாநகரினைப் பெரிதும் முயன்று படைத்தான். மயன் முதலிய தெய்வத் தச்சர்களும் கூட, இந்நகரத்தினைக் கண்டு களித்து வியந்து மயங்குவர்; அதனால் தத்தம் சிற்பத் தொழிற்றிறனையும் மறந்தொழிந்தனர். என்றால், வானளாவ உயர்ந்து மேகங்களைத் தொடுகின்ற நெடுநிலை மாடங்களை உடைய அயோத்தி மாநகரின் அளப்பருஞ் சிறப்பை, அளவிட்டு உரைத்தல் எவர்க்கு இயலும்?

(5) புண்ணியம் புரிந்தவர்கள், மறுமையிற்போய் அடைந்து வாழ்வது சுவர்க்க உலகம் என்று, வேதங்கள் கூறும். அதன்படி, உலகில் சிறந்த அறத்தையும், தவத்தையும் புரிந்தவன் ஆகிய இராமபிரான், அச்சுவர்க்க உலகத்திலேயே சென்றிருந்து வாழ்ந்திருத்தல் வேண்டும். ஆனால் அவனோ இந்நகரில் எழுந்தருளியிருந்து, ஏழுலகங்களையும் ஒரு சேர ஆட்சி செலுத்தி வாழ்ந்தருளினன், என்றால், இத்தகைய அயோத்தி மாநகரத்தைக் காட்டிலும் சிறந்த இன்பியற் பெருநகரம், வேறொன்று இருத்தல் இயலுமோ?

(6) அருளும் அறனுமே துணையாகக் கொண்டு, ஐம்பொறிகளாகிய பகைவர்களை அடக்கியாண்டு, மாதவமும் ஞானமும் வாய்க்கப் பெற்ற பெருமக்கள் யாவர்க்கும், புகலிடமாகத் திகழும் செங்கண்மாலாகிய இராமபிரான் பிறந்தருளியதும், நீடுழி காலம் நிலைபெற்றுத் திருமகளாகிய சீதைப் பிராட்டியுடன் சேர்ந்து வாழ்ந்து வீற்றிருந்தருளியதும், இவ்வயோத்தி மாநகரமே என்றால், இதற்கு இணையான எழில் மிக்க நகரம், தேவர்களின் பொன்னுலகத்திலும் இருத்தல் இயலுமோ?

தங்குபே ரருளும் தருமமும் துணையாத்,
தம்பகைப் புலன்கள்ஐந்து அவிக்கும்
பொங்குமா தவமும், ஞானமும் உணர்ந்தோர்
யாவர்க்கும், புகலிடம் ஆன
செங்கண்மால் பிறந்தாண்டு, அளப்பரும் காலம்
திருவின்வீற் றிருந்தனன் என்றால்,
அங்கண்மா ஞாலத்து இந்நகர் ஒக்கும்
பொன்நகர், அமரர்நாட்டு யாதோ?

(7) அயோத்திமா நகரில், எல்லா நகரத்து அரசர்களும் வந்து குழுமி வாழ்கின்றனர். அங்கே சிறந்த அணிகலன்களும், மணித் திரள்களும் திரண்டு குவிந்துள்ளன. யானை குதிரை தேர் முதலியனவெல்லாம் அங்குக் குறைவற நிரம்பியுள்ளன. தேவர் முனிவர் இயக்கர் விஞ்சையர் முதலிய விண்ணுலகத்தோரும் அங்கு வந்து திரண்டு வாழ்வர் என்றால், அதன் பெருமையை எவராற் கூற இயலும்? அதற்கும் உவமையொன்று உண்டோ?

(8) அயோத்தி மாநகரம் நாற்புறமும் மதில்களால் சூழப் பெற்றது. சிற்ப நூல்களின் விதிப்படி அம்மதில்கள் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றின் உயரமும், திண்மையும், அளவிடற்கரியன. மிகப் பெரிய மலைகளும் அவற்றிற்கிணையாவன அல்ல. அவற்றிற்கு ஓர் உவமை கூற வேண்டுமாயின், நூல்களின் அளவு எவ்வளவோ அவ்வளவு வரையில் சென்று அந்நூல்களோடு பயனுறப் பழகி, நுட்பமும் திட்பமும் மிக்க, புலவர் பெருமக்களின் சீரிய கூரிய பேரறிவையே உவமையாகச் சொல்லலாம். அம்மதில்கள் உயர்ந்த பொருள்கள் எல்லாவற்றிற்கும் மிக மேலான உயர்ச்சியும், உறுதியும் உடையனவாகும்.

(9) அம்மதில்களின் உயரமும் வலிமையும், முடிவு காண முடியாத தன்மை உடையன. ஆதலின் அவைகள் வேதங்களை ஒக்கும். மிகவும் உயர்ந்தோங்கி மேல் உலகத்தில் புகுவதனால், அம்மதில்கள் தேவர்களுக்குச் சமமாகும். தம்மிடம் வலிமை வாய்ந்த திண்ணிய பொறிகள் பலவற்றை அடக்கியாண்டு கொண்டிருக்கும் திறனால், அவைகள் முனிவர்களைப் போல விளங்கும். நகரையும், நகரில் உள்ள மக்களையும், காவல் புரியும் தன்மையினால், கலைமானை ஊர்தியாகக் கொண்ட கொற்றவை (துர்க்கை) என்னும் தேவியைப் போலத் திகழும். இடிதாங்கியாகிய சூலத்தை ஏந்திக் கொண்டிருத்தலால் காளி தேவியைப் போலும். எவராலும் நெருங்க முடியாத பெருந்தகவினால், இறைவனைப் போன்று விளங்கும். அயோத்தி மாநகரின் அழித்தற்கரிய பெருமதில்களின் விழுப்பமும், மாட்சியும் விளம்புதற்கரியன.

''மேவரும் உணாவின் முடிவிலா மையினால்
வேதமும் ஒக்கும்; விண்புகலால்
தேவரும் ஒக்கும்; முனிவரும் ஒக்கும்
திண்பொறி அடக்கிய செயலால்;
காவலிற் கலையூர் கன்னியை ஒக்கும்;
சூலத்தால் காளியை ஒக்கும்;
யாவையும் ஒக்கும் பெருமையால்; எய்தற்கு
அருமையால் ஈசனை ஒக்கும்.''

(10) அயோத்தி நகரில் அழகிய சிறந்த மகளிர் நிறைந்து வாழ்கின்றனர். அவர்கள் செம்பஞ்சுக் குழம்பு கொண்டு தமது வெண்மை நிறமுள்ள கால்நகங்களை அழகு செய்து கொள்கின்றனர். அக்காட்சி வெண் திங்கள் பலவற்றைச் செந்நிறம் ஊட்டி வரிசையாக அழகுற வைத்ததுபோல் திகழ்கின்றது. தாமரை மலர் போன்ற பாதங்களையும், வஞ்சிக்கொடி போன்ற இடையினையும், குரும்பை போன்ற கொங்கைகளையும், வேய் போன்று மெல்லிய பருத்த தோள்களையும், அழகிய சொற்களையும் உடைய மகளிர் நிறைந்து வாழ்வது அயோத்தி மாநகரம். இத்தகைய அயோத்தி மாநகரம் போல அழகுடையதோ என்று, தேவர் உலகத்தைக் காண்பதற்கு மேலோங்கி எழுந்து உயர்ந்தனவாய் மதில்கள் நிற்கின்றன.

(11) அயோத்தி நகரத்து மதில்களின் அமைப்பினை அங்கு வாழும் சூரிய குலத்துத் தலைவர்களின் இயலும் செயலும் ஆகியவற்றோடு ஒப்பிட்டு, இரு பொருள்படும் சிலேடை என்னும் அணிநலம் அமையப் பின்வருமாறு பாடுகின்றார் கவியரசர் ஆகிய கம்பர். செங்கோலினால் உலக மக்கள் அனைவரையும் பாது

காப்பதனாலும், பகையரசரது முடியணிந்த தலைகளை அழிப்பதினாலும், மனுவினது நூல் நெறியின்படியே நடப்பதனாலும், எவரும் உற்றுப் பார்த்தற்கும் அரிய நிலையில் காக்கப் படுவதனாலும், வலிமையினாலும், வில் வாள் வேல் முதலிய படைக் கருவிகளைப் பயிற்றுவிப்பதினாலும், அரிய சூழ்ச்சித் திறங்களை உடைமையினாலும், எவராலும் வெல்லுதற்கரிய வெற்றியினாலும், சிறப்பு மிக்க உயர்ச்சியினாலும், ஆட்சியாகிய சக்கரத்தைச் செலுத்தி நடத்தும் தன்மையினாலும், அயோத்தி நகரத்தின் மதில்கள், அங்கு உள்ள பெரும் தலைவர்களை ஒத்திருக்கின்றன.

*(12)* இத்தகைய மதில்களைச் சுற்றி அகழி அமைந்துள்ளது. அத்தன்மை, மிகப் பெரிய சக்கரவாள கிரியைப் பெரும் புறக் கடல் சூழ்ந்திருத்தல் போன்றுள்ளது. அவ்வகழியானது மிகவும் ஆழ்ந்து கீழே சென்றிருக்கும் தன்மையினால், இழிந்த பொன்விலை மகளிரின் மனம் போல உள்ளது. அதன்கண் உள்ள நீர், தெளிவு இன்றிக் கலங்கியிருக்கும் தன்மை, கல்வியறிவும், கற்பனைத் திறனும் இல்லாத அறிவிலிகள் பாடும் புல்லிய கவிகளைப் போல உள்ளது. அஃது, எவரும் அணுகுதற்கு இயலாத காவல் உடைமையால், கன்னிப் பெண்கள் தங்கும் அந்தப்புரம்போல விளங்குகின்றது. அதன்கண் ஏராளமான கொடிய முதலைகள் உள்ளன. அம்முதலைகள் மக்களை நன்னெறியில் ஒழுகவொட்டாமல் விலக்கித், தீயனவற்றில் செலுத்துகின்ற ஐம்பொறிகளைப் போன்ற கொடுமையும் வலிமையும் உடையனவாகத் திகழ்கின்றன.

அன்னமா மதிலுக்கு ஆழிமால் வரையை
அலைகடல் சூழ்ந்தென, அகழி
பொன்விலை மகளிர் மனம்எனக் கீழ்ப்போய்,
புன்கவியெனத் தெளிவின்றிக்
கன்னியர் அல்கும் தடமென யார்க்கும்
படிவரும் காப்பினது ஆகி,
நன்னெறி விலக்கும் பொறியென, எறியும்
கராத்தது, நவிலலுற் றதுநாம்.

*(13)* இத்தகைய ஆழமான அகழியைக் கண்டு மேகங்கள், அதனைக் கடலென்று மயங்கின. அதனால் அதன்கண் படிந்து நீரை முகந்து கொண்டன. பின்னர் அவ்வகழியை அடுத்தாற் போன்றுள்ள மதில்களை மலையெனப் பிறழ உணர்ந்து மயங்கின. அதனால் அவற்றின் மீது ஏறித் தங்கித், தமது சூல் முதிர்ந்து, மழை நீரைப் பொழிந்தன.

*(14)* அயோத்தி நகரின் மதில்களைச் சூழ்ந்திருக்கும் அகழியில், தாமரை மலர்கள் அடர்ந்து வளர்ந்துள்ள தன்மை, அந்நகரில் வாழும் பெண்களின் முக அழகிற்கு முன்னே நிற்க மாட்டாமல், தோற்று ஓடிப்போன தாமரை மலர்களெல்லாம், மீளவும் ஒருங்கு திரண்டு வந்து, தமது முழு வலிமை கொண்டு அப்பெண்களின் முகங்களோடு போர் புரியக் கருதி, அந்நகரின் மதில்களை முற்றுகை செய்தாற்போலக் காணப்படுகின்றது.

*(15)* அவ்வகழியின்கண் வாழும் அன்னப் பறவைகள், அரசர்க்குரிய வெண் கொற்றக் குடைகளைப் போலவும்; முதலைகள் யானைகளைப் போலவும்; தாமரை மலர்களையுடைய நீர் அலைகள், அசைந்து ஆடுகின்ற பிடரியினையுடைய குதிரைகளைப் போலவும்; மீன்கள் வாளும் வேலும் போலவும் தோன்றுகின்றன. ஆதலின் அவ்வகழியானது, அரசர்க்குரிய நால்வகைப் படைகளின் காட்சியைப் போலத் திகழ்கின்றது.

*(16)* அந்நகரின் நான்கு கோபுர வாயில்களும், நான்கு திசைகளிலும் உள்ள யானைகள் போல, நேராக நிலைத்து நிற்கும். திருமால் முன்பு திரிவிக்கிரம அவதாரம் எடுத்தபோது, உலகை அளந்த திருவடியைக் காட்டிலும், மிக மேலாக உயர்ந்து நின்ற அக்கோபுர வாயில்கள் நான்கும், மக்கள் தத்தம் ஒழுக்க நெறி தவறாதபடி நடப்பதற்கு நல்லனவற்றை அறிவுறுத்தும் நான்கு வேதங்களைப் போன்றன.

*(17)* அக்கோபுர வாயில்களில், அழகிய பல ஓவியங்கள் தீட்டப் பெற்றுள்ளன. அவ்வோவியங்கள், உயிருடையனபோலவேதோன்றுகின்றன. ஆதலின் அதன்கண் வரையப்பட்டு இருந்த ஒரு பெண்புறாவைக் கண்டு, ஓர் ஆண் புறாவானது தனது பெடை என்றே பிறழ்ந்துணரும். அதனால் தனது உண்மையான பெண் புறாவானது, தனது புணர்ச்சி விருப்பம் தோன்றப் பலமுறை கூவியழைக்கவும், அவ்வொலியைக் கேட்கப் பெறாமல், அவ்வோவியத்தின் அருகிலேயே ஆண்புறா மயங்கி மருண்டு நிற்கும். அது கண்ட பெண் புறா, தன் கணவனாகிய ஆண் புறாவுடன் ஊடல் கொண்டு, கோபுர வாயிலின் உயர்ச்சியினால் அண்மையதாகத் தோன்றும் தேவலோகத்துக் கற்பக மரச் சோலையின்கண் பறந்து சென்று தங்கி, மறைந்து கொள்ளும்.

*(18)* அயோத்தி நகரின் மாட மாளிகைகள், தாமரை வடிவாக அமைந்த தூண்களின் அடிப்பகுதிகளைக் கொண்டன; தமது அடிப்படையின் ஆழத்தால் நாக உலகத்தினைச் சேர்ந்துள்ளன ; வேலைத் திறத்தால் செப்பம் உள்ளன ; யாவரும் விரும்பிக் காணும் உள் வேலைப்பாடுகள் அமைந்தன; நடுவிடமெல்லாம் தூய வெளியாக உள்ளன; பொன் ஒளி போலும் தோற்றத்தை உடையன; அதனால் அம்மாளிகைகள் ஒரு வகையில் அழகிய விலைமகளிரைப் போலும்! எவ்வாறெனில், விலைமகளிரின் காலடிகள் பாடகம் அணிந்திருக்கும் ; தாமரை போல அழகியதாகச் சிவந்திருக்கும். சேடர் என்னும் இளம் பருவக் காளையரை அவர்கள் சேர்ந்திருப்பர்; அவர்களின் வாய் சிவந்து இருக்கும். அம்மகளிர் நாடகமாடும் தொழிலினராக விளங்குவர். அவர்களின் அழகிய இடை நுண்மையும், மென்மையும் பெற்

திருக்கும். அவர்கள் மேனி பொன்னின் நிறமும், ஒளியும் பெற்று விளங்கும்.

பாடகக் காலடி பதுமத்து ஒப்பன;
சேடரைத் தழீஇயின; செய்ய வாயின;
நாடகத் தொழிலின; நடுவு துய்யன;
ஆடகத் தோற்றத்த மகளிர் போன்றன.

(19) இம்மாளிகையின் உள்ளே புகுந்தவர்கள், அவற்றின் அழகையும் வேலைப்பாட்டையும் கண்டு மகிழும் பெரு வியப்பினால், தம் கண்களை இமைக்காமல், அகல விரித்து விழித்து நோக்கி வியந்து நிற்பர். மேலும் அப்பொன் மாளிகைகளின் ஒளி, தம்மீது வீசுவதனால், ஒளிமயமான பொன்னிற மிக்க மேனியராய் விளங்கப் பெறுவர். அதனால் அம்மாளிகைகளினுள் நுழைந்தவர் மனிதராய் இருப்பினும், தேவர்களைப் போல் தோற்றம் மாறி நிற்பர். அம்மாளிகைகளோ, தேவர் உலகத்துத் தெய்விக விமானங்களைப் போலத் திகழும்.

(20) அங்கே அணியிழை மகளிரும், அலங்கல் வீரரும் ஒருவரை யொருவர்எதிர்ந்து, தலைப்பட்டுத் தமது தாபம் தணியப் பெறுவர். அங்கு வாழ்வோர் அறநெறியினின்று சிறிதும் பிறழார். மாளிகைகள் எல்லாம் மண், சுண்ணம் முதலியவற்றால் அமையாமல், பொன்னாலும் மணியாலுமே அமைந்தனவாகும். அவைகள் தமது ஒளியின் மிகுதியால் சூரியனையும் வெல்லும் மேம்பாடு உடையனவாகும். மேலும் அவைகள் வானளாவி உயர்ந்தவை ; வரம்பு இல்லாத செல்வங்களை உடையவை. ஒப்புயர்வற்ற புகழ் வாய்ந்தவை ; என்றும் குன்றாத ஒளி மிகுந்தவை ; குற்றமற்ற அறநெறியில், அரசனைப் போலப் பெருஞ் சிறப்புடனும், செல்வத்துடனும் வாழ்கின்ற எண்ணில்லாத மக்களை உடையவை.

21. அயோத்தியில் வாழும் மகளிரின் உடம்பு, சுடர்விளக்கு எனச் சொல்லும்படி, ஒளிநலம் மிக்கு விளங்கும். அதனால், அவர்தம் பழுதற்ற அழகிய மேனியைப் பார்ப்பதற்குரிய ஆசையினாலே போலும், எழுது சித்திரங்களும் அங்கே கண்ணிமைக்காமல் நிற்கும். அங்கே இருளைப் போக்குவன நெய் விளக்குகளோ, மணி விளக்குகளோ அல்ல; மகளிரின் மேனியேயாகும். மத்தள ஒலிக்கும், தாளத்திற்கும், பாட்டுக்கும் பொருத்தமாகப், பரத நாட்டிய நூலின்படி, ஆடல் பாடல் அழகு என்னும் மூன்றும் அமைந்த மதங்கியர் என்னும் இளம் பெண்கள், தம் கால்களால் சதி பிழையாமல் அடி வைத்து நடனம் செய்வார்கள். அதனை அவர்தம் காற்சதங்கைகளும், குதிரைகளின் கால்களும், பிறருக்கு விவரித்துக் காட்டும்.

'' பதங்களில் தண்ணுமை பாணி பண்ணுற,
விதங்களின் விதிமுறை சதி மிதிப்பவர்,
மதங்கியர் ; அச்சதி வகுத்துக் காட்டுவ,
சதங்கைகள் அல்லன, புரவித் தாள்களே ''

22. அயோத்தியில் யானைகளின் மதநீர், வேங்கைமலர்போல வாசனை வீசும். குல மகளிரின் இதழ்கள் குமுத மலர் போல மணம் கமழும். அவர்தம் அணிகலன்களில், அளவிடற்கரிய ஒளிக் கதிர்கள் தோன்றும் ; கூந்தல்களில் மலர்களின் நறுமணம் மிக்குத்திகழும். இங்கு உள்ள ஆவணம் என்னும் கடைவீதிகளைக் கண்டபின், அமராவதி என்னும் இந்திரனின் நகரும், அளகாபுரி என்னும் குபேரனின் நகரும், அயோத்தி நகர்க்குத் தோற்றொழிந்தன.

''மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம்,
அன்னமென் நடையவர் ஆடும் மண்டபம்,
உன்னரும் அருமறை ஓதும் மண்டபம்,
பன்னரும் கலைதெரி பட்டி மண்டபம்''

ஆகிய பற்பல அழகிய மண்டபங்கள், அயோத்திமா நகரில் யாங்கணும் அழகுற அமைந்து நிறைந்து கிடக்கும்.

23. மேகங்களும் கடல்களும் அஞ்சும்படி, நாள்தோறும் விழாமுரசு மணமுரசு கொடைமுரசு படைமுரசு என்னும் பலவகை முரச வாத்தியங்கள், அங்கே இடையறாது ஒலித்துக் கொண்டே இருக்கும். அத்தகைய அந்நகரில், களவு புரிவார் எவரும் இல்லாமையினால், காவல் புரிபவர்கள் எவரும் இலர் ; வாங்கிக் கொள்ளும் வறியவர்கள் எவரும் இல்லாமையினால், பிறருக்குக் கொடை வழங்குகின்ற செல்வர்களும் இலர். அங்கே எல்லோரும் எல்லாச் செல்வமும் எய்தப் பெற்றிருப்பதனால், வறியவர்கள் என்றோ, செல்வர்கள் என்றோ அங்கே தனியாக ஒருவரும் இல்லை.

'' கள்வார் இலாமைப் பொருட்
காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக்
கொடுப்பார்களும் இல்லை மாதோ'' (1)

'' எல்லாரும் எல்லாப் பெருஞ்
செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை; உடையார்களும்
இல்லை மாதோ'' (2)

24. கல்வி என்னும் விதையானது முளைத்து, அளவற்ற ஆராய்ச்சிகள் ஆகிய கிளைகளை வளரவிட்டு, அரிய தவங்கள் ஆகிய இலைகளைத் தழைத்து, அன்பு ஆகிய முகிழ் அரும்பி, தருமம் ஆகிய பூ மலர்ந்து, போக நுகர்ச்சியாகிய இனிய பழத்தினை நல்குதல்போல, அயோத்தி மாநகரும் கல்வி கேள்விகளுக்குத் தான் இருப்பிடமாகி, அக் கல்வி கேள்விகளில் வல்லவர்கள் தவம் அன்பு தருமம் இன்பம் ஆகியவற்றைப் பெறுவதற்கு ஏற்ற இடனாகச் சிறந்து திகழ்ந்து ஓங்கி விளங்குகின்றது.

''ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்து
எண்ணில் கேள்வி
ஆகும் முதற்றிண் பணைபோக்கி,
அரும் தவத்தின்

சாகம் தழைத்து, அன்பு அரும்பித்
தருமம் மலர்ந்து
போகம் கனி ஒன்று பழுத்தது
போலும் அன்றே''

அயோத்திமா நகரின் சிறப்பை விளக்குவதற்கு, கல்வியினை உவமையாகக் காட்டி, நம்மனோர்க்குக் கல்வியானது தவம் அன்பு தருமம் இன்பம் ஆகியவற்றை ஒருசேர நல்கும், என்று கவியரசர் ஆகிய கம்பர் பாடியிருக்கும் திறன், மிகவும் சுவை வாய்ந்ததாகும். கல்வியின் சிறப்பினை விளக்குதற்குக் கம்பரின் இக்கவியினை, அறிஞர்கள் அடிக்கடி எடுத்துக் கையாளுவர். கம்பரின் கவிமணிகளுள் இப்பாட்டிலும் தலை சிறந்த தொன்றாகும்.

**முடிவுரை :**

கம்பர் தமிழ் நாட்டில் பிறந்தவர். தமிழ் நாட்டிலேயே வாழ்ந்தவர். தமிழ் நலஞ்சான்றவர். தமிழ் உளமும் வளமும் வாய்ந்தவர். தமிழிற் பெரும் பற்று மிக்கவர். தமக்கு முன்னிருந்த பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள், இயற்றியருளிய தமிழ் இலக்கியங்களையெல்லாம் நன்கு கற்றுத் தேர்ந்தவர். ஆதலின், கோசல நாட்டிலுள்ள அயோத்திமா நகரத்தினைப் புகழ்ந்து போற்றிப் பாட முற்பட்ட போதும், தமது தமிழ்ப் புலமையின் மாட்சியினால் தமிழ் நாட்டின் நகரங்களில் தாம் கண்டுணர்ந்து மகிழ்ந்து வியந்த செல்வச் செழிப்பு, பண்பாட்டுச் சிறப்பு, கலைநலச் சிறப்பு, மக்களின் நாகரிக வாழ்க்கை நலச் சிறப்பு ஆகியவற்றையே அவர் அயோத்தி மாநகரின் மீது ஏற்றிப் புனைந்துரைத்துப் பாடியுள்ளார். இவ்வாற்றால் கம்பரின் கவிதை உள்ளம், நம்மனோர் உள்ளத்தையெல்லாம் பெரிதும் கொள்ளை கொண்டு, எல்லையற்ற இன்பத்துள் திளைத்து மகிழும்படி செய்கின்றது.

—ஆசிரியர்.

600 008.
15868



சென்னை சைதாப்பேட்டை அருள்மிகு சௌந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வருகை தந்து, அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ.,பி.எல்., ஐ.ஏ.எஸ்., அவர்கள் முருகன் அறுநாட் பெருவிழாச் சொற்பொழிவுகளைத் தொடங்கி வைத்தல். உடன் இருப்போர் திரு. பண்டித வித்வான் நடேசனர், திரு. அரங்கசாமி ஐயங்கார், திரு. எம். இராமநாத தீட்சிதர், அறங்காவலர்கள் திரு. வே. சிதம்பரம், திரு. மா. நடராசன், திரு. எஸ். முருகேசன், திரு. எம். எஸ். தேவராசன் ஆகியோர்.

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் — காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள். கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும் பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு, வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம் சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட காலணிகள், தோல் பொருட்கள், வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள், இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச் சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள், அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களிலும்

மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!




வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்


# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து!
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் -600034.